janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 மார்ச் 27 - ஏப்ரல் 02 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 51




## முன்னேறுவோம்



நமது கட்சியின் மாநில நிர்வாகக் குழு மற்றும் மாநிலக் குழு கூட்டங்கள் 2022 மார்ச் 17, 18, 19 மற்றும் 20 ஆகிய நான்கு தினங்கள் நாகப்பட்டினத்தில் நடைபெற்றது. >>>

ப 02


## மேலைய மார்க்சியம்



மார்க்சிய அறிவு தமிழகத்தில் பரவத் துவங்கி இன்றைக்கு ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் சென்று விட்டன. மார்க்சியத்தின் அடிப்படை விளக்குவதுதான் பிரதானமான பணியாக இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. >>>

ப 05

## 21ம் நூற்றாண்டு சோசலிசம்



எழுச்சிகளை புரட்சியாகவும் சுரண்டப்படுகிற மற்றும் ஒடுக்கப்படுகிற மக்கள் சிதறலை தடுப்பதற்காகவும் மக்களுக்கான தகுதிவாய்ந்த இயங்கு சக்தியாக இருப்பது அரசியல் கருவி. இன்றைக்கு உலக அரசியலின் வரையறை என்பது தங்களுடைய >>>

ப 03




# மார்ச் 28, 29 நாடு தழுவிய

# பொது வேலை நிறுத்தம்



## பங்கேற்க தமிழ்நாடு மாநிலக்குழு அறைகூவல்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழு மற்றும் மாநிலக் குழுக் கூட்டங்கள் மார்ச் 17, 18, 19, 20 ஆகிய தேதிகளில் நாகபட்டினம் நகரில் உள்ள வி.பி.என்.திருமண அரங்கில் தோழர்கள் எம்.செல்வராசு எம்.பி., கோ.பழனிசாமி முன்னாள் எம்எல்ஏ, எஸ்.சம்மந்தம் (மாவட்டச் செயலாளர்) ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.**

கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆனி ராஜா, மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநிலத் துணைச் செயலாளர்கள் கே.சுப்பராயன் எம்.பி., மு.வீரபாண்டியன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. மகேந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் டி.எம். மூர்த்தி, பி.பத்மாவதி, நா.பெரியசாமி, க. சந்தானம், சட்டமன்ற உறுப்பினர் க. மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 132 பேர் கலந்து கொண்டனர்.

### மாநிலச் செயலாளர் அறிக்கை

கடந்த 2021 செப்டம்பர் 17 முதல் 21 வரையிலும் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் நடந்த பொதுக் குழுக் கூட்டத்திற்கு பின்னர் தமிழ்நாடு அரசியல் நிகழ்ச்சிப் போக்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், பிப்ரவரி மாதம் நடந்து முடிந்த நகர்புற உள் ளாட்சி அமைப்புகளின் தேர்தல் முடிவுகள், மாநில அர சின் அதிகாரத்தில் ஆளுநர் தலையிடும் அத்துமீறல்கள் குறித்த அறிக்கையை மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அறிமுகம் செய்தார்.

மாநிலச் செயலாளர் முன்வைத்த அறிக்கை மீது மாநிலக் குழு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர்.

### தோழர் டி. ராஜா பேச்சு

உக்ரைன் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் செலுத்தி வரும் நிர்பந்தம், ருஷ்யா உக்ரைன் மீது போர் தாக்குதல் நடத்தும் நிலவரம் என சர்வதேச நிகழ்ச்சிப் போக்குகளையும், அண்மையில் நடந்து முடிந்த ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் உண்மைகள், மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரிகள் ஒன்றுபட்டு எதிர் கொள்ள வேண்டிய சவால்கள், கட்சி அமைப்பை வலுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் ஆகியவற்றை கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் டி.ராஜா விளக்கிப் பேசினார்.

### வேலை அறிக்கை

கடந்த 2021 செப்டம்பர் 22 முதல் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள், நடத்திய இயக்கங்கள் குறித்த வேலை அறிக்கையை மாநிலத் துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன் முன்வைத்தார்.

நிறைவாக கீழ் கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

### மார்ச் 28, 29 நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தை வெற்றி பெற செய்க

**இந்தியாவின் 10 மத்திய தொழிற்சங்கங்களும், வங்கி, காப்பீடு, பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகள் உள்ளிட்ட துறை வாரி பணியாளர் சங்கங்களும் இணைந்து, வரும் மார்ச் 28, 29 ஆகிய தேதிகளில் பொது வேலை நிறுத்தம் நடத்த அறைகூவல் விடுத்துள்ளன.**

**நாட்டையும் பொதுமக்களின் நலனையும் பாதுகாக்கும் 12 அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.**

**நாட்டின் பொருளாதாரம் பாழாகிக் கொண்டிருக்கிறது. ஜனநாயக நடைமுறைகள் தொடர்ந்து முடக்கப்படுகிறது. ஜனநாயகத்தைப் பேணிக் காப்பதற்காக அரசியல் சாசனம் உருவாக்கியுள்ள கட்டமைப்புகள் அனைத்தையும் மோடி அரசு அடிபணியச் செய்து, ஆர்எஸ்எஸ்பாஜக இடும் கட்டளைகளை நிறைவேற்றி வைக்கிற முகமைகளாக மாற்றி விட்டது.**

**இந்திய மக்களின் சொத்துக்களான பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் கிட்டத்தட்ட, உள்நாட்டு வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு இலவசமாக அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.**

**முதலீட்டுக்கான வங்கிக் கடன்களும் தரப்படுகின்றன. வாங்கிய வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்காததோடு மட்டுமல்லாமல், அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சுதந்திரமாக செல்வச் செழிப்புள்ள வாழ்க்கை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்து தருகிறது.**

**கல்வி மருத்துவம் ஆகிய மக்களின் அத்தியாவசிய பயன்பாட்டு துறைகளை முற்றிலும் வணிக நோக்கம் கொண்டதாக அரசு மாற்றி விட்டது.**

**மின்சார திருத்த சட்டத்தின் மூலம் இனி முன்பணம் கட்டி,**

தொடர்ச்சி 8ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்

தமிழ்நாடு பட்ஜெட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்ய இருக்கிறோம்
– அண்ணாமலை




டீசல், பெட்ரோல், கேஸ் விலையை உங்க மோடி ஏத்திக்கிட்டே இருக்காரு.. அது உனக்கு தெரியல... தமிழ்நாடு பட்ஜெட் சரி யில்லேன்னு ரீலு விடுறியா?




# முன்னேறுவோம்

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நமது கட்சியின் மாநில நிர்வாகக் குழு மற்றும் மாநிலக் குழு கூட்டங்கள் 2022 மார்ச் 17, 18, 19 மற்றும் 20 ஆகிய நான்கு தினங்கள் நாகப்பட்டினத்தில் நடைபெற்றது.**

நமது கட்சி அமைப்புகளின் கூட்டங்கள் என்பது ஒவ்வொன்றும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததுதான்.

நாகப்பட்டினத்தில் நடைபெற்றக் கூட்டம் அரசியல் மற்றும் அமைப்பு நிலை குறித்து மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமாக அமைந்தது.

மாநிலக் குழு கூட்டம் தான் என்றாலும் கூட மாநில மாநாடு போன்று தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கூட்டம் நடைபெற்ற திருமண அரங்கம் கூட்டம் நடத்துவதற்குரிய மிகப் பொருத்தமான அரங்கமாக அமைந்திருந்தது.

கூட்டம் நடைபெறுவது குறித்து அனைவரும் அறியும் வண்ணம் சுவர் மற்றும் தட்டி விளம்பரங்கள் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நாம் எத்தகைய இயக்கங்கள் நடத்தினாலும் அது குறித்து பொதுமக்கள் அறிய வேண்டும். அதற்குரிய ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.

நீண்ட, அகண்ட நகரத்தில் நகர் முழுவதும் செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தது.

மார்ச் 19 அன்று கூட்ட தீர்மானங்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் நாகை அவுரித்திடலில் பொதுக்கூட்டம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் அணி திரண்டு வந்திருந்தனர்.

பொதுக் கூட்டத்திற்கு மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் எம்.செல்வராசு தலைமை வகித்தார்.

பொதுச் செயலாளர் தோழர் டி.ராஜா, ஆனிராஜா உள்ளிட்ட தலைவர்கள் சிறப்பாக உரையாற்றினார்கள்.

ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் தோழர் கே.ஆர்.திருநாவுக்கரசின் முன்முயற்சியால் மாவட்டக்குழு சார்பில் நமது மதிப்புமிக்க தலைவர் தோழர் தா.பாண்டியன் நினைவு மலர் தயாரிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

நான்கு நாள் நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர்கள் கோ.பழனிச்சாமி, எம்.செல்வராசு எம்.பி., மாவட்ட செயலாளர் எஸ்.சம்பந்தம் ஆகிய மூவரும் தலைமை குழுவாக செயல்பட்டனர்.

பொதுச் செயலாளர் தோழர் டி. ராஜா அவர்கள் கட்சியின் தேசியக் குழு முடிவுகளை குறிப்பாக அரசியல் நிலை குறித்தும், ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் குறித்தும் விளக்க உரையாற்றினார். தோழர்கள் கேட்ட ஐயங்களுக்கு விளக்கமளித்தார்.

மேலும் கட்சியை புனரமைக்க செயலுக்கும் உள்ள கட்சியாக மேம்படுத்த, வகுப்புவாத சக்திகளின் பேரபாயத்தை எதிர் கொள்ளக்கூடிய அமைப்பாக, செயல்பாட்டில் மேலும் மேலும் கட்சி அமைப்புகளும், தோழர்களும் முன்னெடுக்க வேண்டியது குறித்து தேசியக் குழு மேற்கொண்டுள்ள முடிவுகளை எடுத்துக் கூறினார்.

தேசியக் குழு முடிவை வரவேற்ற தோழர்கள் நடைமுறை சிக்கல்கள் குறித்து எடுத்துக்கூறினர்.

தோழர்களின் ஐயப்பாட்டிற்கும் பொதுச்செயலாளர் விளக்கமளித்தார்.

கட்சியின் மிக உயர் அமைப்பான அகில இந்திய மாநாடு விஜயவாடாவில் நடைபெற உள்ளது.

அக்டோபரில் நடைபெறவுள்ள மாநாட்டிற்கு முன்னதாக கட்சியின் அடிப்படை அமைப்பான கிளை மாநாடுகள் – கிளைகளை அரசியல் ரீதியாகவும், அமைப்பு நிலை ரீதியாகவும் ஊக்குவித்து செயல்படச் செய்யும் இடைநிலை அமைப்புகளின் மாநாடுகள், அதனைத் தொடர்ந்து மாவட்ட, மாநில மாநாடுகளை நடத்திட வேண்டும்.

மாநாடு நடத்துவது மட்டுமல்ல, மாநாட்டை எவ்வாறு நடத்திட வேண்டும் என்பது குறித்து நமது மாநிலக் கட்சி கையேடு வழங்கியுள்ளது.

வழிகாட்டும் கையேட்டை நன்கு படித்து, புரிந்து கொள்வது மட்டுமின்றி, அவைகளை செயல்படுத்திட, நடைமுறைப்படுத்திட உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தேசியக்குழு ஒருமனதாக நிறைவேற்றியுள்ள அமைப்பு நிலை குறித்த முடிவுகளை கறாராகவும், கண்டிப்புடனும் பின்பற்றி செயல்படுத்திட வேண்டும்.

தோழர்களே நமது கட்சியை வழிநடத்துவது நமது கட்சியின் அமைப்பு விதிகள் என்பதனை நாம் நன்கறிவோம்.

அமைப்பு விதிகளையும், தேசியக்குழு வழிகாட்டு தலையும் அமல்படுத்திட வேண்டிய அரசியல் அவசியத்தை, அதன் தேவையை நாம் நன்கு உணர்ந்து செயல்பட வேண்டியுள்ளது.

நமது நாட்டின் அரசியல் நிலைமைகள் எவ்வாறு உள்ளன? ஒன்றிய அரசு ஆட்சி புரிவது ஆர்எஸ்எஸ் அமைப்பின் பல்வேறு பிரிவுகளில் ஒன்றான பாஜக.

அக்கட்சியின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகின்றது?

அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக தங்களின் சொந்தக் கொள்கையான மனுதர்மத்தை செயல்படுத்திட முனைகின்றது.

தங்களுக்கு கிடைத்திட்ட ஆட்சி அதிகாரத்தை கொண்டு வலுக்கட்டாயமான முறையில் நாட்டு மக்களிடம் திணிக்க முயல்கின்றது.

ஜனநாயகத்தை, மதசார்பின்மையை அடியோடு புறந்தள்ளி தங்களின் சொந்த விருப்பங்களை நிலைநிறுத்த வேண்டும் என்கிற பிடிவாதத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

சர்வாதிகாரமாகவும், பாசிச தன்மையோடும் செயல்பட்டு வருகின்றனர்.

ஜனநாயக ரீதியாக மக்கள் நடத்தும் இயக்கங்களை சிறிதும் மதிக்காத போக்கு மித மிஞ்சி நிற்கின்றது.

நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

விரல்விட்டு எண்ணக்கூடிய சில பெரும் முதலாளிகளின் செல்வம் நாள்தோறும் வளர்ந்தோங்கி வருகின்றது.

மக்களின் தாங்கிக் கொள்ள முடியாத வறுமை குறித்தோ, நாள்தோறும் வளர்ந்து வரும் வேலையின்மை குறித்தோ பாஜக அரசு கவலை கொள்வதாக இல்லை.

சிறுபான்மை மக்கள் தங்களது தாய் நாட்டில் அச்சமின்றி சுதந்திரமாக வாழ முடியாது என்ற அவல நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தியாவின் ஆலயங்களாக போற்றப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை முழுமையாக தனியாருக்கு தாரைவார்க்கும் படலம் தொடங்கிவிட்டது. எதிர்காலத்தில் நாடே தனியாருக்கு சொந்தம் என்ற நிலை உருவானால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை என்ற நிலையில் இன்றைய ஆட்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அரசியல் ரீதியாக, சமரசத்திற்கு கிஞ்சிற்றும் இடமளிக்காது செயல்பட்டுவரும் இயக்கம் நமது மகத்தான கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதனை எவரும் மறுக்க இயலாது.

வகுப்புவாதத்தை, சர்வாதிகாரத்தை, பாசிசத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் புதைகுழிக்கு அனுப்பி விட வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் நம் முன்னால் உள்ளது.

அத்தகைய அரசியல் கடமை மற்ற எல்லோரைக் காட்டிலும் நமக்கு அதிகம் உள்ளது.

அதனால்தான் நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் மதச்சார்பற்ற சக்திகள், ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று தொடர்ந்து முழங்கி வருகின்றோம்.

நமது முழக்கம் என்பது நாட்டை, மக்களைக் காக்க எழுப்பப்படும் முழக்கமாகும்.

நமது கொள்கை உறுதிப்பாட்டின் காரணமாக தேர்தல்களில் நமக்கு இழப்புகள் ஏற்படுகின்றது என்பது உண்மையே !

நமக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து நாம் கவலை கொள்ளாமல் இல்லை.

ஆனால் நமது இழப்புகளைக் காட்டிலும் நமது கொள்கைக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று நாம் உறுதியாக உள்ளோம்.

ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் எத்தகையது என்பது குறித்து சென்ற வார ஜனசக்தியில் கட்டுரைகள் வந்துள்ளதை படித்திருப்பீர்கள்.

மதச்சார்பற்ற சக்திகள் ஒன்றிணைந்து களம் கண்டிருந்தால் பாஜகவை புறமுதுகிட்டு ஓட செய்திருக்க முடியும் என்பது உறுதியானது. அத்தகைய ஒற்றுமை உருவாகாமல் தனித்தனியாக போட்டியிட்டதன் விளைவாக பாஜக நான்கு மாநிலங்களில் அதிகாரத்தை கைப்பற்றி உள்ளது.

இத்தகைய வெற்றிகளை தடுக்கவும் ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பாசிச சக்திகளை அகற்றவும் பலம் பொருந்திய ஒற்றுமை தேவை.

அத்தகைய ஒற்றுமையை உருவாக்க வேண்டுமெனில், நமது கட்சி பலம் பொருந்திய கட்சியாக உருவாவதன் மூலமே சாத்தியம் என்கிற எதார்த்த உண்மைக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

நாம் பலப்படுவது என்பது சுயநலத்தால் அல்ல.

நாட்டின் நலனைக் கருதி மேற்கொள்ளப்பட வேண்டிய கடமையாகும்.

நமது கட்சியை பலப்படுத்திட தேசியக்குழு வழிகாட்டுதலை முடிவு செய்துள்ளது.

வயதுவரம்பு, பொறுப்புகளின் காலம் இவைகள் குறித்து எல்லாம் முடிவு செய்துள்ளது.

நமது கட்சியில் உள்ள மூத்த தோழர்கள் பெரு மதிப்பிற்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள்.

அவர்கள் தங்களின் இளமைக்காலம் முதல், மாணவ பருவம் தொடங்கி இன்றுவரை தனது வயது குறித்தோ, உடல்நிலை குறித்தோ, தங்களது குடும்பம் குறித்தோ, தங்களின் பிள்ளைகள் படிப்பு, வேலைகள், வருமானம் குறித்தோ சிறிதும் கவலை கொள்ளாமல் நாட்டிற்காக, கட்சிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

அவர்களது கடும் உழைப்பால் – அர்ப்பணிப்பால் – சேவையால் – தியாகத்தால் நமது கட்சி தலைநிமிர்ந்து நிற்கிறது.

அவர்களே தொடர்ந்து தியாகம் செய்ய வேண்டும், அவர்களே கட்சிப் பணிகளை ஆற்ற வேண்டும் என்ற நிலையில் மாற்றம் காண வேண்டும் என்று கட்சி முடிவு செய்துள்ளது.

**துடிப்பாற்றல் மிக்க இளம் தோழர்களுக்கு பொறுப்பளித்து மூத்த தோழர்கள் தங்கள் தோளில் சுமந்துள்ள சுமையை இளம் தோழர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று கட்சி முடிவு செய்துள்ளது.**

கட்சி மேற்கொண்டுள்ள முடிவு என்பது, கட்சியின் பணிகளை வளர்ச்சியை முன்னைக் காட்டிலும் மேலும் தீவிரமாக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளது.

கட்சியின் முடிவை ஏற்று செயல்படுத்துவதன் மூலம் முன்னேற முடியும். கட்சியின் முடிவை ஏற்பது மட்டுமல்ல, செயல்படுத்துவதே மிக முக்கியமானதாகும். ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலமே மாற்றத்தைக் காண முடியும். மாற்றம் ஒன்றே மாறாதது.

நமது கட்சியின் செயல்பாட்டில் மாற்றத்தைக் காண்பதன் மூலம் நாட்டில் மாற்றத்தைக் காண முடியும். மாற்றங்கள் தவிர்க்க முடியாத ஒன்று ! அவைகளை ஏற்பதும் தவிர்க்க முடியாத ஒன்று என்பதல்ல அது நமது கடமையாகும் !

அத்தகைய கடமைகளை ஏற்று செயல்படுத்திட ஆயத்தமாவோம் !

நமது அமைப்புகளின் மாநாடுகளை கட்சி வழிகாட்டுதல்படி மேற்கொள்வோம் !

கட்சியின் முடிவுகளை நிறைவேற்றிட நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டவர்கள்.

நமது கடமைகளை உணர்ந்து, உணர்வுபூர்வமாக செயல்படுவதன் மூலம் புதிய சக்தியாக, எதையும் எதிர் கொள்ளும் ஆற்றல் மிக்க கட்சியாக, நமது கட்சி மிளிர முடியும் ! அதனை நோக்கி முன்னேறுவோம் !

மீண்டும் சந்திப்போம் – வணக்கம்.

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

(மார்த்தா ஹர்னேக்கர் - லத்தீன் அமெரிக்க நாடுகளை முன்வைத்து)

# 21 ஆம் நூற்றாண்டு சோசலிசம்



- முனைவர்
அகிலா கிருஷ்ணமூர்த்தி



**எழுச்சிகளை புரட்சியாகவும் சுரண்டப்படுகிற மற்றும் ஒடுக்கப்படுகிற மக்கள் சிதறலை தடுப்பதற்காகவும் மக்களுக்கான தகுதிவாய்ந்த இயங்கு சக்தியாக இருப்பது அரசியல் கருவி. இன்றைக்கு உலக அரசியலின் வரையறை என்பது தங்களுடைய வல்லரசை தக்கவைத்துக் கொள்வதற்காக பிரித்தாளும் சூழ்ச்சிக் கருவியாக மாறியிருக்கிறது.**

இது ஒருபுறம் இருந்தாலும், ரஷ்யா, சீனா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தன்னெழுச்சியாக ஒன்று திரண்ட சோசலிச, ஜனநாயக, இடதுசாரிக் கட்சிகளின் வலுவான கட்டமைப்பு நழுவிப்போனதற்கான காரணம் என்ன?

அரசியல், பொருளாதார நிலைப்பாட்டை, அரசுக்கும் மக்களுக்குமான உறவுநிலைகளோடு ஒப்பிட்டு, இப்படிச் செய்தால் இதுதான் நடக்கும் என்கிற எச்சரிக்கையாக, எல்லாக் காலத்திற்கும் அந்தந்த பண்பாட்டுச் சூழலுக்கேற்ப ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்வதற்கான அறிவியல் அறிவாக, மார்க்சிய தத்துவம் நம் கைகளில் இருக்கிறபோதும் இடதுசாரிகள் அமைதி காப்பது ஏன்? இவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் மார்த்தா ஹர்னேக்கர் இடதுசாரிகளின் பலம், பலவீனம் குறித்துப் பேசுகிறார்.

21 ஆம் நூற்றாண்டிற்கான சோசலிசத்தை முன்வைக்கும் மார்த்தா ஹர்னேக்கர் லத்தீன் அமெரிக்க நாடான சிலியில் பிறந்தவர். தன்னை ஒரு மார்க்சிய லெனினிய கல்வியாளராக முன்னிறுத்துகிறார். சால்வடார் அலெண்டேயின் அமைச்சரவை அலோசகராக, வெனிசுலாவின் அதிபரான ஹியூகோ சாவேசுவின் அமைச்சரவையில் செயலாளராகப் பணியாற்றிய கம்யூனிஸ்ட்.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் இருந்துதான் அவருடைய நுட்பமான அரசியல் பார்வையை பதிவு செய்கிறார். ஏறக்குறைய 80 நூல்கள் எழுதியிருக்கிறார். மிகக்கூடுதல் பொறுப்போடு ஆய்வு செய்திருப்பது வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மற்றும் இன்றையச் சூழலில் ஜனநாயகக் கட்சிகளின், இயக்கங்களின் தேவை பற்றியது. அவற்றைக் கட்சி இடதுசாரிகள், சமூக இடதுசாரிகள் என வகைப்படுத்துகிறார்.

"முதலாளித்துவ அமைப்பு முறையையும், அதன் லாப நோக்கத்தையும் எதிர்க்கும் சக்திகள், மனிதத்தன்மையுள்ள, ஒருமைப்பாடு நிறைந்த மாற்று சமுதாயத்திற்காகப் போராடும் சக்திகள், உழைக்கும் வர்க்கங்களின் நலன்களின் அடிப்படையில் கட்டப்படும் சோசலிச சமுதாயத்திற்காகப் போராடும் சக்திகள்". மனித குல வளர்ச்சியை நோக்கிய தூலமான கொள்கை. மற்றும் அனைத்து அடிமைத்தளைகளில் இருந்தும் விடுவிக்க ஸ்தாபனமாக உருவான அணியே இடதுசாரி. இதில் கம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள் என்ற பாகுபாடுகள் இல்லை. கட்சி என்றாலே இடதுசாரிகள்தான். சமூக இடதுசாரிகளை ஒன்று திரட்ட வேண்டியது கட்சி செயல்பாடுகளில் மிக முக்கியமானது.

"சுயேச்சையான வெளிகளை உருவாக்க முயற்சிக்கும் சமூகப்பிரிவுகள் மற்றும் இயக்கங்கள். இவர்கள் போர்க்குணம் மிக்கவர்கள், இடதுசாரிகளின் லட்சியங்களோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள். ஆனால், அவர்கள் எந்த அரசியல் கட்சி, அமைப்புகளிலும் உறுப்பினர்கள் இல்லை. மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக பலத்தைக் காண்பிப்பவர்கள், கொரில்லா யுத்தத்தை தேர்ந்தெடுப்பவர்களே சமூக இடதுசாரிகள்". ஒற்றை இருண்மையைக் கலைக்க ஒரே நோக்கத்தோடு ஆங்காங்கே பிரிந்து கிடக்கும் மக்கள் சிதறல். இவர்கள் தனிநபர் வாழ்க்கையிலோ அல்லது சாதி, மதம், இனம், மொழி, அமைப்பு, அரசு மற்றும் அரசியல் நிறுவனங்களால் கைவிடப்பட்டவர்களாகவோ இருக்கக்கூடும்.

இவர்களை ஒருமுகப்படுத்துகிற மாற்றுச் சமூக முகாம் இங்கே அவசியமாகிறது. சோசலிசத்தில், பிரதிநித்துவக் குடியுரிமைகள், சமூக சமத்துவம், மக்கள் நேரடியாக அரசியலில் பங்கேற்கச் செய்வது ஜனநாயக ஆட்சியின் மூன்று முக்கியமான அம்சங்களாகப் பார்க்கப்படுகின்றன. அந்தவகையில், கலாச்சார ஒற்றுமையே அமைப்பின் உறுப்பினர்களை ஒன்றுசேர்க்கும் என்பது அவரது கருத்து.

வெனிசுலாவில் சாவேசு தலைமையில் சரியானத் திட்டமிடலோடு இப்படியான மக்கள் செயல்பாடுகள் நடைமுறைக்கு வந்தன. வெசோரெஸ் என்பது சமூகத்தின் குரல். குடிமக்கள் மன்றம். முதலாளித்துவம் முதலில் லத்தீன் அமெரிக்க நாடுகளில்தான் அமலுக்கு வந்தது. தென் அமெரிக்க இடதுசாரிகள் எதிர்த்தனர். நவ தாராளமயத்திற்கு மாற்றாக முன்பிருந்த கிளாசிக்கல் தாராளவாதத்தை நோக்கி வெனிசுலா சென்றது. அரசுக்கும் மக்களுக்குமான கம்யூன் சிஸ்டம் உருவானது. 12 வயதுக்கு மேற்பட்டோர்களை சமூகப்பணியில் அமர்த்தினார்கள். 100 பேருக்கு ஒரு குழுவாக குடும்பம் குடும்பமாக குழுக்களாகப் பொதுப்பணித் துறையில் மக்கள் பொறுப்பேற்றார்கள். குறிப்பாகப் பெண்கள், பழங்குடியினர். இளம் தலைமுறைகளின் பிரச்சனைகளை மக்களிடம் நேரடியாகச் சென்று அணுகினார்கள். சந்தைப் படுத்துதலில் ஜனநாயகத் தன்மையும், வெளிப்படையான வரவு செலவுகளும் பார்வைக்கு வைக்கப்பட்டன.

மக்களை ஈர்க்கக்கூடிய நகல் மசோதா, தங்கள் செயல் திட்டத்தில் பிற கட்சிகளை அழைத்தல், அணி திரட்டுதல் நடைபெற்றன. ஆட்குறைப்பு செய்து, வேலை நீக்கம் செய்யாமல் வேறு பணிகளுக்கு அமர்த்தினார்கள், தொலை தூர ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.நகராட்சியின் வருவாயை பெருக்குவது. வரிகளை உயர்த்துவது. மக்களுக்குத் தேவையானதை மக்களைக் கொண்டு திட்டமிடுவது. மக்கள் பங்கேற்கும் பட்ஜெட். உதாரணமாக, பிரேசிலில் தொழிலாளர் கட்சி, நகராட்சி நிதி ஆதாரங்களைத் திட்டமிடுதலில் மக்கள் பங்கேற்கிறார்கள். சமூகக் கவுன்சில்கள் அமைக்கப்பட்டன. பொலிவாரிய அரசியல் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

பிரிவு 20 அனைத்து மக்களும் தங்களின் ஆளுமையை சுதந்திரமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். பிரிவு 102 அதை ஜனநாயக சமூகத்திற்கு முழுமையாகப் பயன்படுத்துதல். பிரிவு 62 பொது விவகாரங்களுக்கு உருக்கொடுப்பது என நடைமுறை படுத்தப்பட்டன.

இந்தியச் சூழலில் இதன் பொருத்தப்பாடு சவாலாகவே இருக்கிறது. ஏற்கெனவே ஒன்றிய அரசு, ஒற்றைக் கலாச்சாரத்தால் இந்திய தேசத்தை வடக்கு, தெற்காகப் பங்குபோட்டு மக்களைச் சிதறடிக்கிறது. வெகு மக்கள் திரளை ஒருங்கிணைக்க வேண்டிய கம்யூனிஸ்ட் கட்சிகள், தொடர்பான இலக்கிய அமைப்புகள் சிதறிக் கிடக்கின்றன. இந்த தொடர்ச் சங்கிலிகளை கட்டி முறுக்குவதே நிறுவனத்தின் முதல் பணியாக அமைகிறது.

**கட்சியின் செயல்பாடு, தலைமையிலிருந்து வெகுமக்களை நோக்கியதாக இருக்கிறது. தலைமை தீர்மானிக்கிறது. அதே சமயம், நமக்கானவற்றை தலைமை பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை, உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் ஏற்படுகிறது. கட்சிக்கும் மக்களுக்குமான இடைவெளி கூடுகிறபோது, மக்கள் தங்களுக்கான வேறொரு இயக்கத்தையோ அமைப்பையோ தேடிப் போகிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் கறார்த்தன்மை. வாழ்வாதாரத்திற்காக அன்றாடம் போராடும் எளிய மனிதருக்கு அவருடைய தேவையை உணராமல் கோட்பாடுகளை வலிந்து திணிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத அச்சுறுத்தலாக இருக்கிறது. இவைகளை பலவீனத்தின் மிக முக்கியப் புள்ளியாக மார்த்தா கருதுகிறார்.**

சமீபத்தில் வடக்கில் நடந்த ஐந்து மாநிலத் தேர்தல்களில் பி.ஜே.பி. பெற்ற உறுதித் தன்மையை அலட்சியமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒவைசி கட்சி, வாக்குகளைப் பிரித்ததால்தான் பாரதீய ஜனதா வெற்றியடைந்தது. மேலும், மிகக் காத்திரமான விவசாயிகள் போராட்டத்திற்குப் பிறகு பஞ்சாபியில் பி.ஜே.பி க்கு எதிர் நிலையில் ஆம்ஆத்மி வந்திருப்பதிலும் காங்கிரஸின் முடக்கம் குறித்தும் பல்வேறு அரசியல் விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன.

அதேபோல், தமிழகத்தில் நடந்து முடிந்த நகராட்சி, மாநகராட்சி தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளின் வாக்கு வங்கி எந்த அளவிற்கு பின்தங்கி இருந்தது என்பதை சுய பரிசோதனை செய்ய வேண்டியிருக்கிறது. தேர்தல் நேரத்தில் மட்டுமே மக்களைப் பார்க்கிறோம். மக்களுக்காக நாம் தொடர்ச்சியாக உழைக்கிறபோது தேர்தலில் தோல்வி அடைந்தாலும் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும். ஆனால், நாம் தோல்வியை ஒப்புக்கொள்வதே இல்லை. இழந்த ஒன்றில் இருந்து ஒப்புமைப்படுத்தி முன்பைவிட முன்னேறியிருக்கிறோம் என நம்மை நாமே வெற்றியாளர்களாக சமாதானப்படுத்திக் கொள்கிறோம். இந்த போக்கு தவிர்க்கப்பட வேண்டும். இவைகளை எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு பணியாற்ற வேண்டும் என்கிறார் மார்த்தா. எனவே, கீழிலிருந்து மேலாக அதாவது, வெகுமக்களிடமிருந்து தலைமையை நோக்கிப் பயணிக்கிறபோதுதான் வீழ்ச்சியில் இருந்து மீளமுடியும்.

அத்துடன், குறைகளைக் களைவதற்கான பயணக்குறிப்புகளாக சில வழிமுறைகளை, போராட்டங்களைச் சுட்டிக்காட்டுகிறார். உறுப்பினர்களாக அல்லாதவர்களுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும். விவசாயம், கச்சா எண்ணெய், குடியிருப்புகள், கல்வி, மருத்துவம், அந்நியக்கடன் போன்ற சில குறிப்பிட்ட துறைகளில் வரும் பிரச்சனைகளை விவாதிப்பதற்கான நிபுணர்களை ஒன்று சேர்க்க வேண்டும். வெனிசுலாவில் நடந்த அதிபர் தேர்தலின் போது வெனிசுலாவில் **The are cause** என்கிற அமைப்பு அப்போதைய குடியரசுத் தலைவர் கார்லோஸ் ஆண்ட்ரெஸ் பெரஸ் பதவியில் நீடிக்க வேண்டுமா வேண்டாமா என மக்கள் கருத்தறியும் பொது வாக்கெடுப்பு நடத்தியது. வாக்களித்தவர்களில் 90% பேர் பெருநகரத்தைச் சேர்ந்தவர்கள். கார்லோஸ் வேண்டாம் என்றார்கள். பொது வாக்கெடுப்பால் அதிபர் பதவி விலக வேண்டி இருந்தது. 1993 இல் எல் சால்வடாரில் **FMLN** அமைப்பு முயற்சிகளில் ஈடுபட்டது. மெக்சிகோவில் அமைதி மற்றும் ஜனநாயகத்திற்கான தேசியக் கலந்துரையாடல் **EZLN** இயக்கத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது. ஜபாஸ்டிடா குடிமக்கள் 13 லட்சம் பேர் கலந்து கொண்டார்கள். 1999 மார்ச் 21 இந்திய மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கவும், சர்வ நாச யுத்தத்திற்கு முடிவு காணவும் சர்வதேச கலந்தாலோசனை நடத்தப்பட்டது. குடிமக்களின் பங்கேற்பு கிட்டத்தட்ட 30 லட்சம் பேர். இவைகள் எப்படி சாத்தியமானது என்கிற வியப்பும் எழுகிறது.

"புதிய சமுதாயம் கடந்த காலத்துடன் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். கடந்த காலத்தின் குறைகள் தனிநபர்களின் நனவிலியின் மூலம் அப்படியே ஒப்படைக்கப்படுகின்றன. அவற்றை ஒழிப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் தேவை." கூடவே, சிறுபான்மையினரின் புற எதார்த்தம் குறித்த ஆய்வு, அனுபவம் துல்லியமாக இருக்கலாம். பெரும்பான்மையினர், அவர்கள் கருத்துகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அது இல்லாதபோது அவர்கள் பிரிந்து சென்றுவிடுவார்கள். அதைத் தூண்டுபவர்கள்தான் பிரிவினை சக்திகள். அவர்களைக் கண்டறிய வேண்டும்.

தலைமை எப்போதும் வெகு மக்கள் பிரச்சனைகளை காது கொடுத்துக் கேட்க வேண்டும். தலைமையின் நியாயமான விசயங்களை உறுப்பினர்களும் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிதீவிர ஜனநாயகமும் ஆபத்து என்பதை உணர்த்துகிறார். கட்சியில் நெகிழ்வுத் தன்மையை ஏற்கமுடியாது. உலகத்திற்கு பொருந்தக்கூடிய சூத்திரத்தின் அடிப்படையில் கட்சி அரசியல் இயங்கும் என்பதில் முடிவாக இருப்பவர்களுக்கு மார்த்தா முன்வைக்கும் கேள்வி இதுதான்.

அப்படியானால், மக்களைச் சென்றடைய நீங்கள் என்னதான் செய்தீர்கள்?

புதிய இடதுசாரிக் கலாச்சாரம் விவாதத்திற்கான வெளிகளை உருவாக்க வேண்டும். பொருளாதார நிலை குறித்துப் பேச வேண்டும். இன்றளவும் தகவல் தொடர்பிலும், ஊடகங்களில் குறிப்பாக நமக்கான தொலைக்காட்சி சேனல் உருவாக்குவதில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு வருத்தத்திற்குரியது. லத்தீன் அமெரிக்காவில் பாரம்பரிய தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தினரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. தொழிற்புரட்சிக்கும் தொழில்நுட்பத்திற்குமான வளர்ச்சியில் அறிவு ஒன்றே மூலதனமாகிறது. உழைப்புச் சுரண்டலால் நிலையற்ற வேலைகளில் இருப்போர், அமைப்புகளால் ஒதுக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அரசியல் கட்சி இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அமைப்பாகத் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். தொழிற்சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் இவைகளோடு கிராமப்புற பண்பாட்டுச் சூழலில் கிளர்ந்தெழும் ஒட்டுமொத்தச் சமூக சிக்கல்களிலும் இடதுசாரிகளின் தர்க்கமும் தீர்வும் அவசியமானவை. ஆனால், ஒருசிலர் தங்களுடைய பதவிகளை தக்கவைப்பதற்காக சுயநலத்துடன் எதிலும் தலையிடாமல் பயத்துடன் அமைதி காக்கிறார்கள் என்கிறார் மார்த்தா. இது முதலாளித்துவ, பாசிசத்திற்கு ஆறுதலான விசயம்.

பன்முகத்தன்மை கொண்ட இந்திய தமிழ்ச் சூழலில் மக்கள் இயக்கங்களின் பொறுப்பு சற்று கூடுதலானது. சாதி, மதம், வர்க்கம், பெண்விடுதலை போன்றவைகள் இங்கே மையப் பிரச்சனைகள். அடிப்படையில் இடதுசாரிகள் மக்களுக்கான அரசியல் கருவிகள். சீர்திருத்தமும் புரட்சியும் காலத்தின் தேவை. எனவே, நோக்கத்தில் ஒன்றாக இருக்கிற மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்காரியம் மற்றும் ஜனநாயக இயக்கங்கள் ஒன்றிணைந்து பண்பாட்டுப் போராட்டங்களாக வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். கட்சி மற்றும் அமைப்புகளில் ஏற்படக்கூடிய மாற்றத்தை அரசியல் கலாச்சாரமாகக் கொண்டால், இப்படியானதொரு மாற்று முகாம் நம்மளவிலும் நிர்மாணிக்கலாம். அதற்கு லத்தீன் அமெரிக்க நாடுகளை நாம் முன் மாதிரியாகக் கொள்ளலாம்.

ஒன்றுபட்டால் புதியதொரு பொன்னுலகம் சாத்தியமாகும். காரல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், அல்தூசர், ரோசா லக்சம்பர்க், நோம் சோம்ஸ்கி, லெனின், கிராம்சி போன்ற மார்க்சிய, தத்துவ, வரலாற்று அறிஞர்களின் மேற்கோள்களோடு அந்த நம்பிக்கையை மார்த்தா ஹர்னேக்கர் தன் எழுத்துகளில் விதைத்திருக்கிறார்.

தொடர்புக்கு: **99448 23214**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 51

# மோடி மறந்த படுகொலைகள்

“காஷ்மீர் ஃபைல்ஸ்” திரைப்படத்தை பார்க்கச் செல்லும் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு சம்பளத்தோடு அரைநாள் விடுப்பு தரப்படுகிறது. இலவச டிக்கெட் விநியோகம் செய்கிறார்கள்.

பல மாநிலங்களில் இப்படத்திற்கு வரி விலக்கு தரப்பட்டுள்ளது. ஒரு வணிகத் திரைப்படத்தை வெற்றி பெற வைக்க, முன்னெப்போதும் கண்டிராத வகையில் ஒன்றிய அரசு தன் அதிகாரம் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி, உந்தித் தள்ளிக் கொண்டிருக்கிறது.

அது காஷ்மீரில் இந்து மதத்தைச் சேர்ந்த பண்டிதர்களுக்கு நேர்ந்த அநியாயங்களைச் சித்தரிக்கிற, முஸ்லீம்களுக்கு எதிராக உணர்ச்சிகளைத் தூண்டி விடுகிற திரைப்படம். பல பொய்களைக் கலந்து, சொல்லப்படுவது எல்லாம் உண்மை போன்ற பொய்த்தோற்றத்தில் உருவாக்கப்பட்ட படம். ஆர்எஸ்எஸ்பாஜக அரசியலை நுணுக்கமாக இதயத்தில் ஏற்றுவதற்காகவே தயாரிக்கப்பட்ட படம். எனவேதான் மோடி அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேராதரவு தருகிறது என நியாயமான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பிரதமர் மோடிக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. “எப்போதும் கருத்துச் சுதந்திரத்தை தூக்கிப்பிடிக்கும் குழுவினர், 56 நாட்களாக ரொம்பக் கோபமாக இருக்கிறார்கள். திரைப்படத்தை கலையாகப் பார்த்து, அதில் உள்ள உண்மைகளை அறிந்து, விமர்சனம் செய்வதற்குப் பதிலாக, அந்தப்படத்தை இழிவுபடுத்தும் சதி அரங்கேறுகிறது” என்று குமுறியிருக்கிறார்.

சமர் சபர்மதி ரயிலில் எஸ்6 ரயில் பெட்டியில் இருந்தவர்களுக்கு நிகழ்ந்த கொடூரத்தை பேசும் மோடிக்கு, அடுத்த 72 மணி நேரத்தில், காவல் துறையும் சேர்ந்து நின்று இஸ்லாமிய சமூகத்தை படுகொலை செய்து குவித்த குரூரம் நினைவில்லை.

‘நமக்கு 5 என்றால் அவர்களுக்கு 25, முஸ்லிம் பெண்கள் குழந்தை உற்பத்தித் தொழிற்சாலைகள்” என்று அப்போது மோடி பேசி எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருந்தார்.

காஷ்மீர் பண்டிட்டுகளாவது இடம்பெயர்ந்து ஜம்முவில் வசிக்கிறார்கள். குஜராத் முஸ்லிம்களோ, தமது சொந்த இடத்துக்கு பல பத்து ஆண்டுகள் ஆகியும் செல்ல முடியவில்லை. காஷ்மீர் பண்டிட்களுக்கு நேர்ந்ததை உலகம் அறியும். ஆனால் குஜராத் முஸ்லிம்கள் வாய் திறந்து பேச முடியாது. பேசினாலும், வெளியே கேட்டு விடாத வகையில் ஊடகங்களின் வாய் கட்டப்பட்டுள்ளது.

1990ல் 89காஷ்மீர் பண்டிட்டுகள் கொல்லப்பட்டார்கள். 2002 கலவரத்தில் 2000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அந்தக் கலவரங்கள் குறித்த “பர்ஸானியா” திரைப்படம் வெளிவந்தபோது எல்லோரும் பார்க்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லவில்லை. மாறாக திரையிட முடியாமல் தடை செய்தார்கள்.

முசாபர்நகர் நகரில் முஸ்லிம்கள் குடியிருந்த வீடுகள் எரிக்கப்பட்டு, பெண்கள் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டு, நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் பற்றிய “முசாஃபர்நகர் பாக்கி ஹை” டாக்குமெண்டரி படமாக 2016ல்வந்தபோது, அது திரையிடப்பட்ட இடங்களில் எல்லாம் ஆர்எஸ்எஸ் சங்கிகள் நுழைந்து அந்த அரங்கங்களைத் துவம்சம் செய்து திரையிட முடியாமல் தடுத்தார்கள்.

கலவரங்கள் பற்றிய உண்மையை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இப்போது பேசும் மோடி அப்போது எங்கே போய் இருந்தார்?

பின்னாளில் நாடாளுமன்ற உறுப்பினரான பிரக்யாசிங் தாக்கூர் நிகழ்த்தி முஸ்லிம்கள் மீது பழிபோட்ட “மாலேகான் குண்டுவெடிப்பு”, காஷ்மீரில் சீக்கியர்கள் முஸ்லீம்களுக்கு இடையே கலகத்தைத் தூண்டுவதற்காக 37 சீக்கியர்களை வாஜ்பாய் ஆட்சியின் போது சுட்டுக்கொன்ற ‘சட்டிசிங்போரா’ படுகொலைகள், 1983ல் அசாம் மாநிலத்தில் ஆறு மணி நேரத்திற்குள் 1800 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட “நெல்லி படுகொலைகள்” உத்தரப் பிரதேசத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபோது யோகி ஆதித்யநாத் நடத்திய “ஆசம்கர்” கொலைகள் எல்லாவற்றையும் பற்றி படம் எடுத்தால் மோடி அனுமதிப்பாரா?

மோடியின் ஒவ்வொரு விரலிலும் அப்பாவி மக்களின் ரத்தம் சொட்டிக் கொண்டே இருக்கிறது.

இந்திராகாந்தி கொலையைத் தொடர்ந்து, 1984ல் சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வாஜ்பாய், மோடி ஆகியோர் 14 ஆண்டுகள் பதவியில் இருந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு, பின்னாளில் காங்கிரஸ்காரர்கள் பகிரங்க மன்னிப்பு கேட்டார்கள். ஆனால் ஆர்எஸ்எஸ் கும்பல் தான் செய்த கொலைகளுக்கு வருந்தியது உண்டா? மகாத்மா காந்தியைக் கொலை செய்ததை கூட நியாயப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மோடி வெறுப்பை விதைப்பதன் மூலமே பிரபலமானவர். மக்கள் சமூகத்தின் ஒரு பகுதிக்கு எதிராக வெறுப்பை காட்டுவதன் மூலமே அதிகாரத்தை கைப்பற்றியவர். இப்போதும் அவரது சரக்கு நன்றாக விற்பதை அண்மையில் 4 மாநிலங்களில் பெற்ற வெற்றி உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்திய அரசியல் சாசனம், சாதி, மத, இன, மொழி நிற அடிப்படையில் மக்களைப் பார்க்கவில்லை. சாசனம் தந்த ஜனநாயகத்தின் வழியாகவே ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆட்சிக்கு வந்து, இன்று அதன் குரல்வளையை நெரித்து கொண்டிருக்கிறது.

வறண்ட காலத்தில் கட்டப்படும் தடுப்பு அரண்களை, பெருவெள்ளம் உடைத்து நொறுக்கி தன்னுடன் எடுத்துச் சென்று விடும். அதுபோல மோடியின் பொய்யையும், புனை சுருட்டையும் உண்மை உடைத்து எடுத்து விடும்!

NEWAGE
Central Organ of the Communist Party of India
WEEKLY

தலையங்கம்
(மார்ச். 20 - மார்ச். 26)

ஆர் எஸ் யாதவ்



# பகத் சிங்

## உண்மையான ‘புதிய இந்தியா’ படைக்க இன்னுயிர் கொடுத்த தியாகி

1931 மார்ச் 23, லாகூரின் மத்திய சிறையில் புரட்சியாளர்கள் பகத்சிங், சுகதேவ் மற்றும் ராஜ குரு மூவரும் தூக்கு மேடையில் ஏறி நின்று ‘இன்குலாப் ஜிந்தாபாத்’ என முழங்கினர். அப்போது பகத்சிங் வயது வெறும் 24. இந்திய விடுதலை வேள்வியில் புரட்சியாளர்களும், சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலரும் தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாகத் தந்தார்கள். அவர்கள் அனைவரும் மிகப்பெரிதும் மதித்துப் புகழ்ந்து கொண்டாடப்பட்டனர். அத்தகைய தியாகிகள் நிறைந்த வான்பரப்பில் பகத்சிங் தனித்த இடம் வகிக்கிறார். எது அவரைத் தனித்துவமாகக் காட்டுகிறது? அது, எதிர்காலம் பற்றிய அவரது பார்வை, அதுவே இந்திய மக்களால் அவரை மிகவும் நேசிக்கச் செய்தது. ‘ஷாகீத்இஆஸாம்’ (மாபெரும் தியாகி) என இந்தியமக்கள் அவரை அங்கீகரித்தனர். அவரது கண்ணோட்டம், எதிர்காலத் தொலைநோக்குப் பார்வைதான் என்ன?

இந்தியச் சுதந்திரத்திற்காக மட்டுமே பகத்சிங் போராடவில்லை. அவரது போராட்டம் புதிய இந்தியா படைப்பதற்கானதும்கூட. இக்காலத்தில் பலமுறை ‘புதிய இந்தியா’ என்பதைப் பிரதமர் நரேந்திரமோடி முதலிய தலைவர்களிடமிருந்து நாம் கேட்கிறோம். மோடியின் ‘புதிய இந்தியா’ கருத்தாக்கம், நாட்டின் சொத்துக்களை உள்ளூர் மற்றும் அயல்நாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளிடம் கையளிப்பதைக் கனவு காண்கிறது.

அவரது ‘புதிய இந்தியா’ மேலும் மேலும் முதலாளித்துவத்தை இந்தியாவில் வலிமைபெறச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ‘தேசியப் பணமாக்கும் பாதை’ திட்டமே மோடி பிராண்டு ‘புதிய இந்தியா’வின் தொலைநோக்குப் பார்வை.

பகத்சிங்கின் புதிய இந்தியா கருத்தாக்கம், ‘முதலாளித்துவம், வர்க்க வேறுபாடுகள் மற்றும் சலுகைகளுக்கு சாவு மணி அடிக்கப்படும்’ எனக் கற்பனை செய்கிறது. இந்துஸ்தான் குடியரசு அஸோசியேஷன்(HRSA) என்ற புரட்சிகர அமைப்பின் ‘வெடிகுண்டு தத்துவம்’ (பிலா சபி ஆப் பாம்) என்ற வரலாற்று ஆவண வரைவறிக்கை தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்ட பகத்சிங் கூறுகிறார்: “…(சமூக வாழ்வில்) அது புதிய ஒழுங்குமுறையை வழிநடத்தும். முதலாளித்துவம், வர்க்க வேறுபாடுகள் மற்றும் சலுகைகளுக்கு அது சாவு மணி அடிக்கும். கொடுமையான இந்திய மற்றும் அயல் நாட்டு சுரண்டல்வாதிகளின் அடிமை நுகத்தடியின்கீழ் இன்று பட்டினியில் உழலும் லட்சோப லட்ச மக்களுக்கு மகிழ்ச்சியையும் வளமையையும் கொண்டு வரும். புரட்சி, பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை நிறுவும், சமூக ஒட்டுண்ணிகளை அரசியல் அதிகார அரியணையிலிருந்து நிரந்தரமாக ஒழிக்கும்ஞ்”என்றெல்லாம் அந்த ஆவணம் பிரகடனம் செய்கிறது.

பகத்சிங், மார்க்சியம் மற்றும் கம்யூனிசத் தத்துவத்தை நம்பினார். ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக தங்கள் அரசியல் லாபத்திற்காக பகத்சிங்கின் பெயரையும் புகழையும் நேர்மையற்ற விஷமத்தனமான முறையில் அபகரிக்க முயல்கிறது. ஆனால் அவரது அரசியல் கொள்கை பற்றி வாயை இறுக மூடிக்கொள்கிறது.

பகத்சிங்கின் தேசபக்தி, துணிச்சல், வீரம் மற்றும் ஆகப்பெரிய தியாகம் இவற்றின்மீது போற்றிப் பாடல் இசைக்கும் அவர்கள், தந்திரமாக அவரது தத்துவங்களைத் தவிர்க்கிறார்கள். அவர்களால் அதைப் பேசவும் முடியாது, காரணம் அவரது தத்துவத்தை அவர்கள் வெறுக்கிறார்கள்.

பகத்சிங் படங்களைப் போஸ்டர்களிலும், பெயரைத் தங்கள் உரைகள் முதலியவற்றிலும் அவர்கள் பயன்படுத்துவார்கள் எனில், அவரது தத்துவம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் முதலியவற்றில் தாங்கள் எங்கே நிற்கிறோம் என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ‘முதலாளித்துவத்திற்குச் சாவு மணி அடிக்க வேண்டும்’ என பகத்சிங் விரும்பினார்.

ஆர்எஸ்எஸ், பாஜக மற்றும் அது தலைமையேற்கும் என்டிஏ அரசு மிகத் தீவிரமாக முதலாளித்துவத்தைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த லட்சணத்தில் பிறகு எந்த உரிமையில் பகத்சிங் பெயரை அவர்கள் பயன்படுத்துகிறார்களோ!

விடுதலை பெற்ற இந்தியாவுக்கு சோஷலிச அமைப்பு முறையிலான சமுதாயத்தைப் பகத்சிங் கனவு கண்டார்; அவர் கண்ட விடுதலைபெற்ற அந்தச் சமுதாயத்தில் அநீதியும் சுரண்டலும் அகற்றப்பட்டு அந்த இடத்தில் சமத்துவமும் சகோதரத்துவமும் கோலோச்சும். பகத்சிங்கின் மேன்மையான இந்த எண்ணத்திற்கு மாறாக, ஆர்எஸ்எஸ் தத்துவத்தின் அடிப்படையாக தங்குதடையற்ற முதலாளித்துவ வளர்ச்சி, வகுப்பு வாதம் மற்றும் இந்துத்துவா கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது; அதில் சிறுபான்மை முஸ்லீம்கள் மட்டுமல்ல, இந்து மக்கள்தொகையின் பெரும் பகுதியாக விளங்கும் ‘சதுர்வர்ண’ (நால் வருண) கீழ்மேல் படிநிலையில் கீழ்நிலையில் இருப்பவர்கள், குறிப்பாக தலித்துகள் இழிவுபடுத்தப்பட்டு மிக அலட்சியமாக நடத்தப்படுவார்கள்.

ஆர்எஸ்எஸ் அமைப்பும் பாஜகவும் எப்போதாவது தங்கள் லட்சியமாக ‘சோஷலிச’த்தை ஏற்றிருக்கிறார்களா? அவர்களது தலைமையிலான ஒன்றிய அரசு 2014 மே மாதத்திலிருந்து ஆட்சியில் இருக்கிறதே, பகத்சிங் தத்துவத்தின் மீது ஏதாவது மரியாதை இருந்தால், ‘சோஷலிச பாணியிலானச் சமுதாயத்தை’ இந்தியாவில் அமைக்க அவர்கள் செயல்படட்டும். அதற்கு அவர்கள் தயாரா? இல்லை என்பதே பதில். அவர்களால் முடியாது, சோஷலிசம் அவர்களுக்கு எட்டிக்காய். ஆனால் ஏதோ தங்களுக்கு பகத்சிங் மீதும் அவர் தத்துவத்தின் மீதும் பெரும்அன்பு இருப்பதாக நாட்டு மக்களை முட்டாள் ஆக்க முயற்சி செய்கிறார்கள்.

பகத்சிங் சோஷலிசத்தைத் தனது லட்சியமாகப் பிரகடனம் செய்தவர். ஆர்எஸ்எஸ் /பாஜகவோ சோஷலிசம் மற்றும் கம்யூனிசத் தத்துவத்திற்கு மிகப் பெரிய எதிரிகள். சமீபத்தில் பிரதமர் மோடி இடதுசாரி கோட்பாட்டை ‘மிக ஆபத்தானது’ என விமர்சித்திருந்தார். அப்படிக் கூறும்போது உண்மையில் அவர் பகத்சிங்கையும் அவருடைய கோட்பாட்டையும் இழிவு செய்கிறார் இல்லையா?

பகத்சிங், “செல்வத்தைச் சமமாகப் பகிர்ந்து கொடுத்தல், சாதியத் தடைகள் மற்றும் சமத்துவமின்மைகளை ஒழித்தல் மற்றும் வகுப்புவாதத்தையும் மதரீதியான சகிப்பின்மையை அழிப்பதையும்” வற்புறுத்துகிறார். ஆர்எஸ்எஸ்/ பாஜக என்ன செய்கின்றன? சாதியத் தடைகள் மற்றும் சமூக சமத்துவமின்மைகளைச் சட்ட ரீதியாக நியாயப்படுத்தும் ‘சதுர் வர்ண’ முறையைக் கட்டாயமாக அமல்படுத்துவதை வற்புறுத்தும் ‘மனுஸ்மிருதி’ கோட்பாடுகளை ஸ்தாபிக்க ஆர்எஸ்எஸ் சபதம் செய்கிறது.

தொழிலாளர் வர்க்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் உரிமைகளைத் ‘தொழிற் சங்க தகராறு மசோதா’ மூலம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வரையறுத்துக் குறைக்க முயற்சி செய்தனர். அப்போது பகத்சிங்கும் அவரது இந்துஸ்தான் சோஷலிசக் குடியரசு அஸோசியேஷன் அமைப்பும் அதற்கு எதிராகத் தங்கள் எதிர்ப்புக் குரலை உயர்த்தினர். அவர்கள் அதனைக் காது கொடுத்து கேட்க மறுத்தபோது பகத்சிங் மற்றும் பி கே தத், அப்படிக் ‘கேளா காதினர் கேட்கும்படி, அக்கறையற்று புறக்கணிப்போருக்கு தக்க நேரத்தில் எச்சரிக்கை’ விடுவதாய் ‘தேசியச் சட்டமன்ற’ மைய மண்டபத்தில் வெடி குண்டுகளை வீசினர்.

மோடி அரசு அதைவிட மிக மிக மோசமான திருத்தங்களைத் தொழிலாளர் சட்டங்களில் செய்து, ஏற்கனவே நடைமுறையில் இருந்த 29 தொழிலாளர் நலச் சட்டங்களை ரத்து செய்தது; அதற்குப் பதில் அந்த இடத்தில் நான்கு தொழிலாளர் குறுங்குறிகளைக் கொண்டு வந்துள்ளது. தொழிலாளர் விரோதக் குறுங்குறிகளைச் சட்டமாக நிறைவேற்றியதன் மூலம் மோடி அரசு தொழிலாளர் வர்க்கத்தின்பால் மேலும் கொடூரமானது என்பதை நிரூபித்துள்ளது. பகத்சிங் போல தொழிலாளர்களின் குரலைக் கேட்கச் செய்ய நாடாளுமன்றத்தில் வெடிகுண்டு வீசத் தேவையில்லை, மாறாக தொழிலாளர்கள், 2022 மார்ச் 28, 29 இரண்டு நாட்கள் நாடு தழுவிய பொதுவேலை நிறுத்தம் செய்ய, தோள் தட்டித் தயாரிப்புகளில் இறங்கி விட்டனர்! தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதமான மோடி அரசும் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக தங்கள் உதடுகளில் மாவீரன் பகத்சிங் பெயரை உச்சரிக்கக்கூட உரிமையற்றவர்கள்.

தமிழில்: **நீலகண்டன்**

தத்துவார்த்தம் 21



எஸ். தோதாத்ரி



# மேலைய மார்க்சியம்

**மார்க்சிய அறிவு தமிழகத்தில் பரவத் துவங்கி இன்றைக்கு ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் சென்று விட்டன. மார்க்சியத்தின் அடிப்படை விளக்குவதுதான் பிரதானமான பணியாக இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. நெடுங்காடி ராமச்சந்திரன், பி. ராமமூர்த்தி, ப. மாணிக்கம், ஆர். கே. கண்ணன், பாலதண்டாயுதம், பேரா. நா. வானமாமலை போன்றவர்கள் இத்துறையில் பெரும்பங்கு பெற்றிருக்கின்றனர். இவர்கள் தவிர திராவிடர் இயக்கத்தவர்கள், காங்கிரஸ் இயக்கத்தவர்கள் ஆகியோரும் அவர்கள் நோக்கில் மார்க்சியத்தைப் பரப்பியுள்ளனர்.**

ஆனால் மார்க்சியத்தின் அடிப்படைகளைப் பரப்பிய அளவிற்கு மார்க்சியக் கோட்பாட்டு வளர்ச்சி பற்றி இவர்கள் அதிகம் சிந்திக்கவில்லை. இத்தகைய சிந்தனை தமிழகத்தில் 1980களுக்குப் பின்னரே இடம் பெறுகிறது.

சிறு பத்திரிகைகள் அதிகம் வளர்ச்சி பெறுவதுடன் இது அதிகத் தொடர்புடையதாக இருந்தது. இந்தக் காலகட்டம் தொட்டு இன்றுவரை மார்க்சியக் கோட்பாட்டு வளர்ச்சியின் பல அம்சங்கள் இங்கு அறிமுகமாகி வருகின்றன. மார்க்சியக் கோட்பாட்டு வளர்ச்சி என்பது மார்க்ஸ் – ஏங்கல்சால் உருவாக் கப்பட்ட கொள்கையை மேலும் வளர்த்தெடுக்க செய்யப்படும் முயற்சிகளைக் குறிக்கும்.

இதில் மார்க்சியத்தை மாற்றாமலேயே அதற்கு விளக்கம் கொடுத்தவர்களும் உண்டு. பிளக்கனாவ், லெனின், லூகாக்ஸ் போன்றவர்கள் அத்தகையவர்கள். மற்றொன்று மார்க்சியத்தின் பல கூறுகளில் ஏதாவதொன்றை வலியுறுத்தி மற்றவற்றை விட்டுவிடும் போக்கு ஆகும். இது பல பிரிவுகளாக மேலை நாடுகளில் வளர்ந்து வந்துள்ளது. இத்தாலிய மார்க்சியம், பிரஞ்சு மார்க்சியம், ஆஸ்திரிய மார்க்சியம், பிரிட்டிஷ் மார்க்சியம், பிராங்பர்ட் மார்க்சியம், மாவோயிசம் என இது பல கிளைகளாக உள்ளது.

இதுபற்றிய முயற்சிகளைப் பலர் தமிழகத்தில் மேற்கொண்டாலும், கோவை ஞானி, எஸ்.நாகராஜன், எஸ்.வி.ராஜதுரை, அ. மார்க்ஸ், தமிழவன், குணா போன்றவர்கள் மிகவும் விரிவாக இதுபற்றி எழுதி வருகின்றனர். இதன் விளைவாக இன்று மார்க்சியம் பற்றிப் பல முரணான விளக்கங்கங்கள் எழுந்துள்ளன. இவர்கள் எழுதிய நூல்களைக் கற்கும்பொழுது எது மார்க்ஸ் கூறியது, எது இவர்கள் கூறுவது என்ற தெளிவு இல்லாவிட்டால் அது பெருங் குழப்பத்தில் கொண்டுவிடும்.

எனவே இவர்களது படைப்புகளை ஆராய்வதற்கு முன்னர் மேலைய மார்க்சியம் பற்றிய அறிவு இன்று மார்க்சியவாதிகளுக்கு மிகவும் அவசியமாகிறது. இது தமிழகத்தில் 1980க்குப் பின்னர் இடம் பெறுவது என்பதற்குப் பல அரசியல் சமூகக் காரணங்களும் உள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலைய மார்க்சியம் என்பதில் முதலில் யார் யாரை நாம் சேர்க்கிறோம் என்பது முதல் கேள்வி. நாம் ஜார்ஜ் லூகாக்ஸ் துவங்கி அல்துசர் வால்டர் பென்ஜமின் சார்த்தர் என்று பல பெயர்களை இதில் அடக்கலாம். ஜெர்மனியில் துவங்கி பின்னர் அமெரிக்காவில் வலுவாக இயங்கும் பிராங்பர்ட் குழுவையும் இதில் அடக்கலாம். இவர்கள் பலதரப்பட்டவர்கள். கட்சிக்கும் உண்மையாக இருந்துகொண்டே மார்க்சியத்திற்குப் புது விளக்கம் அளித்தவர்களும் உண்டு. கட்சி சாராமல் பண்டித மனப்பான்மையுடன் மார்க்சியத்தை அணுகியவர்களும் உண்டு. இவர்கள் மார்க்சியத்தின் ஒவ்வொரு பகுதியையும் தனியாக எடுத்துக்கொண்டு அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழகத்திலும் இதே போக்கினைக் காணலாம். இவர்கள் அனைவருக்கும் ஒரு ஒற்றுமை என்னவென்றால் நிறுவனம் சார்ந்த மார்க்சியத்தை எதிர்ப்பதும் விமர்சனம் செய்வதுமாகும்.

1920களில் உருவான லெனினிசத்திற்கு ஒரு சவாலாக உருவானதுதான் மேலைய மார்க்சியம். மார்க்சிய லெனினிசத்தின்படி புறவயமான பொருளாதார விதிகள்தாம் வரலாற்றின் உந்துசக்தியாக விளங்குகின்றன. அதாவது பொருள் உற்பத்தியானது மனிதனது செயல்களைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது.

**உணர்வு (மனது) என்பது இயற்கை, சமூகம் ஆகியவற்றின் பிரதிபலிப்பு ஆகும். இதனை விமர்சனம் செய்யும் போக்கில்தான் மேலைய மார்க்சியம் உருவானது. இளம் மார்க்சின் படைப்புகளில் காணப்படும் மனித நேய உணர்வுகளை மேலைய மார்க்சியர்கள் வளர்க்க முயற்சி செய்தனர். ஆனால் லூகாக்ஸ், அல்துசர் போன்றவர்கள் சோவியத் மார்க்சியத்தை முற்றிலுமாகப் புறக்கணித்துவிடவும் இல்லை. ஆனால் அமெரிக்காவில் பிராங்பர்ட் குழுவினர் மேலைய மார்க் சிய சிந்தனையை வளர்க்க முற்பட்டபொழுதுதான் மேலைய மார்க்சியம் லெனினிசத்திருந்து முற்றிலுமாக விலகியது. அதில் கம்யூனிச சிந்தனை அறவே அகற்றப்பட்டது.**

கொள்கை ரீதியாக மேலைய மார்க்சியம் மார்க்ஸ் ஏங்கல்ஸ் கருத்துக்களிலிருந்து பல இடங்களில் வேறு படுகிறது. செவ்வியல் மார்க்சியவாதிகள் (Classical) பொருளாதார உறவுகள், அரசியல் போராட்டங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். இவர்களது கவனம் அடிப்படை அம்சங்களைப் பற்றியதாகவே இருக்கிறது. பண்டம் உற்பத்தி முறை சுரண்டல், மூலதனக் குவிப்பு மூலதனப் புனர்நிர்மாணம், முதலாளித்துவ நெருக்கடி, பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகியன பேசப்படுகின்றன. இவை மார்க்ஸ் உருவாக்கிய கருத்துக்கள். மேற்கட்டுமானம் பற்றி அவர்கள் பேசினாலும் அவர்களது கவனம் முக்கியமாக அரசியல் போராட்டங்களிலும், தொழிற்சங்கப் போராட்டங்களிலும் இருந்தது. இது இயல்பானதே ஆகும். ஏனென்றால் அடிப்படை மாறும் பொழுது மேற்கட்டுமானமும் மாறும் என்ற மார்க்சியக் கொள்கையை இவர்கள் பின்பற்றுகின்றனர். மேலைய மார்க்சியவாதிகள் இதைப் புறக்கணிக்கின்றனர். மேலைய மார்க்சியத்தைக் கலாசார மார்க் சியம் என்று அழைக்கலாம். கருத்துருவங்கள் பற்றியும் (Ideology) கலாசாரம் பற்றியும் அது அதிகம் பேசுகிறது. அந்நியமயமாதல் பண்ட வணக்கம் (Fetishism) ஆகியன பற்றி அவர்கள் அதிகம் எழுதுகிறார்கள். உதாரணத்திற்கு தமிழ் நாட்டில் எஸ்.வி. ராஜது ரையின் அந்நியமயமாதல் என்ற நூல், ஞானி எழுதி யுள்ள கட்டுரைகள், ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவர் கள் மேற்கட்டுமானம் பற்றியே அதிகம் எழுதுகின்றனர். இதற்கு மேற்கோளாக கிராம்சி, அல்துசர் ஆகியோர் பற்றி விரிவாகப் பேசுகின்றனர். மேற்கட்டுமானம், அடிப்படை ஆகியவற்றிற்குள்ள நெருக்கத்தைப் பற்றிப் பேசுவதில்லை. மேற்கட்டுமானமே தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது என்று கூறுகின்றனர்.

உதாரணமாக எஸ்.என்.நாகராஜன் அடிப்படையின் செல்வாக்கைப் புறக்கணித்து மேற்கட்டுமான விஷயமான அற ஒழுக்கத்துடன் மார்க்சியத்தை இணைக்க வேண்டும் என்கிறார். இது மார்க்சியத்தில் அறச்சிந்தனை இல்லை என்ற தவறான முடிவில் இருந்து வந்த ஒரு அணுகுமுறையாகும். ஒழுக்கம் (Morality) பற்றி மார்க்ஸ், ஏங்கல்ஸ் எழுதியவற்றை இவர்கள் கண்டுகொள்வதில்லை. இவற்றின் காரணமாக மேலைய மார்க்சியம் மேற்கட்டுமான மார்க்சியம் என்று அழைக்கப்படுகிறது.

*மார்க்சியம்–சிலபோக்குகள்: நன்றி: என்சிபிஹெச்*

*பகுதி 2 அடுத்த இதழில்...*

தொடர்புக்கு: **98947 83657**

# நெல் குவிண்டாலுக்கு ரூ.2500, கரும்பு டன்னுக்கு ரூ.4500 வழங்கிடுக!


## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்திட வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில் இந்தியாவிலேயே தமிழக அரசு இரண்டாவது தடவையாக வேளாண் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்துள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் வரவேற்கின்றோம். வேளாண்மை வளர்ச்சி மற்றும் விவசாயிகள் வருமான உயர்வு என்ற தளத்தை நோக்கி இந்த அறிக்கையில் பல புதிய அம்சங்கள் உள்ளன.

கடந்த 2020 – 21 ஆம் ஆண்டு 32 ஆயிரத்து 775 கோடி தற்போது 33 ஆயிரத்து ஏழு கோடி கூடுதலாக 232 கோடி மட்டுமே நடப்பாண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

- வேளாண் கடன் வழங்கிட ஒரு லட்சத்து 81 ஆயிரம் கோடி வழங்குவதும் இதில் தவறுகள் களையும் முயற்சியும் நல்லது.
- பயிர் காப்பீடு திட்டத்திற்கு 2339 கோடி.
- ஏழரை லட்சம் ஏக்கர் தரிசு நில மேம்பாடு திட்டம்.
- மாவட்டம் தோறும் உழவர் சந்தைகளில் சிறுதானியங்கள் விற்பனை.
- கலப்பின மீன்களை தவிர்க்க பாரம்பரிய மீன்கள் வளர்ப்புக்காக சிறப்பு மானியம்.



- தூர்வாரிட 4984 கிலோ மீட்டருக்கு 80 கோடி ரூபாய்.
- விவசாயத்தை மேற்கொள்ளும் வேளாண் பட்டதாரி இளைஞர்களுக்கு தலா ஒரு லட்சம் உதவி.
- 7500 ஏக்கரில் இயற்கை விவசாயத்திற்கு 400 கோடி. சிறுதானியமண்டலங்கள்.
- நெல்லை மட்டுமே நம்பியுள்ள திருவாரூர் மாவட்டத்தில் விவசாய விளைப்பொருட்களுக்கான தொழிற்பேட்டை அமைப்பு.

என்ற தற்போதைய தேவைக்கான பல்வேறு திட்டங்களில் எண்ணிக்கையும் தொகையும் குறைவாக இருந்தாலும் பாராட்டுக்குரியது. வேளாண் துறை என்பதை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை என்ற பெயர் மாற்றத்திற்கேற்ப மேலும் பல திட்டங்களை விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர்.



1. நெல்குவிண்டால் ரூபாய் 2500. கரும்பு டன் ஒன்று ரூபாய் 4,500. சிறு தானியங்களுக்கான அரசு உத்தரவாத கொள்முதல் மற்றும் விலை நிர்ணயம்.
2. தனியார் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு உரிய உதவிகள் இல்லாத நிலை யில் மாநில அரசே காப்பீட்டு திட்டத்தை ஏற்று நடத்துவது.
3. சாகுபடி முதலீட்டு மானியம் ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் வருடந்தோறும் மற்ற சில மாநிலங்கள் போல் வழங்கிட.
4. நெல் சாகுபடி பருவத்தை குறைத்து மாற்றுப்பயிர் சாகுபடிக்கான தொழில்நுட்பம். கள உதவிகளுடன் புதிய திட்டம்.
5. வேளாண் விளைப்பொருட்கள் உத்தரவாத விலை. அனைத்துக்கும் விலை நிர்ணயம் மற்றும் அரசு கொள்முதல் உத்தரவாததிட்டம்..
6. நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு.
7. பாரம்பரிய வேளாண்வளர்ச்சிக்கு கூடுதல் திட்ட உதவிகள்.. மானியங்கள்.
8. வேளாண் உற்பத்தி பொருட்களைக் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பிற்கானகூடுதல் நிதி ஒதுக்கீடு.
9. வேளாண் துறையேவேளாண் இடுபொருட்கள் அனைத்தையும் விவசாயிகளுக்கு விற்பனை செய்திடும் திட்டம்
10. வேளாண்மை துறையில் களப்பணியாளர்களைகூடுதல் படுத்தி விவசாயிகளின்தொடர்பை அதிகப்படுத்துதல்...

இது போன்ற பெரும் எதிர்பார்ப்புகளை வேளாண் நிதி நிலை அறிக்கை இறுதி செய்யும் போது இணைக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தின் அறிவிப்பு

# கூட்டாட்சி முறை மீதான தாக்குதல்

## சிபிஐ தேசியக்குழு தீர்மானம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் டெல்லியில் உள்ள கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் மார்ச் 12, 13 மற்றும் 14 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களின் உள்ளடக்கம் பின்வருமாறு:**

ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தின் அறிவிப்பு கூட்டாட்சி முறை மீதான தாக்குதல்:

ஒன்றிய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட 15.07.2021 தேதியிட்ட ஜல் சக்தி அமைச்சகத்தின் அறிவிப்பு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சி முறைக்கு எதிரானது ஆகும்; மாநில அரசுகளின் இறையாண்மையைத் தகர்த்தெறிவதுடன், சம்பந்தப்பட்ட இரு மாநில (ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா) மக்களின் உரிமைகளை நசுக்குவதாகவும் இருக்கிறது.

இந்த அறிக்கையின்படி, இரு மாநில அரசுகளும் கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகளின் அனைத்து பாசன திட்டங்கள் மற்றும் அவை தொடர்பான கோப்புகள், பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட கிருஷ்ணா நதிநீர் மேலாண்மை வாரியம் மற்றும் கோதாவரி நதிநீர் மேலாண்மை வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் திட்டப் பராமரிப்பு பணிகளுக்காக இவ்விரு மாநிலங்களும் தனித்தனியே கிருஷ்ணா நதிநீர் மேலாண்மை வாரியம், கோதாவரி நதிநீர் மேலாண்மை வாரியத்திற்கு தலா 200 கோடி ரூபாய் செலுத்த வேண்டும். இது தவிர, தேவைகளின் அடிப்படையில் வாரியம் கோரும் தொகையை மாநில அரசுகள் செலுத்திட வேண்டும் என்று அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசுத் துறையிடமிருந்து இவ்விரு மாநிலங்கள் ஆறு மாதங்கள் முடிவதற்கு முன்பாகவே திட்டப் பணிகளுக்கான ஒப்புதலைப் பெறவேண்டும். அப்படி ஒப்புதல் பெறப்படவில்லை என்றால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவில் அது வரையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தாலும்கூட, அந்தத் திட்டப் பணிகள் நிறுத்தப்படும்.

இந்த ஆணை நடைமுறைப் படுத்தப்படுமானால், வேளாண்மை, நீர் பகிர்மானம் மற்றும் தேசப் பொருளாதாரத்தில் ஒரு தீவிர நெருக்கடி உருவாகும். இவ்விரு மாநிலங்களின் மீதான கடன் சுமை கூடும். அணைகள், கால்வாய்கள் மற்றும் குளங்கள் ஆகிய திட்டப்பணிகள் மூலமாக பாசன வசதி பெற்று வரும் பகுதிகளில் நீர்ப்பாசனம் தடைபடும். பல நகரங்கள் மற்றும் பேரூர்களுக்கான குடிநீர் வழங்கலும் பாதிப்புக்கு உள்ளாகும்.

ஒன்றிய அரசு, கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிநீர் மேலாண்மை வாரியங்களின் அதிகார வரம்பை வரையறை செய்வது என்ற பெயரில், நிர்வாக அதிகாரங்கள் மீதான இவ்விரு மாநிலங்களின் உரிமைகளை முற்றாகப் பறித்துவிட்டது. வாரியங்களுக்கான தலைவர்கள் மற்றும் திட்டப் பணிகளுக்கான பொறியாளர்களை நியமனம் செய்வதற்கான அனைத்து அதிகாரங்களும் ஒன்றிய அரசிடம் உள்ளது. வாரியங்களில் மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறியாளர்களை இவ்வறிவிக்கை தகுதி நீக்கம் செய்துள்ளது.

திட்டப் பணிகளின் நிர்வாகம் தொடர்பாக உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லை என்று இந்த அறிவிக்கை கூறுகிறது. மாநில அரசுகள் ஒன்றிய அரசின் உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிநீர் மேலாண்மை வாரியத்தின் அதிகார வரம்பு குறித்த ஐயப்பாடு எழும்போது, ஒன்றிய அரசு மேற்கொள்ளும் முடிவே இறுதியானது.

நாட்டில் நிலவும் எந்த ஒரு நதிநீர்ப் பிரச்சனையிலும் இந்திய அரசு இதுபோன்றதொரு உத்தரவை இதுவரை பிறப்பித்ததில்லை.

இரண்டு நதிநீர் மேலாண்மை வாரியங்களை நிறுவிடவும், அவற்றின் அதிகார வரம்புகளை நிர்ணயிக்கவும் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் 2014 வகை செய்கிறது. இந்தச் சட்டத்தின்படி, இரு வாரியங்களும் 2014 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. ஆனால் அவற்றின் அதிகார வரம்பு இந்த அறிவிக்கை வெளியிடப்படும் வரையில் முடிவு செய்யப்படவில்லை. அனைத்து நீர்ப்பாசன திட்டப் பணிகளையும் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற ஒன்றிய அரசின் உத்தரவுக்கு அரசியலமைப்புச் சட்டமோ, ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு சட்டமோ ஆதரவாக இல்லை.

கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகள் இதர மாநிலங்களில் பாய்ந்தோடுவதாக இருந்தாலும், அம்மாநிலங்களில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து ஒன்றிய அரசு எதுவும் குறிப்பிடவில்லை. ஒன்றிய அரசின் உத்தரவுகள் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு சட்டம் 2014ல் உள்ள அதிகாரமளிக்கும் சரத்துக்களை மிஞ்சுபவைகளாக உள்ளன. அந்த உத்தரவுகள் சட்டவிரோதமானது என்பதோடு மட்டுமின்றி அரசியலமைப்புச் சட்டம் மற்றும் கூட்டாட்சி முறைக்கு முற்றிலும் எதிராக உள்ளன.

ஒன்றிய அரசிடம் அதிகாரத்தைக் குவிக்கும் இந்த அறிவிக்கை மற்றும் உத்தரவுகளை இந்திய அரசின் ஜல் சக்தி அமைச்சகம் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு வலியுறுத்துகிறது.

### மருத்துவ கல்வியில் அறிவியலுக்கு எதிரான கருத்துக்களைத் திணிக்கும் நடவடிக்கையை திரும்பப் பெறுக!

நவீன மருத்துவப் பிரிவு மருத்துவர்களுக்கான உறுதிமொழிக்குப் பதிலாக சாரக்கா சம்ஹிதாவை கொண்டு வருவது, தற்கொலைக்கான மனப்பான்மை, மன அழுத்தம், மருத்துவ மாணவர்கள் இடையே நடைபெறும் ராக்கிங் ஆகியவற்றை நவீன மருத்துவப் பிரிவு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்கொண்டு சமாளித்திட அவர்களுக்கு யோகா, பிராணாயாமம் மற்றும் தியான பயிற்சி அளிப்பது, சர்வதேச யோகா தினத்தில் அவர்கள் பங்கேற்பதை கட்டாயமாக்குவது என்று தேசிய மருத்துவ ஆணையம் தீர்மானித்துள்ளதாக ஊடகங்களில் பரவலாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்கண்ட முடிவுகளை உறுதிப்படுத்தும் விதமாக தேசிய மருத்துவ ஆணையத்தின் வலைதளத்தில் சில ஆவணங்கள் இடம்பெற்றுள்ளன.

நவீன காலத்திற்கு ஏற்ப மருத்துவ சேவைகளை மேற்கொள்ள புதிய மருத்துவ பட்டதாரிகள் உறுதிமொழி ஏற்கும் முறை தற்போது உள்ளது. ஆனால் இதுபோன்ற முறைகள் மற்றும் முடிவுகள் தற்போது சில மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அமைப்புகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது; எதிர்க்கப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ்–ன் தேசிய மருத்துவ அமைப்பு (NMO) முன்வைக்கும் செயல் திட்டத்தை தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் இதர மருத்துவ கல்வி அமைப்புகள் நடைமுறைப்படுத்தி வருவதையே இவை அனைத்தும் தெளிவுபடுத்துகிறது.

**நவீன மருத்துவம் அறிவியல்பூர்வ வழிமுறைகள் மற்றும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வருகிறது. மன அழுத்தம், தற்கொலைக்கான மனப்பான்மை ஆகியவற்றைச் சமாளிக்க யோகா மற்றும் தியானப் பயிற்சிகள் அளிக்கும் முறை அபாயகரமானவை ஆகும். இத்தகைய போக்கு மனநலத்தை மேலும் மோசமாக்கும் என்பதோடு நவீன மருத்துவத்தின் அறிவியல்பூர்வ சிகிச்சை முறைகளின் மூலமாக மனநலப் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியும்.**

எனவே மருத்துவக் கல்வியில் அறிவியலுக்கு எதிரான கருத்துக்களைத் திணிக்கும் நடவடிக்கைகளை தேசிய மருத்துவ ஆணையம் திரும்பப் பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் வலியுறுத்துகிறது.

### உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்பதில் இந்திய அரசாங்கத்தின் மெத்தனப் போக்கு!

போர் நடைபெற்று வரும் உக்ரைன் நாட்டில் சிக்கிக்கொண்டு, பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வரும் இந்திய மாணவர்களை மீட்பதில் இந்திய அரசாங்கத்தின் மெத்தனப் போக்கை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு மிகுந்த கவலையுடன் சுட்டிக்காட்டுகிறது.

போலந்து அல்லது ருமேனியா நாட்டு எல்லையை வந்தடைய வேண்டும் என்ற வழிகாட்டுதல் மட்டுமே இந்திய மாணவர்களுக்காக வெளியிடப்பட்டது. கடுமையான பருவ நிலையையும், குண்டு வெடிப்புகளையும் எதிர்கொண்டு போலந்து மற்றும் ருமேனியா நாட்டு எல்லைகளை வந்தடைந்த மாணவர்களைக் கட்சி பாராட்டுகிறது. அவர்களது நிலைமையைக் கனிவுடன் பரிசீலித்து, வருங்காலத்திற்கான நம்பிக்கையை உத்தரவாதப்படுத்த வேண்டும். போர் காரணமாக மீண்டும் உக்ரைன் செல்ல முடியாத சூழலில் அவர்களுக்கு இந்தியாவிலேயே மாற்று ஏற்பாடுகளை செய்து தர வேண்டும்.

உக்ரைனில் பயிற்சி மாணவர்களாக இருந்தவர்கள் இந்தியாவிலேயே தங்களது பயிற்சியைத் தொடரலாம் என்ற தேசிய மருத்துவ ஆணையத்தின் முடிவு வரவேற்கத்தக்கது. மருத்துவ கல்விக்காக இந்திய மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் அயல்நாடுகளுக்குச் செல்வது மிகப்பெரிய பிரச்சனையாகும். தனியார் துறை மூலமாக அன்றி அரசு துறை சார்பில் அதிக எண்ணிக்கையில் மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்படுவது ஒன்றே இப்பிரச்சனைக்குத் தீர்வாகும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிடுகிறது.

## பி. சந்தோஷ் குமார் மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு




கேரள மாநிலத்தில் நடைபெற்ற மாநிலங்களவைக்கான தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சந்தோஷ் குமார் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கேரள மாநிலம், கன்னூர் சிபிஐ மாவட்ட செயலாளராகவும், மாநிலக் குழு உறுப்பினராகவும் உள்ளார். அனைந்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.














# சங்கே முழங்கு!

## நெல்லை கூலி தொழிலாளர் சங்கம் மகாசபை கூட்டம்

# ஒன்றுபட்டு போராடி வெற்றி காண்போம்!

### டி.எம்.மூர்த்தி அறைகூவல்

நெல்லை டவுன் கூலித் தொழிலாளர் சங்க மகாசபை கூட்டம் திருநெல்வேலி வங்கி ஊழியர் சங்கம் பர்வானா இல்லத்தில் ஏ.வெடிகண்ட பெருமாள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் ஆர்.சடையப்பன் தொடக்க உரையாற்றினார். சங்கத்தின் செயலாளர் ஜி. வெள்ளைச்சாமி அறிக் கைகளை சமர்ப்பித்தார். வரவு செலவு அறிக்கையை பொருளாளர் மாரியப்பன் சமர்ப்பித்தார். ஏ.வெடிகண்டப்பெருமாள் தலைவராகவும், ஜி.வெள்ளைச்சாமி செயலாளராகவும்,மாரியப்பன் பொருளாளராகவும்,மணி உதவித் தலைவராகவும்,சக்திவேல் துணைச் செயலாளராகவும் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத் தலைவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளருமான எஸ்.காசிவிஸ்வநாதன் மற்றும் மாவட்ட ஏஐடியுசி பொருளாளர் எம்.எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

நமக்கென்று உள்ள அடையாளம் ஒன்றே ஒன்றுதான். அது தான் சங்கம். எந்த சட்டத்திலும் சுமை தூக்கும் தொழிலாளி க்கு என்று தனியாக சட்டம் இல்லை. ஏனென்றால் நாம் அமைப்பு சாரா தொழிலாளர்கள். அமைப்பு சார்ந்து இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு எல்லாவிதமான சட்டங்களும் உண்டு. பல சட்டங்களை நாம் போராடிப் பெற்று தந்துள்ளோம். தமிழ் நாட்டில் உடலுழைப்புத் தொழிலாளர் சட்டம் என்ற சட்டத்தை உருவாக்குவதற்காக நாம் போராடினோம் . அதன்மூலம் சில உரிமைகளை பெற்றிருக்கின்றோம் என்றாலும் நாம் சங்கமாக திரள்வதும் , ஒன்றுபட்டு நிற்பது தான் நம்முடைய உரிமைகளைப் பெற்றுத்தரும் .

திரைப்படத் தொழிலாளர்களுக்கு பெப்சி என்ற தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனம் என்ற அமைப்பு வலுவாக உள்ளது. மிகப்பெரிய இசைஞானியாக , இயக்குநராக இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வேலை பார்க்க மாட்டார்கள். சங்க கட்டுப்பாட்டை தொழிலாளர்கள் மீற மாட்டார்கள் .

திண்டுக்கல் கூலித் தொழிலாளர்கள் மத்தியில் கூலி உயர்வு பற்றிய பிரச்சனைகள் வந்தது. குறைந்த கூலிக்கு வேலை செய்யும் நிலையை மாற்றுவதற்காக நாம் முயற்சி எடுத்தோம். நாம் கேட்ட கூலியைவிட 10% குறைத்து நோட்டீஸ் அச்சடித்து வெளியிட்டோம். இதற்கு குறைவாக யாரும் கூலி வாங்க மாட்டோம் என்று அறிவித்து போராடி வெற்றி பெற்றோம்.

தொழிலாளிக்காக போராடி சிறை சென்றால் தவறில்லை. கோடீஸ்வர குடும்பத்தில் பிறந்து கே. டி.கே தங்கமணி நாட்டுக்காக 9 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்தவர். மக்களுக்காகப் போராடி சிறை சென்றால் அது உன்னதமானது. நமக்கென்று முதலாளிகள் இல்லை. நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்கு சங்கம் என்பது மிக முக்கியமானது. செங்குன்றம் பகுதியில் சுமை தூக்குவதற்கு ஆள் வேண்டுமென்றால் செங்குன்றம் வட்டார பளு தூக்கும் தொழிலாளர் சங்கத்தை தான் நாடுவார்கள். சுமை தூக்குவதற்கும் ஆள் அனுப்புவதற்கும் தனியாக ஒரு முழுநேர ஊழியரை நியமனம் செய்துள்ளார்கள். அவர் கணக்கும் எழுதுவார். அவருக்கு சம்பளம் தினசரி ஆயிரம் ரூபாய்.. தொழிலாளர்கள் தான் அவருக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். வரிசைப்படி தொழிலாளர்கள் பணிக்கு அனுப்பப்படுகிறார்கள். அதிக செலவுகளை தவிர்த்து தொழிலாளர்களின் நலன்களுக்கு செயல்பட வழி காட்டியுள்ளோம்.

விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கின்றது. கட்டுமானத் தொழிலில் நேரடியாக கான்கிரீட் கலவைகள் கீழே உருவாக்கப்பட்டு மேலே மிக சுலபமாக கொண்டுசெல்லப்படுகிறது. ஒரு லிப்ட் கம்பை நட்டு அது 15 மாடிக் கட்டிடத்திற்கும் தூக்கி செல்லுகின்ற நிலைமை உருவாகிவிட்டது. இந்த விஞ்ஞான வளர்ச்சி எங்கும் வரலாம்.

மார்ச் 28,29 அகில இந்திய பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடத்த வேண்டும். இந்தியா விடுதலை பெற்றபோது பெரிய முதலாளிகள் இல்லை. நேரு பொதுத்துறையை உருவாக்கினார். மக்களிடம் பணம் பெற்று பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் அழிக்கப்படுகின்றன.

அதானியும் அம்பானியும் பெரும் கார்ப்பரேட் முதலாளிகளும் செல்வந்தர்களாக மாறிவிட்டார்கள். பணம் , செல்வம் படைத்தவன் மேலும் மேலும் செல்வந்தன் ஆகிறான். ஏழைகள் மேலும் பரம ஏழைகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் இன்றைய இந்தியா. அந்தக் காலத்துல அரசு மருத்துவமனைகள் தான் பெரிய ஆஸ்பத்திரி. இன்று தனியார் மருத்துவமனைகள் பெரியாஸ்பத்திரிகளாக மாறி விட்டன. நோய் வந்தாலும் அங்கு செல்வதற்கு பணம் இருந்தால் மட்டுமே முடியும்.

ஏழைகளுக்கு கல்வி சுகாதாரம் மருத்துவமனை எந்த வசதியும் கிடையாது. போராடிப் பெற்ற தொழிலாளர் சட்டங்கள் 4 சட்டங்களாக மாற்றப்பட்டுவிட்டது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் இருந்த ஒரே சங்கம் ஏஐடியூசி. உரிமைகளை போராடித்தான் பெற்றுள்ளோம். நூறு ஆண்டுகளைக் கொண்ட பாரம்பரியமான நமக்குரிய உரிமைகளைப் பெற பொது வேலைநிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும். மறியலில் முழுமையாக நம்முடைய சங்கத் தோழர்கள் பங்கேற்க வேண்டும். வாழ்த்துக்கள்.

## புலம் பெயர்ந்த பிறமாநிலத் தொழிலாளர்களுக்கு

# பாதுகாப்பு வழங்கிடுக!




## கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட் மில் ஓர்க்கர்ஸ் யூனியன் மகாசபை தீர்மானம்

கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட் மில் ஓர்க்கர்ஸ் யூனியன் (ஏஐடியூசி) 48 வது மகாசபைக் கூட்டம் ஏ.எஸ்.குளம், சங்கத்தின் பண்ணைத் தோட்டத்தில் சங்கத் தலைவர் பி.ஜெகநாதன் தலைமையில் மார்ச் 20 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் ஆலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 98 பேர் கலந்து கொண்டனர். சங்கத்தின் மூத்த எஸ்.ஆர்.கோபால் (ஏஐடியூசி) கொடியை ஏற்றி வைத்தார்.

தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியபின், பொதுச் செயலாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ.,அரசியல், ஸ்தாபனம், இயக்கம் சம்பந்தமான வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்று, பின் ஒரு மனதாக அறிக்கைஏற்றுக் கொள்ளப்பட்டது.

மகாசபையில் கீழ்கண்டவர்கள் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

தலைவர் பி.ஜெகநாதன், துணைத் தலைவர்கள் வழக்கறிஞர் கே.சுப்ரமணியம், எம்.ஈஸ்வரன் (உடுமலை), எம்.இராமமூர்த்தி (ரங்க விலாஸ் மில்), எஸ்.கோபால் (வி.ஜெ. டெரி), எஸ்.சின்னராஜ் (தெய்வசிகாமணி மில்), பொதுச் செயலாளர் வி.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ. செயலாளர்கள் சி.சிவசாமி, வி.கோபால் (திருப்பூர்), ஜி.செல்வராஜ் (உடுமலை), வி.கே.மதியழகன் (சி.எஸ் – டபுள்யூ. மில்), கே.பொன்ராஜ் (கம்போடியா மில்), பொருளாளர் என்.கிருஷ்ணன் மற்றும் 30 கவுன்சில் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மகா சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

புலம் பெயர்ந்த பிறமாநிலத் தொழிலாளர்களுக்கான சட்டங்களை தமிழக அரசே அமுல்படுத்து பிறமாநிலங்களிலிருந்து தமிழகம் வந்து வேலை செய்யும் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் அவர்களைத் தொழிலாளர் நலத்துறை அதிகாரியிடம் பதிவு செய்துதான் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று புலம் பெயர்ந்த தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருக்கிறது. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளும், நிறுவனங்களும் இந்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று இந்த தலைமைச் சங்க ஆண்டுப் பேரவை கேட்டுக் கொள்கிறது.

வருங்கால வைப்பு நிதி சேமிப்புத் தொகைக்கு சென்ற வருடம் கொடுத்து வந்த 55% வட்டியை ஒன்றிய அரசு 8.1% ஆக குறைத்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். சில வருடங்களுக்கு முன்பிருந்தபடி வட்டி சதவீதத்தை 12% ஆக உயரத்திக் கொடுக்க வேண்டுகிறோம்.

தமிழக அரசே !பஞ்சாலைகளில் சுமங்கலித் திட்டம், ஆலையில் இளம் பெண்களின் உழைப்பையும். வாழ்வையும் குறையாடும் மோசடியை உடனே தடுத்து நிறுத்து, பல மாவட்டங்களிலிருந்து குறிப்பாக தென் மாவட்டங்களிலிருந்து 15 வயது முதல் இளம் பெண்களை ஏஜண்டுகள் மூலம் பஞ்சாலை முதலாளிகள் கேம்ப் கூலிகளாக வேலைக்கு சேர்த்து கொடுமையான உழைப்புச் சுரண்டல் நடக்கிறது.

ஆலைக்குள் வருடம் முழுவதும் அடைத்து வைத்து 12 முதல் 15 மணி நேரம் வேலை வாங்கப்படுகிறது. பல ஆலைகளில், ஆலை வளாகத்திற்குள்ளேயே இளம் பெண் தொழிலாளர்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. மேலும் எந்தவிதமான தொழிலாளர் நலச் சட்ட உரிமைகளும் கிடைக்கப் பெறுவதில்லை. வேலை இடங்களில் தொழிலாளர் தங்கும் விடுதிகளை முறைப்படுத்தும் தமிழக அரசின் சட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆலை நிர்வாகமும். இவ்வாறு தொழிலாளர்களை தங்க வைத்து வேலை வாங்குவதற்கு மாவட்ட சமூக நலத்துறை அதிகாரிகளிடம் பதிவு செய்து உரிமம் பெற வேண்டும். கொங்கு மண்டலத்தில் 99% ஆலைகள் சட்டப்படி பதிவு செய்து கொள்ளாமல் கேம்ப் கூலிகளாக தொழிலாளர்களை வைத்து நடத்தி வரும் உழைப்புச் சுரண்டலை சமூகநலத் துறையும் கண்டுகொள்ளாமல் இருந்து வருவதை மாநில அரசு தலையிட்டு சரி செய்ய வேண்டும். என்று இந்தப் பேரவை கேட்டுக் கொள்கிறது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக கோவை மாவட்ட தொழிலாளர் நலத்துறையில் பணிக்கொடை வழக்குகள். தொழிலாளர் விபத்து இழப்பீட்டு வழக்குகள், சம்பள பாக்கி வழக்குகள், தற்காலிக வேலை நீக்க அலவன்ஸ் வழக்குகளை நடத்துவதற்கு முறையான அதிகாரிகள் யாருமில்லை. இந்த வழக்குகளை நடத்த தற்காலிகமாக பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரிகளும் தங்கள் பணிச்சுமையைக் காரணம் காட்டி வழக்குகளை பல மாதங்களாகக் கிடப்பில் போட்டுள்ளனர். தமிழக அரசு உடனே தலையிட்டு பதவிகளை உடனே பூர்த்தி செய்து தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடிக்க முன்வர வேண்டும் என்று இந்தத் தொழிலாளர் பேரவை தமிழக அரசைச் கேட்டுக் கொள்கிறது.

தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் ஒன்றிய அரசுக்குச் சொந்தமான ஐ.என்.டி.சி. ஆலைகள் பல மாதங்களாக மூடப்பட்டுக் கிடக்கின்றன. மூடப்பட்ட ஆலைகளைத் திறந்து ஓட்ட, தொழிற்சங்கங்கள் பலகட்டப் போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். ஒன்றிய அரசு பொதுத் துறை நிறுவனங்களை ஒவ்வொன்றாக (வங்கி, இன்குரன்ஸ், பி.எஸ்.என்.எல்.) தனியாருக்கு தாரை வார்க்கும் கொள்கையைப் பின்பற்றி வருவதால் என்.டி.சி. ஆலைகளைத் திறப்பதில் தொழிற்சங்கங்களின் மாற்று யோசனைகளை நிராகரித்து வருகிறது. மூடப்பட்ட ஆலைகளைத் திறந்திட ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், மூடப்பட்ட காலங்களுக்கு அனைத்து தொழிலாளர்களுக்கும் முழுச்சம்பளம் வழங்க வேண்டும் என்று இந்த தொழிலாளர் பேரவை கேட்டுக் கொள்கிறது.

அன்னூர் பகுதியில் தொழிற்சாலைகள் அதிகம் இயங்கி வருகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அன்னூர், கோவில்பாளையம் ஆகிய இரு இடங்களில் இ.எஸ்.ஐ. டிஸ்பன்சரிகள் செயல்பட்டு வருகிறது. லோக்கல் ஆபீஸ் வரவேண்டுமென்றால் கோயம்புத்தூருக்குத் தான் வரவேண்டும். எனவே, அன்னூர் பகுதியில் இ.எஸ்.ஐ. லோக்கல் ஆபீஸ் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பென்சன் தொகையை குறைந்தபட்சம் ரூ.3000/ எனவும், அதிகபட்சம் அவர்கள் பெற்றுவருகின்ற பென்சன் மற்றும் பஞ்சப்படி தொகைக்கு ஏற்ப உயர்த்தி வழங்க வேண்டும்.

தமிழக அரசு, தமிழகத்தில் இயங்கி வரும் பஞ்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள், ஆண்டுக்கு 120 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள், பருத்தி உற்பத்திக்கான ஊக்கத்தையும், அதற்கான சலுகைகளையும் அரசு வழங்க வேண்டும். இந்திய காட்டன் கார்ப்பரேசன் கழகத்தின் கிளை ஒன்றை, தமிழகத்தில் நிறுவ வேண்டும்.

கோவையில் இயங்கி வரும் இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு அதிஉயர் மருத்துவ சிகிச்சை, அனைத்து விதமான நோய்களுக்கும் அனைத்து வசதிகளும் உள்ளிட்ட மருத்துவக் கருவிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் நிரந்தரமாக பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## ஏஐடியூசி கட்டுமான தொழிலாளர் சங்க கூட்டம்

பாபநாசம் வட்டார ஏஐடியூசி கட்டுமான தொழிலாளர் சங்க கூட்டம் பாபநாசத்தில் நடந்தது. கூட்டத்திற்கு ராமஜெயம் தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் சுகுமாரன், மாவட்ட பொருளாளர் சௌந்தரராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் தில்லைவனம் பேசினார். கூட்டத்தில் தங்கப்பன், செல்வம், சாமிநாதன், பாஸ்கர் சீனிவாசன், பாலசுப்ரமணியன், ராஜேந்திரன், முகமது இப்ராஹிம், அன்பழகன், கார்த்திக் புகழேந்தி, சபரி உள்பட கலந்துக் கொண்டனர். மத்திய அரசு தமிழக நல வாரியத்தை சீர்குலைக்கும் போக்கை கைவிட வலியுறுத்தி நடைபெறும் வேலை நிறுத்தத்தில் திரளாக பங்கு கொள்வது, நலவாரிய பதிவை துரிதப்படுத்த தமிழக அரசை கேட்டுக்கொள்வது உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கட்டிய பணத்துக்கு ஏற்ப மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மின்சார விநியோகம், தனியாருக்கு தரப்பட உள்ளது. விவசாயம், கைத்தறி, விசைத் தறி நெசவுக் கூடங்கள் மற்றும், குடியிருப்பு வீடுகளுக்கு 100 முதல் 750 யூனிட் வரை இலவச மின்சாரம், மின் கட்ட ணச் சலுகைகள் உள்ளிட்டவை பாதிக்கப்பட உள்ளன.

எல்ஐசி, ஸ்டீல், ஏர் இந்தியா, நெடுஞ்சாலைகள், ரயில்வே, விமான நிலையம், துறைமுகம், சாலை மற்றும் நீர்வழி போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்தப் போவதாக பேசிக்கொண்டே தனியாரிடம் படிப்படியாக அல்லது ஒட்டு மொத்தமாக தரைமட்ட விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பெட்ரோலிய பொருட்கள் மீதான தொடர்ந்து விலை உயர்வு அனைத்து பொருட்களின் விலையும் விலைகளை உயர்த்தி வருகின்றன.

கடந்த 150 ஆண்டு காலத்திற்கு மேலாக தொழிலா ளர்கள் தொடர்ச்சியாக போராடி, வேலை நிரந்தரம், சம்பள உத்தரவாதம், போனஸ், பணிக்கொடை, ஓய்வூதி யம் உள்ளிட்ட பல நலன்களை சட்டங்கள் மூலம் பெற்றி ருக்கிறார்கள். அவை அனைத்தையும் பறிக்கிற வகையில், இனி யாருக்கும் நிரந்தரப் பணி இல்லை, வேலைக்கும் சம்பளத்திற்கும் உறுதியில்லை என்ற நிலையை மோடி அரசு தோற்றுவித்துள்ளது. விரும்பினால் வேலைக்கு அமர்த்தவும், வேண்டாம் எனில் உடனடியாக வெளியே துரத்தவும், முதலாளிகளுக்கு அதிகாரம் அளித்து தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்படுகின்றன.

44 சட்டங்களை 4 சட்ட தொகுப்புகளாக சுருக்கி, தொழிலாளர்கள் பெற்றுவந்த உரிமைகளை ஒன்றிய அரசு பறித்து இருக்கிறது.

கட்டுமானம் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழிலா ளர்களுக்கு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை தரும் சட்டங்கள் பல ஆண்டுகள் போராடி கொண்டு வரப்பட்டன. இதன் மூலம் அமைக்கப்பட்ட நல வாரியங்களை ஒன்றிய அரசு சீர்குலைத்து, அவைகளை ஒன்றிய அரசுக்கு நல வரியை வசூலிக்கும் அமைப்புகளாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகாலம் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி யோடு இணைந்து ஓய்வுதியம் மாதத்திற்கு ரூ.1000, ரூ.2000 அளவில் மிகக் குறைவான தொகை கிடைக்கிறது. அதை உயர்த்தி தருவதற்கான போதிய நிதி வசதி இருந்தும், ஒன்றிய அரசு உயர்த்தாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை மோடி அரசு தொடர்ந்து குறைத்து வருகிறது. விவசா யிகளின் ஓராண்டு கால போராட்டத்திற்கு பின்பு 3 வேளாண் சட்டங்களை திரும்ப பெற்றுக் கொண்ட ஒன் றிய அரசு, விவசாயிகளின் இதர கோரிக்கைகளை பேசித் தீர்ப்பதாக உறுதியளித்தது. ஆனால் அதைச் செய்யாமல் துரோகம் இழைத்து வருகிறது.

**ஒன்றிய அரசின் மக்கள் விரோத,**
**தேச விரோ தக் கொள்கைகள் அனைத்தையும்**
**எதிர்த்து தொழிற் சங்கங்கள்,**
**மார்ச் 28, 29 நாள்களில் ஆகிய**
**இரு நாட்களில் நடத்துகிற பொது வேலை**
**நிறுத்தத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**முழு ஆதரவு தெரிவிக்கிறது.**
**தொழிலாளர்களுக்கு ஆதரவாக இயக்கத்தில்**
**அனைத்துப் பகுதி மக்களும் பங்கேற்று, பொது**
**வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ய**
**வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.**

**↘ நீட் தேர்வுக்கு விதிவிலக்கு வழங்குக**

பாஜக ஒன்றிய அரசால் திணிக்கப்பட்டுள்ள "நீட்" தேர்வு முறை மாநில உரிமைகளுக்கு எதிரானது. கூட்டாட்சி கோட்பாட்டை நிராகரிப்பதாகும்.

ஏழை, எளிய குடும்ப மாணவர்கள், கிராமப்புற மாண வர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்களின் மருத்துவ உயர் கல்வி உரிமையை பறிப்பதாகும்.

தாய் மொழி மற்றும் தமிழ் மொழியில் பயின்று வரும் மாண வர்களும், முதல் தலைமுறை பட்டதாரிகள், மாநில பாடத் திட்டத்தில் பயின்று வரும் மாணவர்கள், போட்டித் தேர்வு மையங்களில் பயிற்சி பெற வாய்ப்பு இல்லாத மாணவர்கள் "நீட்" தேர்வு முறையால் கடுமையாக பாதிக்கப் படுகின்றனர். இதனால் இதுவரை 15 க்கும் மேற்பட்ட பள்ளிக் கல்வி முடித்த குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்பதை ஒன்றிய அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

மாநில அரசால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒன்றிய அரசு "நீட்" தேர்வை திணிப்பது மாநில உரிமை மீது நடத்தப்படும் தாக்குதலாகும்.

மாநில உரிமை மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பெறும் உரிமைகளை பறித்து வரும் "நீட்" தேர்வு முறையில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என கல்வியாளர்கள், மாணவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் வலியுறுத்தி போராடி வருகின்றனர். மக்கள் உணர்வை பிரதிபலித்து, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் வல்லுனர்கள் கொண்ட உயர் மட்டக் குழு அமைத்து விரிவாக விசாரித்து, கவனமுடன் ஆய்வு செய்து, அரசுக்கு பரிந்துரை வழங்கியுள்ளது. இதன் மீது தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை அடிப்படையில் "நீட்" தேர்வில் இருந்து, தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க வேண்டும் என தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, சட்ட மசோதா ஏற்கப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. கோரிக்கையின் தீவிரத்தை உணர்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆளுநர் நீண்ட காலம் கிடப்பில் போட்டு, பின்னர் பேரவைக்கு திருப்பி அனுப்பி வைத்தார். இதன் மீது அரசியல் கட்சிகளின் கருத்தறிந்து, மக்கள் உணர்வை மதித்து, சட்டப் பேரவையில் "நீட்" தேர்வில் இருந்து விலக்களிக்க கோரும் சட்ட மசோதாவை பேரவையில் மீண்டும் நிறைவேற்றி, அரசு ஆளுநருக்கு 2022 பிப்ரவரி 8 ஆம் தேதி அனுப்பி வைத்துள்ளது. இந்த சட்ட மசோதாவை ஆளுநர் விரைந்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்து, ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் ஆளுநரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**↘ நடப்புக் கூட்டத் தொடரில் ஆவணப் படுகொலை தடுப்புச் சட்டம் நிறைவேற்றுக**

மனம் பதைக்க செய்யும் ஆணவக்கொலைகள் இப் போதும் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடந்து வருவது பெரும் சமூக அவமானம் ஆகும். அனைத்துக் குடும்பங்களிலும் குழந்தைகள் பெரும் கனவுகளோடு வளர்க்கப்படுகின்றனர். குழந்தைகள் வளர்ந்து கனவு நிறைவேறப் போகும் இளமைக் காலத்தில், தமக்குப் பிடித்த வாழ்க்கை துணையை தேர்வு செய்து கொண்டதற்காகத் துள்ளத் துடிக்க கொல்லப்படும் கொடுமையை இனியும் அனுமதிப்பது சரியல்ல.

மண உறவில் சாதிக் கலப்பு ஏற்படுவது, தமது கவுரவத்துக்கு இழுக்கு எனும் மூடத்தனத்தை, சாதி ஆதிக்க சக்திகள் சமூகத்தின் மீது திணித்துக் கொண்டே இருக்கின்றன.

சாதி மறுப்புக் கொள்கையில் வாழ்க்கை இணையர்களாகும் தம்பதிகளின் குடும்பத்தினர் தமது பிள்ளைகளை மதித்து அவர்களது திருமணத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இருந்தாலும் கூட, சாதி ஆதிக்க சக்திகள் தாங்கமுடியாத நிந்தனைகளாலும், சமூகப் புறக்கணிப்பாலும் பெற்றெடுத்த மகன்/மகள்களையே கொல்லுகிற நிர்பந்தத்திற்கு அந்தக் குடும்பங்களை உந்தித் தள்ளுகின்றன.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கருவியாக, சாதிவெறி மீண்டும் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு வலிமை படுத்தப்பட்டு வருகிறது.

ராஜஸ்தான் அரசு ஏற்கனவே, திருமண இணையை தேர்வு செய்யும் சுதந்திரத்தில் கவுரவம், மரபு எனும் பெயரில் தலையீடு செய்வதைத் தடை செய்யும் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு காலதாமதமின்றி நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் உடனடியாக ஆணவக்கொலை தடுப்புச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**↘ வணிக நிறுவனங்கள் வாடகையை முறைப்படுத்திட வேண்டும்**

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்து சமய அறநிலையத்திற்கு சொந்தமான இடங்களில், தங்களது சொந்த செலவில் கட்டிடங்கள் கட்டி வணிகம் செய்து வருகின்றனர்.

இவர்கள் பன்நெடுங்காலமாக பயன்படுத்தி வரும் இத்தகைய இடங்களுக்கு நடைமுறையில் இருந்த "பகுதி முறை" வாடகையை ரத்து செய்து, அடி நிலம், மற்றும் கட்டி டத்தின் விலை மதிப்பில் சதுர அடி கணக்கில் வாடகை என்ற முறையை முந்தைய அஇஅதிமுக ஆட்சி காலத்தில் அமுல் படுத்தியது. இதன் விளைவாக சிறு வணிகர்கள் உட்பட அனைத்து பகுதி வணிகர்களும் மிகக் கடுமையான முறையில் பாதிக் கப்பட்டுள்ளனர் என்பதனை அரசு கவனத்தில் கொண்டு, நிலத்தின் விலை மதிப்பு அடிப்படை யிலான வாடகை முறையை ரத்து செய்து முந்தைய பகுதி முறையை அமுல்படுத்திட முன்வர வேண்டுமென இக்கூட்டம் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

## மார்ச் 28, 29 ...
# பொது வே...

>> 1ம் பக்க...

**↘ கோவில்மனையில் குடியிருப்போர் பிரச்சனைக்கு தீர்வு காண்க !**

இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான இடங்களில் குடியிருந்து வருபவர்களுக்கு, பகுதியாக வசூலிக்கப்பட்டு வந்தது. இதனை முந்தைய அஇஅதிமுக அரசு நிலத்தின் விலை மதிப்பு அடிப்படையில் சதுர அடி கணக்கில் வாடகை என நிர்ணயம் செய்து நடைமுறை சாத்தியமற்ற வகையில் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குடியிருப்போர் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். வாடகையை வசூல் செய்ய வேண்டும் இல்லையெனில் குடியிருப்பை காலி செய்திட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதிமன்ற தீர்ப்பைக் காரணம் காட்டி இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளும் குடியிருப்போரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது மிகுந்த கவலைக்குரியது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு உயர்மட்டக்குழு ஒன்றை அமைத்திருப்பது ஆறுதல் அளிக்கின்றது.

ஆனாலும் இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண நிலத்தின் விலை மதிப்பு அடிப்படையிலான வாடகை முறையை ரத்து செய்து முந்தைய பகுதி முறையை அமுல்படுத்திட வேண்டும். ஏழை, எளிய மக்களுக்கு "மனை உரிமை பட்டா" வழங்கிட வேண்டும் என தமிழ்நாடு அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**↘ குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்பட வேண்டும்**

தமிழ்நாட்டில் அரசு புறம்போக்கு நிலங்கள், நீர்பிடிப்பு பகு திகள், குளக்கரைகள், ஏரிக்கரைகள் என பல்வேறு இடங்களில் சொந்த நிலம் இல்லாத ஏழை, எளிய மக்கள் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற தீர்ப்புகளை காரணம் காட்டி குடியிருப்பவர்களை அப்புறப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக ஏழை, எளிய மக்கள் மிகக் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகி, குடிமனை இல்லாமல் அவதிக்கு உள்ளாகி இருப்பதை தமிழ்நாடு அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீர் பிடிப்பு பகுதி என்றும், மேய்ச்சல் நிலம் என்றும், பாசன வடிகால் பகுதி என்றும், கிராம இடங்களில் உள்ள பழைய கணக்குகளைக் காரணம் காட்டி நீதிமன்றங்கள் உத்தர விடுகின்றன.

எதார்த்த நிலைகள் அவ்வாறு இல்லை என்பதனை அரசு கவனத்தில் கொண்டு ஆட்சேபகரமான நில வகைகளில் இன்றைய உண்மை தன்மை அறிய காலக்கெடுவுடன் கூடிய உயர்மட்டக்குழு அமைத்து, குடியிருப்புகளை தொடர்ந்து அனுமதிக்க வாய்ப்புள்ள இடங்களின் நில வகையில் மாற்றம் செய்து, குடியிருப்போர்க்கு மனைப் பட்டா வழங்க வேண்டும்.

பொதுப் பயன்பாட்டிற்கு இன்றியமையாத் தேவையான இடம் எனில் அவ்விடத்தில் குடியிருப்போர்க்கு மாற்று இடமும் வீடு கட்டிக் கொள்வதற்கான உரிய தொகையை இழப்பீடாக வழங்கி இப்பிரச்சனைக்கு தமிழ்நாடு அரசு நிரந்தர தீர்வுகாண வேண்டுமாய் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.


**↘ மறு ஆய்வு மனு தாக்கல் செய்து கால் நடை வளர்ப்புக்கு பாதுகாப்பு வழங்குக...**

சென்னை உயர் நீதிமன்றம் தமிழ்நாடு முழுவதும் மலைப் பகுதிகளில் கால்நடை மேய்ச்சலுக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்பு மட்டுமே வாழ்வாதாரம் என்று வாழ்ந்து வரும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாரம்பரியமான நாட்டு மாடுகள் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சமவெளிப் பகுதிகளில் கால்நடைகளுக்கு "மூக்கனாங்கயிறு" போட்டு, இரவு நேரங்களில் "கட்டுத் தரை யில்" கட்டி வைப்பது போன்ற வழக்கம் மலைப்பகுதிகளில் இல்லை என்பதும், அங்கு கால்நடைகள் பறவைகள் போல் பகல் பொழுது நேரத்தில் மேச்சலை முடித்து, இரவு நேரங்களில் அன்றாடம் இருப்பிடம் திரும்பும் பழக்கம் கொண்டவை என்பதை மாண்பமை நீதிமன்றத்தின் பார்வைக்கு உரிய முறையில் எடுத்துச் செல்லப்படாத பலவீனம் நீதிமன்ற உத்தரவில் பிரதிபலிக்கிறது.

வன உரிமைகள் சட்டம் 2006 அமலில் உள்ள போது, பாரம்பரிய மலை வாழ் மக்களின் வன சமூக உரிமையை பறிக்கும் எதிர்மறை திசையில் தீர்ப்பு அமைந்துள்ளது. மேய்ச்சல் தடைபடும் போது வனங்களில் புற்கள் வளர்ந்து, புதர்கள் மண்டி, தீ விபத்து ஏற்படும் வாய்ப்பு அதிகரிப்பதையும், வனங்களே அழிந்து விடும் சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

மாண்பமை நீதிமன்றத்தின் தீர்ப்பின் மீது தமிழ்நாடு அரசு மறு ஆய்வு மனுத்தாக்கல் செய்து, வனப்பகுதி



**மனிதகுலம் படைத்தளித்திருக்கும் கருவூலங்கள் யாவற்றையும் பற்றிய அறிவைப் பெற்று உங்கள் சிந்தனையை நீங்கள் வளமாக்கிக் கொள்ளும் போது மட்டுமே உங்களால் கம்யூனிஸ்ட் ஆக முடியும்.**

**– வி. இ. லெனின்**

# நாடு தழுவிய
# ல நிறுத்தம்

த் தொடர்ச்சி

மக்கள் வாழ்வுரிமை மற்றும் சமூக உரிமைகளை உறுதி செய்யும் சட்டப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

**➘ கர்நாடக அரசின் அத்துமீறலுக்கு கண்டனம்**

தமிழ்நாடு உள்ளிட்ட பல் மாநில தொடர்புள்ள காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்டும் முயற்சியில் கர்நாடக அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்த அணை கட்டப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் தண்ணீர் உரிமை கர்நாடக அரசு பறித்து வருகிறது.

காவிரி நதிநீர் பகிர்வு தொடர்பாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினையும், இதனைத் தொடர்ந்து உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளையும் நிராகரித்து செயல்படும் கர்நாடக அரசின் அத்துமீறலை தடுக்க வேண்டிய ஒன்றிய அரசு, ‘‘அணை கட்டுவது நல்லது’’ எனக் கூறி தமிழ்நாட்டின் நலனுக்கு வஞ்சமிழைத்து வருகிறது.

இந்த நிலையில் கர்நாடக அரசு 2022–23 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மேகதாது அணைத் திட்டத்திற்கு ரூ.1000 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

நாட்டின் கூட்டாட்சி கோட்பாட்டை சீர்குலைத்து வரும் கர்நாடக அரசின் சட்ட அத்துமீறலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன், ஒன்றிய அரசு கர்நாடக அரசின் சட்டமீறலை தடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**➘ வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு பாராட்டு**

ஆணவப் படுகொலை செய்யப்பட்ட கோகுல்ராஜ் வழக்கில் வழக்கறிஞர் ப.பா.மோகன் உறுதியாக நின்று, திறன்மிக்க முறையில் வாதாடி, கொலையாளிகளுக்கு சாகும்வரை சிறை தண்டனை பெற்று தந்துள்ளார்.

கொலையுண்டவரிடமே தற்கொலை செய்து கொள்வது போல் எழுதிப் பெற்ற கடிதம், சாட்சிகள் அனைத்தும் பிறழ்ந்து பேசிய துயரம், அரசின் பாரமுகமும், சார்பு செயலும், அதிகார வர்க்கத்தின் அலட்சியம், சாதி ஆதிக்கத்தின் பழிதூற்றல், இழிவுச் செயல்கள் என அனைத்தையும் எதிர்கொண்டு நீதியை நிலை நாட்டிய அவரது முயற்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது.

வழக்கு நடத்துவதில் வந்த சவால்களை எதிர்கொண்டதற்கும், சமூக நீதி உணர்வோடு வாதங்களை முன் வைக்கவும் ‘‘நான் கம்யூனிஸ்டு வழக்கறிஞராகவும், கட்சியின் முழு நேர ஊழியராக வாழ்ந்ததுமே காரணம்‘‘ என பொது வெளியில் பிரகடனப்படுத்திக் கொண்டதை ‘‘தன் மகவை சான்றோன் எனக் கேட்ட தாயாக’’ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பெருமிதம் கொள்கிறது. அவர் சட்டப் போரட்டக் களத்தில் மேலும் பல வெற்றிகள் கண்டு சாதனை படைக்க வேண்டும் என நெஞ்சார வாழ்த்துகிறது.

**➘ பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்கள் தனி நலத்துறை அமைத்திடுக**

மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் கொண்ட தமிழ்நாட்டில் 20 மாவட்டங்கள் மலைகளும், அடர்ந்த வனங்களும் கொண்ட பகுதிகளாகும். இங்கு 36 வகையான பழங்குடியின மக்களும், பாரம்பரியமாக வனம் சார்ந்து வாழும் மலைவாழ் மக்களும் பல லட்சக்கணக்கில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது வாழ்வாதாரம் முழுவதும் வனம் சார்ந்து அமைந்துள்ளது.

இயற்கை சூழலுடன் இணைந்து வாழ்ந்து வரும் பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் வாழ்வுரிமைகளை பறிக்கும் வகையில் பாஜக ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் வனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் வெளியிடும் உத்தரவுகள் பழங்குடிகளையும், மழைவாழ் மக்களையும் வனத்தை விட்டு வெளியேற்றும் வஞ்சக நோக்கம் கொண்டதாகவே இருக்கின்றன. இதனைத் தொடர்ந்து மாண்பமை நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஐந்து தேசியப் பூங்காக்கள், ஐந்து புலிகள் சரணாலயங்கள், முப்பதுக்கும் மேற்பட்ட வனவிலங்கு சரணாலயம் அனைத்தும் பழங்குடிகள் மற்றும் மலைவாழ் மக்கள் வாழ்வில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இவைகள் 2006 ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஒன்றிய அரசு நிறைவேற்றப்பட்ட ‘‘பழங்குடிகள் மற்றும் மலைவாழ் மக்கள் உரிமைகள் அங்கீகாரச் சட்டத்திற்கு எதிரானதாகும். மேலும் 1980 ஆண்டு நிறைவேற்றப்பட்ட வனப் பாதுகாப்புச் சட்டத்தில் பல திருத்தங்களை செய்து, வன உரிமை சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையில் மோடியின் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகின்றது.

ஒன்றிய அரசின் மாநில உரிமைப் பறிப்பு முயற்சிகளை தடுத்து பாதுகாக்க வேண்டிய கடமை பொறுப்புள்ள தமிழ்நாடு பழங்குடியினர் நலத்துறையின் செயல்பாடு வருந்தத்தக்க நிலையில் தொடர்கிறது. இந்த நிலையில் பழங்குடியினர், மலைவாழ் மக்கள் உரிமைகளை பாதுகாக்க ஒன்றுபட்டு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு தெரிவிப்பதுடன், தமிழ்நாடு பழங்குடியினர் மற்றும் பாரம்பரிய வனம் சார்ந்து வாழ்வோர் நலத்துறை அமைக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது

**➘ ரயில்களில் சாதாரணக் கட்டணம் வசூலித்திடுக**

கொரோனா பெருந்தொற்று பரவல் தடுக்க நாடு முடக்கம் செய்யப்பட்டது. இதனால் ரயில்கள் இயக்கம் நிறுத்தப்பட்டது. முடக்கம் தளர்த்தப்பட்ட நிலையில் ரயில்கள் மீண்டும் இயக்கம் தொடங்கி, இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

**இந்த நெருக்கடியான காலகட்டத்தில் தென்னக ரயில்வே சாதாரண ரயில்கள் அனைத்தையும் சிறப்பு ரயில் என்று வகைப்படுத்தி கட்டணச் சலுகைகள் அனைத்தும் ரத்து செய்யப் பட்டு, முழுக் கட்டணமும், சில ரயில்கள் அதீதக் கட்டணமும் வசூலித்து வருகிறது. இதே காலத்தில் வட மாநிலங்களில் சாதாரண கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகின்றன. இந் தக் கட்டண பாகுபாடும், சுமையும் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.**

தென்னக இரயில்வே விரைவு ரயில்களை தவிர சாதாரண ரயில்கள் அனைத்திலும் சாதாரண கட்டணம் மட்டுமே வசூலிக்க உத்தரவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் ஒன்றிய அரசையும், இரயில்வே அமைச்சகத்தையும், நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்கிறது.

**➘ மாட்டு வண்டியில் மணல் எடுக்க அனுமதி வழங்கிடுக**

சாதாரண ஏழை, எளிய மக்கள் வீடுகள் கட்டுவது, பழுதடைந்த வீடுகளை சீரமைப்பது போன்ற வேலைகளுக்கு மணல் இன்றியமையாத் தேவையாகிறது. இதற்காக கட்டுமானப் பணிகள் மேற்கொள்வோர் மாட்டு வண்டி மூலம் அவர்களது சொந்தத் தேவைக்கான மணலை அருகில் உள்ள ஆறுகளில் மாட்டு வண்டி மூலம் சிறு அளவில் மணல் எடுத்து வருகிறார்கள்.

இடையில் சுற்றுச்சூழலை காரணம் காட்டி, ஆறுகளில் மணல் எடுப்பது முற்றிலுமாக தடை செய்யப்பட்டது. இதனால் ஆயிரக்கணக்கான மாட்டு வண்டி தொழிலாளர்களும், ஏழை, எளிய மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது தடை நீக்கப்பட்டுள்ளதால் பெரும், பெரும் லாரிகளில் மணல் எடுத்து செல்வது அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாட்டு வண்டித் தொழிலாளர்கள் மட்டும் தடுக்கப்பட்டு வருகின்றனர். இது சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்ற கோட்பாட்டுக்கு எதிரானதாகும். இதில் ஏழை, எளியோரும், கூலி உழைப்பாளர்களும் பாதிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு, ஆறுகளில் மாட்டு வண்டிகள் மூலம் மணல் எடுக்க எளிய, இலகுவான வழிமுறைகளை உருவாக்கி, அறிவிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது

**➘ பட்டாசு விற்பனை தடைகளை அகற்றுக...**

தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தின் வாழ்வாதாரம் பாட்டாசு தொழிலை சார்ந்து அமைந்துள்ளது. இங்கு சிறிதும், பெரிதுமான 1050 க்கும் மேற்பட்ட பட்டாசு உற்பத்தி தொழிலகங்கள் இயங்கி வருகின்றன. இதனால் பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இவைகளை கருத்தில் கொள்ளாமல் சில தன்னார்வலர்கள் நீதிமன்றங்களை அணுகி, சூழலியல் காரணங்களைக் கூறி பட்டாசு வெடிப்பதற்கு தடை உத்தரவுகளை பெற்றுள்ளனர்.

மனித வாழ்வில் மகிழ்ச்சியான தருணங்களிலும், துயர நேர்வுகளிலும், திருவிழாக்கள், புத்தாண்டு மற்றும் பண்டிகை நாட்களிலும் வெடி. வெடித்து களி நடனமாடுவது வழக்கமாக தொடர்ந்து வரும் பண்பாட்டு வழக்காறாகும். இதனை தடுக்கும் முறையில் சட்டங்கள் இயற்றுவதும், தடைவிதிப்பதும் அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை மறுக்கும் செயலாகும்.

வெளிநாடுகளில் உற்பத்தியாகும் பட்டாசுகளை இறக்குமதி செய்து, வியாபாரம் செய்ய அனுமதிக்கும் பாஜக ஒன்றிய அரசு உள் நாட்டு பாட்டாசு உற்பத்தியை அழிக்க முனைவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன், பட்டாசு தொழிலை பாதுகாக்க உற்பத்தியாளர்கள் மேற்கொள்ளும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துக் கொள்கிறது. ஒன்றிய அரசின் தவறான நடவடிக்கையை தடுத்து, பட்டாசுத் தொழிலை பாதுகாக்க தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசுக்கு வலுவான அழுத்தம் தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

**➘ போக்குவரத்துக் கழகங்களை காப்பாற்றுக**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் அரசின் சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்மொழி போராட்ட வீரர்கள், விளையாட்டு வீரர்கள், நாட்டுப்புற கலைஞர்கள் சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் உழைக்கும் பெண்கள் கட்டணமில்லா சேவை வழங்கி வருகின்றது. இதனால் ஏற்படும் வருவாய் இழப்பை தமிழ்நாடு அரசு வழங்கி ஈடு செய்து வர வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசு நிதி நெருக்கடியை காரணம் காட்டி, நீண்ட காலமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்க வேண்டிய ஈட்டுத்தொகையை வழங்கவில்லை. இத்துடன் பேருந்துகள் பராமரிப்புக்கான உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கு, பணியாளர்களின் பணிக்கொடை தொகை, ஓய்வூதியம் போன்றவைகளை மடைமாற்றிக் கொண்டிருக்கிறது. இதனால் ஓய்வு பெற்றும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். பழுதடைந்த பேருந்துகளை நிறுத்தி விடுவதால் மக்கள் போக்குவரத்தும் பாதிக்கின்றது. இந்த கவலையளிக்கும் நிலவரத்தை கருத்தில் கொண்டு போக்குவரத்துக் கழகங்களின் கடன்களை தமிழ்நாடு அரசு முழுமையாக ஏற்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

**➘ நிலம் கொடுத்தோருக்கு வேலை வழங்குக**


திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அதிகத்தூரில் ஹிந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவு இயங்கி வந்தது. கடந்த 2019 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தை பிரான்சு நாட்டின் பிசிஏ கம்பனி விலைக்கு வாங்கியது. இதனைத் தொடர்ந்து ஹிந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்தில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் கணக்கு முடித்து, வெளியேற்றப்பட்டனர். இதில் நிறுவனம் அமைய ஆரம்ப காலத்தில் நிலம் கொடுத்த 22 தொழிலாளர்கள் பிசிஏ கம்பனியில் வேலை வழங்க வேண்டும் எனக் கேட்டுப் போராடி வருகின்றனர். இது தொடர்பாக தமிழ் நாடு அரசு தலையிட்டு, தொழில் வளர்ச்சிக்கு நிலம் கொடுத்த குடும்பங்களில் தலா ஒருவருக்கு பிசிஏ நிறுவனத்தில் வேலை வழங்க உரிய உத்தரவிட்டு உதவுமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

**➘ பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை தமிழ்நாடு அரசு நியமித்திடுக**

தமிழ்நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களில், காவிகளின் ஊடுருவல் பெரும் அபாயத்தை உருவாக்கியுள்ளது. பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநர் இருப்பதால், துணைவேந்தர்கள், ஆட்சிக்குழு மற்றும் கல்விக்குழு நியமனங்களில் அவர் பெரும் ஆக்கிரமிப்பைச் செய்து கொண்டிருக்கிறார். பிற்போக்கு வலதுசாரிகள் இந்தப் பொறுப்புகளுக்கு தொடர்ந்து நியமிக்கப்பட்டு வருகிறார்கள். பல்கலைக்கழக, உயர் கல்வி நிறுவனங்களில் வெளிப்படையாக இந்துத்துவ அரசியல்வாதிகள் நுழைக்கப்படுவது தொடர்கிறது. சாதி, சமய ஏற்றத்தாழ்வுகளை மாணவர்கள் மத்தியில் உருவாக்கிடும் இந்த தீய செயல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எனவே துணைவேந்தர் உள்ளிட்ட நிர்வாகப் பொறுப்புகளுக்கு தகுதியானவர்களை நியமிக்கும் அதிகாரத்தை தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும் வகையில் உரிய திருத்தங்களைச் செய்ய உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**➘ பத்திரிகையாளர் நல வாரியம்**

தமிழ்நாடு பத்திரிக்கையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். பொதுவாக வேலை அளிப்பவர்கள் பணியாளர்கள் அரசு பிரதிநிதிகள் என முத்தரப்பு அமைப்பாகத்தான் நலவாரியங்களில் அமைக்கப்படுகின்றன. இந்த நலவாரியத்தில் பத்திரிக்கையாளர் தொழிற்சங்கங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் தரப்படவில்லை. பெரிய செய்தி நிறுவனங்களில் பணியாற்றுபவர் மட்டுமின்றி, சிறிய இதழ்கள், அண்மைக்காலங்களில் தோன்றியுள்ள மின்னியல் இதழ்கள், யூடியூப் செய்தியாளர்களும் வாரியத்தில் பயன்கள் பெறத்தக்க வகையில் நலத் திட்டங்களை வகுக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு மாநிலக் குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**மூலதனம் இறந்த தொழிலாளரை போன்றது. இது உயிருள்ள தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சி வாழ்கிறது**

**- மார்க்ஸ்**

# நிதிநிலை அறிக்கை மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

தமிழ்நாடு அரசின் நிதியமைச்சர் திரு பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் 2022 – 23 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

சமூகத்தின் அனைத்துப் பகுதியின் உள்ளடங்கலான வளர்ச்சியை சாரமாகக் கொண்ட “திராவிட மாதிரி” கொள்கையை அரசு பின்பற்றும் என அறிவித்துள்ளது. நிதி நிர்வாகத்தில் மேற்கொண்ட முயற்சியில் வருவாய் பற்றாக்குறையை குறைத்திருப்பது நல்ல முன்னேற்றமாகும்.

வகுப்புவாத, சாதி, மத, சனாதான சக்திகளால் ஏற்படும் சமூக சீரழிவை தடுக்க வாழ்நாள் முழுவதும் போராடிய பெரியார் ஈ.வெ.ரா.வின் சிந்தனைகளை 21 மொழிகளில் வெளியிடும் திட்டம், தமிழர்களின் தொன்மையை வெளிப்படுத்தி வரும் அகழாய்வுப் பணிகளை கடல் பகுதி உள்ளிட்ட பல புதிய பகுதிகளில் விரிவுபடுத்தியிருப்பது, மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சி, இலக்கியத் திருவிழா நடத்துவது, ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் திறன் மேம்பாடு, சர்வதேச சதுரங்க விளையாட்டு போட்டியை நாட்டிலேயே முதன் முறையாக சென்னையில் நடத்துவது போன்ற வரவேற்கத்தக்க பல திட்டங்கள் இருக்கின்றன.

பாஜக ஒன்றிய அரசின் தவறான ஜிஎஸ்டி வரி விதிப்பால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுவரும் நிதியிழப்பை ஈடுசெய்யும் கால வரம்பை ஒன்றிய அரசு மேலும் இரண்டாண்டு காலம் நீடிக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் வரும் ஏப்ரல் முதல் தேதியில் இருந்து, மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும் என நம்பிக்கையோடு எதிர்பார்த்த பெண்களும், பழைய ஓய்வூதியத் திட்டம் ஏற்கப்படும் என்ற எதிர்பார்த்த அரசுப் பணியாளர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வழங்கப்படும் வேலை நாட்களும், ஊதியமும் உயர்த்தப்படும் என்ற எதிர்பார்த்தோருக்கு ஏமாற்றம் அளித்துள்ளது.

நகர்மயமாகி வரும் சூழலில் கோயில் மனைகளில் குடியிருந்து வருவோர் பிரச்சனை தீவிரமாகி உள்ளது. அரசு நிர்ணயித்துள்ள வாடகை அதீதமானது என்பதை நிதிநிலை அறிக்கை கருத்தில் கொள்ளவில்லை.

மலைப்பகுதிகளில் கால்நடை மேய்ச்சலுக்கு தடை விதித்துள்ளதும், புலிகள் காப்பகம், சரணாலயங்கள் அமைப்பதும் வனப்பகுதி நிலங்களில் வாழும் மக்களின் வாழ்வுரிமைகளை பறித்து வரும் சூழலில் “வன ஆணையம்” அமைப்பது பழங்குடி, மலைவாழ் மக்கள் வாழ்வுரிமையை பாதுகாக்கும் என நம்புகிறோம்.

முதலீட்டை ஈர்க்கும் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் தனியார் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துவதில் வேலை வாய்ப்பை உருவாக்க கருதுவது போதுமானதல்ல. சிறப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும். தொழிலாளர் பணிநிரந்தரம், ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு உறுதி செய்வதில் தான் உற்பத்தி ஆற்றல் மேம்படும் என்பதை நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்த வேண்டும்.

சிறு, குறு, நடுத்தர தொழில்களை ஊக்கப்படுத்த நேரடி கடனுதவி உட்பட சலுகைகள் தாராளமாக கிடைக்கச் செய்ய வேண்டும்.

அரசிலும், பொதுத் துறையிலும் உள்ள தொகுப்பூதிய, ஒப்பந்த பணியாளர்கள் பணி நிரந்தரம் குறித்த அறிவிப்பு வெளிவரும் என எதிர்பார்த்தவர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தகவல் தொழில்நுட்பத் துறையிலும், அன்னிய முதலீட்டுத் தொழில்களிலும் வேலை செய்து வருவோர் நலனை பாதுகாக்க அரசு உறுதியான திட்டங்களை வகுத்து செயல்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட வேண்டும்.

நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தை நிறைவு செய்யும் போது நிதியமைச்சர் மக்கள் உணர்வுகளை கருத்தில் கொண்டு தீர்வு காண்பார் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு எதிர்பார்க்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# வேளாண்மை -நிதிநிலை அறிக்கை விவசாயிகளை ஊக்கப்படுத்தும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மார்ச் 19 அன்று சட்டப்பேரவையில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை முன்வைத்துள்ளார்.

“செய்வதை சொல்வோம்; சொல்வதை செய்வோம்” என்ற நடைமுறையில் தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளித்த உறுதிமொழிப்படி வேளாண்துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆட்சியில் அமர்ந்த தி.மு.கழக அரசின் வேளாண்மைத் துறையின் இரண்டாவது நிதிநிலை அறிக்கை விவ சாயத் தொழிலை பாதுகாக்க பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது.

கலைஞர் வேளாண் வளர்ச்சி திட்டம், பனை வெல்லம் உற்பத்திக்கு ஊக்கம், சூரிய ஒளி பம்பு செட், மலர் சாகுபடி பரப்பளவை அதிகப்படுத்த, வேளாண் பொருள் சார்ந்த தொழில் தொடங்குவது என்ற பல்வேறு பகுதிகளுக்கு மானியம் வழங்குதல் மதிப்புக் கூட்டு வேளாண் உற்பத்தி மையங்கள் தொடங்க முதலீட்டுக்கு மானிய உதவி, இலவச மின் சாரம் தொடர்ந்து வழங்குவது போன்ற முயற்சிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

விவசாயப் பணிகள் பெருமளவு எந்திரமயமாகியுள்ள நிலையில் மேலும் இயந்திரமயமாக ஊக்கம் அளிப்பது, மனித உடல் உழைப்புக்கான வேலை வாய்ப்பில் கடும் விளைவுகளை ஏற்படுத்தும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களை வேளாண் விஞ்ஞானி எம். எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரை படி விலை நிர்ணயம் செய்யவும், கொள்முதல் செய்யவும் நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்த வேண்டும்.

விவசாயத்தின் உயிர்நாடியாக அமைந்துள்ள விவசாயத் தொழிலாளர் நலன்கள் குறித்த அறிவிப்பு ஏதும் இல்லை. வேளாண் நிதிநிலை அறிக்கை விவசாயிகளுக்கு நம்பிக்கை யூட்டும் வகையில் அமைந்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### “காஷ்மீர் பைல்ஸ்” படம் பார்க்க

# புதுச்சேரி துணைநிலை ஆளுநர், முதல்வர் செய்தி வெளியீடு

## கம்யூனிஸ்ட் கட்சிகள் கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புதுச்சேரி மாநிலச் செயலாளர் அ.மு.சலீம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி( மார்க்சிஸ்ட்) பிரதேசக்குழுசெயலாளர் க.ராஜாங்கம், இந்தி யக் கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.) மாநிலச் செயலாளர் சோ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் கூறியுள்ளதாவது:

1980ல் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மத அடிப்படைவாதம் தலை தூக்கியபோது பண்டிட்டுகள் மீது சில மத அடிப் படைவாத சிறு குழுக்கள் தாக்குதல்களை நடத்தின. இத்தாக்குதல்களில் சிலர் இறந்து விட்டனர். பலர் காஷ்மீர் பகுதியை விட்டு வெளியேறியதோடு ஜம்மு, தில்லி போன்ற நாட்டின் பல பாகங்களிலும் குடியேறிவிட்டனர்.

மேற்கண்ட மனித நெருக்கடி சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு விவேக் ரஞ்சன் அக்னி ஹோத்ரி என்ற இயக்குனர், ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியர்கள் மேலானவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தி எடுக்கப்பட்ட மன உறுதியின் வெற்றி (1935) என்ற திரைப்படத்தின் கருத்தை தொனிக்கும் வகையில் இந்தியில் காஷ்மீர் பைல்ஸ் என்ற திரைப்படத்தை எடுத்துள்ளார்.

இந்த படத்தின் மையக் கருவாக இஸ்லாமிய எதிர்ப்பு தொக்கி நிற்பதும், இந்நாட்டின் இரு வேறு பெரிய மதங்களுக்கிடையே தீவிர பகை உள்ளது போல் சித்தரிப்பதும், மதங்களுக்கு இடையே வெறுப்பையும், மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் காட்சிகள் அமைந்துள்ளது. மேலும் இது பாஜகவின் இந்துத்துவா நிகழ்ச்சி நிரலுக்கும், வெறுப்பு அரசியலுக்கும் பொருந்தி போவதால் பாரதப்பிரதமர் படக்குழுவினரை அழைத்து பாராட்டியுள்ளார்.

அவரைத் தொடர்ந்து பாஜக ஆளும் மாநில முதல் வர்களும் படத்தை சிலாகித்து கருத்துக்கள் வெளியிடு வதுடன், அசாம் முதல்வர் ஒரு படி மேலே போய் அரசு ஊழியர்கள் படம் பார்க்க விடுப்பும் அளித்து வருகிறார். பல பாஜக தலைவர்கள் இப்படத்தை இலவசமாக கூட திரையிட்டு வருகின்றனர்.

திரைப்பட அரங்குகளில் இந்துத்துவ மதவெறி கூச்சல்களை சங்பரிவார் குழுக்கள் எழுப்புவதால் நாட்டின் தலைநகரில் அனைத்து பிரிவு மக்களும் சேர்ந்து வாழும் பகுதிகளில் காவல்துறையினர் குவிக்கப்பட்டு வரு கின்றனர்.

பிரதமரின் விருப்பத்திற்கு இணங்க, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி மற்றும் அமைச்சர் பெருமக்கள் இந்த திரைப்படத்தை திரையரங்குக்குச் சென்று பார்க்கும் செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். துணைநிலை ஆளுநர் அதிகாரபூர்வமாக பத்திரிக்கை செய்தி வெளியிடு கிறார். இந்த செயல் சமூக ஒற்றுமையுடன் வாழும் புதுச்சேரி மண்ணில் சமூக நல்லிணக்கத்தை பாதிக்கும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மா.லெ.) சார்பில் இச்செயலை கண் டிக்கிறோம்.

சமூகத்தில் நிலவும் தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறை, சமூக நீதி மறுப்பு ஆகிய கொடுமைகளை சித்தரிக்கும் அசுரன், பரியேறும் பெருமாள், கர்ணன், ஜெய்பீம் போன்ற மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் திரைப்படங்களை முதல்வரும், துணைநிலை ஆளுநரும் பார்த்து கருத்துக்களை வெளியிடுவார்களா...? தமிழகத்தின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜெய்பீம் திரைப்படத்தைப் பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போது இந்த திரைப்படத்திற்கு பாரதிய ஜனதா கட்சி சார்பில் வரிவிலக்கு கேட்டிருப்பது அரசின் வரி வருமானத்திலேயே பாஜக கட்சியின் வகுப்புவாத அரசியலை பரப்புவதற்கு அனுமதி கேட்பதாகும்.

ஆகவே புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்கள் பாஜக கட்சியின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு, சமூக ஒற்றுமையுடன் திகழும் புதுச்சேரி மண்ணில் எந்தவித சீர்குலைவு ஏற்படா வண்ணம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

### அரசு மருத்துவர்களுக்கு உயர்சிறப்பு மருத்துவப் படிப்புகளில்

# 50% இட ஒதுக்கீடு வழங்க உச்சநீதிமன்றம் உத்தரவு

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வரவேற்பு

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இந்தியாவிலேயே உயர்சிறப்பு மருத்துவ படிப்பு இடங்கள் தமிழ்நாட்டில் தான் அதிகமாக உள்ளன. அதுவும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மிக அதிக இடங்கள் தமிழ்நாட்டில் தான் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள இந்த உயர் சிறப்பு மருத்துவ இடங்களில் மூன்று ஆண்டுகளுக்கு முன்புவரை 100 விழுக்காடு இடங்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவர்களுக்கு மட்டுமே கிடைத்து வந்தது. அதில் 50 விழுக்காடு இடங்கள் அரசு மருத்துவமர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் காரணமாக அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்த எம்.டி, எம்.எஸ் போன்ற முதுநிலை மருத்துவம் முடித்த மருத்துவர்கள் உயர் சிறப்பு மருத்துவம் படித்தனர். இதன் காரணமாக அரசு மருத்துவமனைகளில் உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு படித்த மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் உயர் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. இதன் காரணமாக இதய மருத்துவம் இதய அறுவை சிகிச்சை உள்ளிட்ட உயர் சிறப்பு மருத்துவ சிகிச்சைகளுக்கு அரசு மருத்துவமனைகளையே, நம்பியிருந்த ஏழை எளிய மக்கள் பெரும் பயனடைந்தனர். உயர் சிறப்பு மருத்துவப் படிப்பில் அரசு மருத்துவர்களுக்கு இருந்த இட ஒதுக்கீடு, அரசு மருத்துவமனைகளின் சேவைத் தரத்தை மேம்படுத்தியது. அதை நம்பியிருந்த ஏழை எளிய மக்களுக்கும் பயனளித்தது.

இந்நிலையில் 3 ஆண்டுகளுக்கு முன்பு உயர் சிறப்பு மருத்துவ இடங்கள் முழுமையாக அகில இந்திய ஒதுக்கீட்டுக்கு பறித்துக் கொள்ளப்பட்டது.

உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவே இதற்குக் காரணம். உச்ச நீதிமன்றம் மாநில உரிமைகளை பறிக்கும் வகையில் செயல்பட்டது. இதன் காரணமாக தமிழ் நாட்டு மருத்துவர்களும், அரசு மருத்துவர்களும் மிகப் பெரிய இழப்புக்கு உள்ளானார்கள். நமது தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட உயர் சிறப்பு மருத்துவப் படிப்புகளில், தமிழ்நாடு மருத்துவர்களும் அரசு மருத்துவர்களும் சேர்ந்து படிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இது நமது ஏழை எளிய மக்களின் நலன்களுக்கு எதிரானதாகும்.

எனவே இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் தொடரப்பட்ட வழக்கில், தற்பொழுது அரசு மருத்துவர்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உயர் சிறப்பு மருத்துவ படிப்புகளில் தற்காலிகமாக வழங்கலாம் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது வரவேற்புக்குரியது. அரசு மருத்துவர்கள் நலன்களையும், உரிமைகளையும், தமிழ்நாட்டின் உரிமையையும் பாதுகாத்திட இந்த உத்தரவு உதவிடும். இருப்பினும், ஏற்கனவே நடைமுறையில் இருந்தது போல் தமிழ்நாடு அரசின் 100 விழுக்காடு இடங்களும் தமிழ்நாட்டிற்கே வழங்கப்பட வேண்டும். மத்திய அரசுக்கு சொந்தமான “ஜிப்மர்” மருத்துவ நிறுவனத்திலேயே புதுச்சேரி பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அந்நிறுவனத்தில் மருத்துவப் படிப்புகளில் இட ஒதுக்கீடு ( Domicillary reservation) உள்ளது.இது வரவேற்புக்குரியது.

இந்நிலையில் மாநில அரசால் உருவாக்கப்பட்ட உயர்சிறப்பு மருத்துவ இடங்களில் அம்மாநில மக்களுக்கென்று (Domicillary reservation) இடஒதுக்கீடே கூடாது என்பது தவறானதாகும். எனவே, உயர் சிறப்பு மருத்துவ இடங்கள் அனைத்தும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கே என்ற நிலை மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். உயர் சிறப்பு மருத்துவப் படிப்பில் தமிழகத்தின் உரிமை மீட்டெடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசின் உயர் சிறப்பு மருத்துவ இடங்களுக்கான மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்விலிருந்து விலக்கை பெற வேண்டும்.

அவ்விடங்களுக்கு முன்புபோல் தமிழ்நாடு அரசுதான் நுழைவுத் தேர்வை நடத்திட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



# தருமபுரி சிப்காட்டை செயல்பாட்டிற்கு கொண்டு வருக

## தருமபுரி மாவட்ட நிர்வாகக்குழு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட நிர்வாகக்குழு கூட்டம் கட்சி அலுவலகத்தில் அரூர் வட்டார செயலாளர் என்.அல்லிமுத்து தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில்மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் இன்றைய அரசியல் சூழ்நிலை மற்றும் செயல்பாடுகள் குறித்து பேசினார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட சிப்காட் தொழிற்பேட்டை உடனடியாக செயல்பாட்டுக்கு கொண்டு வந்து படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தில் இதுவரை குடிநீர் வழங்காமல் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் உபரிநீர் திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வந்து விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சோகத்தூர் பஞ்சாயத்து வெள்ளே கவுண்டன்பாளையம் வருவாய் கிராமத்தில் எஸ்சி,எஸ்டி மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கிய வீட்டுமனை பட்டாவை தமிழ்நாடு அரசு திரும்ப பெற்றதை தள்ளுபடி செய்து ஏழை, எளிய மக்களாகிய அவர்களுக்கே மீண்டும் வழங்கி வீடு கட்டி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி, சி.விஸ்வநாதன்,ஏ.மாது மற்றும் நிர்வாகக்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

64. **ஒன்னாது செய்யேல்**

**ஒன்னாது செய்வான் ஒருவன் உலகத்தே**
**இன்னாத தல்லால் இல.**

தீமை செய்தலையே வாழ்க்கையாகக் கொண்டவனுக்குத் தீமைதான் வரும். ஒருபோதும் நன்மை வந்து சேராது.

**நேர்பா டிலாஅர்க்கு நீணிலத்து கூர்பாடு**
**கொஞ்சமும் கூடி வரா.**

நேர்மையான வாழ்க்கை இல்லாதவர்களுக்கு இவ்வுலகில் கூர்மையான அறிவு உண்டாகாது.``

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

உ.பி.தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன? என்ற த.லெனினின் கட்டுரை சிறப்பான ஒன்றாகும். இஸ்லாமியர்களுக்கு எதிரான உணர்வை தூண்டி வெற்றி பெற்ற விதத்தை தெளிவுபடுத்தியுள்ளார். தமிழக சமூக அரசியல் நிலவரம் குறித்த கட்டுரைகள் இடம்பெற வேண்டும்.

– **ஹுசைன்,** திருச்சி

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஐந்து மாநில தேர்தல் முடிவுகள், கர்நாடகத்தில் மக்களிடையே வகுப்புவாத பிளவை உண்டாக்க ஆர்எஸ்எஸ் பாஜகவினரும், இஸ்லாமிய அடிப்படைவாதிகளும் மேற் கொண்ட முயற்சி, அகில இந்திய வேலை நிறுத்தம் மற்றும் நால்கோ தனியார்மயம் குறித்த தேசிய குழுவின் செய்திக் குறிப்பு சிறப்பான தொகுப்பு ஆகும். இதழ் வடிவமைப்பு பாராட்டுக்குரியது !

– **ராஜேந்திரன்,** ஒரத்தநாடு, புதூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**


மனிதகுலம் என்றென்றும் மார்க்சை நினைக்கும் என்ற தலைப்பில் நீ சு பெருமாள் எழுதியுள்ள கட்டுரையில் மனிதகுலம் இருக்கும் வரையில் மார்க்ஸ் பெயர் நிலைத்து நிற்கும் என்று மார்க்சின் இரங்கல் கூட்டத்தில் ஏங்கல்ஸ் பேசியதை மேற்கோள் காட்டியிருப்பது சிறப்பாகும். சுழலும் உலகம் பகுதியில் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை கபளீகரம் செய்யும் ஏகாதிபத்தியம் என்ற தலைப்பில் வந்துள்ள செய்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.


– **எஸ் கணேசன்,** எமனேஸ்வரம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

மக்கள் தீர்ப்பு யார் பக்கம்? இரா. முத்தரசன் அவர்களின் கடிதத்தில் , "மக்கள் தீர்ப்பு பாஜக விற்கு ஆதரவாக இல்லை மாறாக எதிர்க்கட்சிகளுக்கு உரிய முறையில் தண்டனை வழங்கி உள்ளார்கள் என்ற பேருண்மையை புரிந்துகொள்ள வேண்டும்" என்று தெளிவாக விளக்கி இருக்கிறார்.

– **கீ சு குமார்,** சென்னை



## ஏஐடியூசி கட்டட தொழிலாளர்கள் சங்க கொடியேற்று விழா

மதுரை அழகர்கோவில் ரோடு கடச்சனேந்தலில் ஏஐடியூசி கட்டட தொழிலாளர்கள் சங்க கிளை அமைப்பு கூட்டம், கொடியேற்று விழாவுடன் துவங்கியது.

மதுரை மாவட்ட கட்டட சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் கு. வெள்ளைப்பாண்டி சங்க கொடியை ஏற்றி வைக்க, மாவட்ட தலைவர் மா.இருளாண்டி சங்கத்தின் தகவல் பலகையினை திறந்து வைத்தார்.

கடச்சனேந்தல் கிளை செயலாளராக காதை.கண்ணன், மற்றும் நிர்வாகிகளாக மகாமுனி, செல்வம் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான கட்டட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.




## கைத்தறி ஜவுளிக்கு ஜிஎஸ்டி வரியை முழுமையாக நீக்குக!

### நெசவுத் தொழிலாளர் சம்மேளனம் தீர்மானம்

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பிஎம்ஆர் முத்து மகால் கு.பழனிச்சாமி அரங்கத்தில், ஏஐடியுசி தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளன பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. மாநில தலைவர் ஜி.மணிமூர்த்தி தலைமை வகித்தார். கே.சுந்தர்ராஜன் ஏஐடியூசி கொடியை ஏற்றிவைத்தார். மாநில பொதுச்செயலாளர் எஸ்.பி.ராதா வேலை அறிக்கையை தாக்கல் செய்து பேசினார். சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம் எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், சம்மேளன துணை செயலாளர் என்.எஸ்.பெருமாள், ஏஐடியுசி அமைப்பு செயலாளர் வி.இரவி, மாவட்ட செயலாளர் முத்துமாரி ஆகியோர் பேசினார்கள். கைத்தறி வளர்ச்சி மாநாட்டை ஜுன் மாதம் நடத்த திட்டமிடப்பட்டது. நூல் , பட்டு நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், கதருக்கு ஜிஎஸ்டி வரியை நீக்கியதுபோல் கைத்தறி ஜவுளிக்கும் ஜிஎஸ்டி வரியை நீக்க ஒன்றிய அரசை தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும், நீண்ட காலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருக்கும் கூலியை திருத்தி அமைத்து அகவிலை பணியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து 50 சதவீத ஊதியம் உயர்த்த வேண்டும். ஓய்வூதியம் ரூ3000 வழங்க வேண்டும். நெசவாளர் கூட்டுறவு சங்க மேலான்மை இயக்குநர்களை திரும்ப அழைத்து தேர்வு செய்யப்படட நிர்வாகிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும், விசைத்தறி ,கைத்தறி தொழிலாளர்கள் கூலியை சமமாக ஆக்கப்பட வேண்டும், கலைஞர் ஆட்சியில் நெசவாளர் நல வாரியம் அமைத்தது போல் தற்போதும் அமைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. வேலுச்சாமி நன்றி கூறினார்.

## சாலைகளை சீரமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கோவை பீளமேடு பகுதியில் உள்ளது தண்ணீர் பந்தல் காலனி. இந்த தண்ணீர் பந்தல் வழியாக விளாங்குறிச்சி வரை செல்லும் விளாங்குறிச்சி சாலையை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சூயஸ் நிறுவனம், குடிநீர் குழாய்கள் பறிப்பதற்காக தோண்டி சேதப்படுத்தியது.

ஆனால் பல மாதங்கள் ஆகியும் தோண்டி சேதப்படுத்தப்பட்ட சாலை மறுசீரமைப்பு செய்யப்படவில்லை. இதனால் இந்த சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் உயிரிழப்புகளும் ஏற்படுகிறது. இந்த சாலையில் நடந்து சென்ற பெரியவர் மீது லாரி மோதியதில் உயிரிழந்தார்.

இதை அடுத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் திரண்டு இந்த சாலையை சீரமைக்கவும், உயிரிழந்த முதியவர் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கவும் வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு மண்டல செயலாளர் மு.வ. கல்யாண சுந்தரம் தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம் கண்டன உரை வழங்கினார்.

இதில் கிழக்கு மண்டல பொருளாளர் சி.ஏ.வேலுச்சாமி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜி.நாராயணசாமி, மற்றும் எஸ்.பி. தியாகராஜன், கே.சி.மூர்த்தி, வழக்கறிஞர் பி. குணசேகரன், ஜி.பி.சக்திவேல், பி.செல்வராஜ், என்.நடராஜ், என்.விக்னேஸ்வரி, நீல்ராஜ், சுப்பிரமணியம், ஜனசக்தி ஏ.பி.மணிபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல துறையில்

# 5 ஆண்டுகளில் ரூ.927 கோடி அரசிடம் திருப்பி ஒப்படைப்பு

### தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் தகவல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 5 ஆண்டுகளில் ரூ.927 கோடி பயன்படுத்தப்படாமல் அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் தெரியவந்துள்ளது.

2022 – 2023 நிதி ஆண்டுக்கான தமிழக பட்ஜெட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ரூ.4,281 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று ஆண்டுதோறும் அறிவிக்கப்படும் பட்ஜெட்டில் ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கப்படுகிறது.

ஆனால் அவ்வாறு ஒதுக்கப்படும் நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறதா என்பது மக்களுக்கு தெரிவிக்கப்படுவது இல்லை.

மதுரை ஊமச்சிக்குளத்தைச் சேர்ந்த கார்த்திக், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் கடந்த 2011–2012 முதல் 2020–2021 நிதி ஆண்டுகள் வரையிலான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினங்களின் விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கேட்டிருந்தார்.

அதில் கிடைத்த பதிலின்படி தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.927 கோடி செலவு செய்யப்படாமல் அரசிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பாக கார்த்திக் கூறியதாவது: 2016 –2017 முதல் 2020–2021 வரையிலான 5 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு தமிழக அரசு ரூ.15,192 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதில் ரூ.14,265 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதம் உள்ள ரூ.927 கோடி பயன்படுத்தப்படாமல் அரசிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 2020–2021ல் மட்டும் இத்துறைக்கு ரூ.3,552 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுஉள்ளது. அதில் திட்டங்களுக்கு செலவு செய்ததுபோக ரூ.249 கோடியே 67 லட்சம் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சாதி ரீதியான வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோர் உரிய நிவாரண நிதி கிடைக்காமல் பல ஆண்டுகளாக சிரமப்பட்டு வருகின்றனர். ஆதிதிராவிடர் மக்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, குடியிருப்பு பகுதிகளில் ஏற்படுத்த வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் உள்ளன.

இந்நிலையில், 5 ஆண்டுகளில் ரூ.927 கோடி நிதி பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. நடப்பு நிதி ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.4,281 கோடியை முழுமையாக செலவிடப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும், திருப்பி ஒப்படைக்கப்பட்ட ரூ.927 கோடியை மீண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆயங்குடி கிராமத்தில் புதிய கிளை துவக்க விழா

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆயங்குடி கிராமத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புதிய கிளை துவக்க விழா கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் சீனி முருகையன், அம்மாப்பேட்டை ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி கட்சி கொடியை ஏற்றி வைத்தார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கோ.சக்திவேல், அரசு பணியாளர் சங்க மாநில துணைத்தலைவர் தி.திருநாவுக்கரசு, பட்டுக்கோட்டை ஒன்றிய துணைச்செயலாளர் பூபேஷ், ஒன்றிய நிர்வாகிகள் வாசு. இளையராஜா, பழனிவேல், சோழபுரம் கிளை செயலாளர் மா.மணிகண்டன் மற்றும் கிளை தோழர்கள் பங்கேற்றனர்.

## ஏஐடியூசி போக்குவரத்து ஓய்வூதியர் சங்கம் அறிவித்த தொடர் உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் சுமார் 85 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களின் குடும்ப உறுப்பினர்களாக பல லட்சம் பேர் உள்ளனர். இவர்களுக்கு அரசு பென்சன் கிடையாது. டிரஸ்ட் ஓய்வூதியம் மட்டும் தான் நடைமுறையில் உள்ளது. இவர்களுக்கு கிடைக்கும் சொற்ப ஓய்வூதியத்தை கொண்டு குடும்பத்தை நடத்த இயலாத நிலையில் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு பழைய, புதிய அகவிலைப்படி உயர்வு கடந்த 2016 முதல் அறிவிக்கப்படாமல் 6 வருடமாக நிலுவையில் உள்ளதை உடன் அறிவிக்கவும், திமுக தேர்தல்கால வாக்குறுதி அடிப்படையில் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்தவும் வலியுறுத்தி கும்பகோணம் அரசு போக்குவரத்து கழக ஏஐடியூசி ஓய்வூதியர் தொழிற்சங்கம் சார்பில் மார்ச் 22ஆம் தேதி முதல் தொடர் உண்ணாவிரத போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பின் மீது வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் தலைமையில் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் சந்திரா, அரசு விரைவு போக்குவரத்துக் கழக கிளை மேலாளர் எஸ்.பெருமாள், போக்குவரத்து சங்க மாநில துணைத் தலைவர் துரை.மதிவாணன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச்செயலாளர் பி.அப்பாத்துரை, துணை தலைவர் எஸ்.மனோகரன் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து ஓய்வூதியர்களின் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர் மூலம் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு கொண்டு செல்கிறோம் என்று வட்டாட்சியர் உறுதிமொழி அளித்த அடிப்படையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைக்கின்றோம் என்று பேச்சுவார்த்தையில் பங்கேற்ற ஏஐடியூசி ஓய்வூதியர் தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## விபத்து மரண நிதி உதவியை ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்குக!

### கட்டடத் தொழிலாளர் சங்க கிளை கூட்டத்தில் தீர்மானம்

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள பள்ளக்காடு கிளை கூட்டம் ஆர்.எஸ்.ராணி தலைமையில் பள்ளக்காட்டில் நடைபெற்றது. சிவன் கோயில் தெரு கிளை கூட்டம் பாப்பாத்தி தலைமையில் நடைபெற்றது. நாடார்தெரு கிளை கூட்டம் டி.நிர்மலா தலைமையில் நடைபெற்றது.

புதுத்தெரு கிளை கூட்டம் எம். மருதம்பாள் தலைமையில் நடைபெற்றது.

வீரம்மாள் கோயில் தோப்பு கிளை கூட்டம் எல்.சாந்தலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. ஜோதி நகர் கிளை கூட்டம் எஸ். முத்தழகு தலைமையில் ஜோதிநகரில் நடைபெற்றது.

தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் திருமண உதவி தொகை ரூ.1 லட்சமாக உயர்த்தி வழங்க கோரியும்,

பெண்களுக்கு 50 வயதிலும் ஆண்களுக்கு 55 வயதிலும் மாதா மாதம் ரூ. 6 ஆயிரம் ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும், இயற்கை மரண நிதி உதவியாக ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும், விபத்து மரண நிதி உதவியாக ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மணிகண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துலெட்சுமி, விசுவநாதன், வியாகுலமேரி, விஜயா, செல்வி, தனலட்சுமி, கோமதி, ராஜலட்சுமி, ரஷியாபேகம், பல்கீஸ்பானு, ஹேமலதா, ராதா, ஜான்சன், மாரியம்மாள், சுமித்ரா, முத்துமாரி, மீனாட்சி உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

## ஊராட்சி தூய்மைப் பணியாளர் பாதுகாப்பு சங்க கிளை கூட்டம்

ஏ ஐ டி யு சி ஊராட்சி தூய்மைப் பணி யாளர் பாதுகாப்பு சங்கம் சோமரசம்பேட்டை கிளை கூட்டம் செயலாளர் ஜெ.நதியா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தூய்மைப் பணியாளர் சங்க தலைவர் எம்.ஆர். முருகன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஏஐடியூசிகட்டட சங்க ஒன்றிய பொருளாளர் எஸ்.முத்தழகு, தூய்மைப் பணியாளர் நாச்சிகுறிச்சி தலைவர் சி.ஜெயபால், சோம ரசம்பேட்டை துணைத் தலைவர் எஸ்.நதியா பொருளாளர் எஸ். உமாபதி, துணைச் செயலாளர் பி. ஜோதிமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தூய்மை பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், தூய்மைப் பணியாளருக்கு அடிப்படை சம்பளமாக ரூ.18 ஆயி ரம் வழங்க வேண்டும், தூய்மை பணியாளர்களுக்கு ஓய்வு ஊதியம் மாத மாதம் ரூ.6000 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஆசிஷ் மிஸ்ராவுக்கு கொடுத்த பிணையை ரத்து செய்ய வேண்டும்

## ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஆர்ப்பாட்டம்



உத்தரப்பிரதேசம் லக்கிம்பூர் கேரியில் விவசாயிகளை படுகொலை செய்த மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா அவரது மகன் ஆசிஷ்மிஸ்ராவுக்கு கொடுத்த பிணையை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று நாடு முழுவதும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

**தஞ்சாவூர்:** தஞ்சை ரயிலடி முன்பு ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாநில செயற்குழு உறுப்பினர் காளியப்பன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என் வி.கண்ணன், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் பி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி தாளாண்மை உழவர் இயக்கத்தின் நிறுவனர் பொறியாளர் கோ.திருநாவுக்கரசு, சமவெளி விவசாயிகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பொறியாளர். சு.பழனிராஜன், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் தேசிய குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் சாமி. நடராஜன் ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து நிறைவுரை யாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி.கிருஷ்ணன், மாவட்ட குழு உறுப்பினர் வெ.சேவையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




**திருமங்கலம்:** மதுரை திருமங்கலம் தாலுகா அலுவலகம் முன்பு மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் எஸ்.கே.எம் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி.சந்தானம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், பல்வேறு அமைப்புகள், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# மார்ச் 29-ல் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பாதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு அரசு, சென்னை கிண்டியில் 1000 படுக்கைகளுடன் கூடிய பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை உருவாக்குவது வரவேற்புக்குரியது. பாராட்டுக்குரியது.

இது தமிழ்நாட்டு மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உலகின் பல்வேறு நாடுகளில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரித்து வருகிறது. ஐரோப்பிய நாடுகள் தென் கொரியா, ஹாங்காங், சீனா போன்ற நாடுகளிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் கொரோனா தொற்று அதிகரித்து வருகிறது.

கொரோனா பரவல் குறித்து அலட்சியம் காட்டக் கூடாது என உலக நல நிறுவனமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவில் கொரோனா நான்காவது அலை ஏற்படலாம் என்று கான்பூர் ஐ.ஐ.டி மாணவர்களின் ஆய்வு கூறுகிறது. தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோர் கொரோனா நான்காவது அலை ஏற்படலாம் என எச்சரித்துள்ளனர்.

அனைவரும் முகக் கவசம் அணிவதை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளனர்.

இத்தகைய சூழலில் கொரோனா நான்காவது அலை ஏற்பட்டாலும், அதை எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாடு அரசு தனது மருத்துவமனைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்திட வேண்டும். தமிழகத்தில் இன்னும் 55 லட்சம் பேர் முதல் தவணை தடுப்பூசியும், 1.2 கோடி பேர் இரண்டாவது தவணை தடுப்பூசியும் போட வேண்டியிருக்கிறது. அது மட்டுமின்றி, சிறார்களுக்கான தடுப்பூசி, பூஸ்டர் டோஸ் தடுப்பூசி வழங்கும் பணி இருக்கிறது.

நான்காவது அலை ஏற்படுகிறதா? எனக் கண்காணிக்க கொரோனா பரிசோதனைகளும் தினந்தோறும் செய்யவேண் டியுள்ளது. கொரோனா தடுப்பு முறைகள் மற்றும் தடுப்பூசிக் குறித்த விழிப்புணர்வை வழங்க வேண்டியுள்ளது.

கொரானா தடுப்பு, கொரோனா சிகிச்சை, கொரோனா தடுப்பூசி வழங்குவதில் நல்ல அனுபவம் பெற்ற இம்மருத்துவப் பணியாளர்களின் சேவை இந்த நேரத்தில் அவசியப்படுகிறது.

இச்சூழலில் தமிழக அரசு மருத்துவமனைகளில் பணி புரியும் தற்காலிக மற்றும் ஒப்பந்த ஊழியர்களை, மருத்துவர்களை, செவிலியர்களை பணி நீக்கம் செய்வது சரியல்ல.அது மக்கள் நலனுக்கு எதிரானது. கொரோனா காலத்தில் நியமிக்கப்பட்ட மினிகிளினிக் பல் நோக்கு மருத்துவப் பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் இதர பணியாளர்களையும், கோவிட் பணிக்காக நியமிக்கப்பட்ட மருத்துவர்களையும், முதுநிலை மருத்துப்படிப்பை முடித்த மருத்துவர்களையும் இம்மாத இறுதியில் பணி நீக்கம் செய்திட தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது அதிர்ச்சி அளிக்கிறது. அத்தகைய முயற்சிகளை உடனடியாகக் கைவிட வேண்டும்.

கொரோனா பரவல் உச்சத்தில் இருந்த காலக் கட்டத்தில், கொரோனா பணியில் சேர பலரும் தயங்கிய நேரத்தில், இந்த மருத்துவப் பணியாளர்களும், மருத்துவர்களும், செவிலியர்களும் தான் தங்கள் உயிரையும் துச்சமென கருதி, அர்ப்பணிப்பு உணர்வோடு மருத்துவப் பணியில் சேர்ந்தனர்.

இதை மனதில் கொண்டு, அவர்களது சேவையை மதித்து, அவர்களுக்கு பணி நீட்டிப்பும், பணிப்பாதுகாப்பும் மனித்தநேய அடிப்படையில் வழங்கிட வேண்டும்.

அதே போல், ஏற்கனவே எம்.ஆர்.பி. தேர்வில் தேர்ச்சி பெற்ற ஏறத்தாழ 120 மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில், கொரோனா முதல் அலை பரவிய காலம் தொட்டே, பல மாதங்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

எம்.ஆர்.பி. தேர்வில் தேர்ச்சி பெற்று தமிழக அரசு மருத்துவமனைகளில் தற்காலிகமாக கொரானா பணி ஆற்றிவரும் அத்தகைய மருத்துவர்களுக்கு, உடனடியாக சான்றிதழ் சரிபார்ப்பை மேற்கொண்டு பணி நிரத்தரம் வழங்கிட தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

“அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் வேலையின்மை பிரச்ச னைக்கு தீர்வு காண முயல்வேன்.அனைவருக்கும் அவரவர் படிப்புக்கேற்ற, தகுதிக்கேற்ற வேலை என்பது அரசின் லட்சியம் “என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ள நிலையில், தி.மு.க தேர்தல் அறிக்கையில், “ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் மருத்துவர்கள் செவிலியர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கப்படும்“ என உறுதி மொழி அளித்துள்ள நிலையில், மருத்துவத் துறை பணியாளர்கள் பணி நீக்கம் என்பது சரியான நடவ டிக்கையாக அமையாது, என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 29.03.2022 காலை சென்னையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# கு.பார்வதிஅம்மையார் மறைவு



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.ராஜா அவர்களின் தாயாரும், கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் சு.தமிழ்ச்செல்வி அவர்களின் மாமியாருமான கு.பார்வதி அம்மையார் அவர்கள் மார்ச் 16 அன்று இயற்கை எய்தினார். கொத்தமங்கலம் ஊராட்சி, கடியாச்சேரி அவரது கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்ட செயலாளர் வை.சிவபுண்ணியம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் வை.செல்வராஜ், மாநிலகட்டுப்பாட்டுகுழு தலைவர் எம்.வையாபுரி, சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாநிலக்குழு உறுப்பினர் கே.உலகநாதன், மாவட்ட துணைசெயலாளர் இரெ.ஞானமோகன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினரும், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியபெருந்தலைவருமான அ.பாஸ்கர், கோட்டூர் ஒன்றிய பெருந்தலைவர் மணிமேகலை முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், தீன.கௌதமன், கே.பாலு, எம்.முருகேசன், முருகையன், செந்தில்நாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளையின் தலைவர்கள், தோழர்கள் அனைவரும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# மாதர் சங்க தோழியர் வசந்தா படத்திறப்பு

இந்திய தேசியமாதர் சம்மேளனத்தின் முன்னாள் மாவட்ட பொருளாளர், தஞ்சை மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தோழர் ஆர்.பக்கிரிசாமி அவர்களின் துணைவியார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சை மாநகர செயலாளர் ஆர் .பி. முத்துக்குமரன் அவர்களின் தாயார் வசந்தா உடல் நலக்குறைவு காரணமாக கடந்த மார்ச் 6 அன்று காலமானார். அன்னாரின் படத்திறப்பு தஞ்சாவூர் புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மருதம் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சாவூர் தெற்கு மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சாவூர் வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி முன்னிலை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட செயலாளர் வை.சிவபுண்ணியம் அவர்கள் வசந்தா திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்வில் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, குறள்நெறிச்செல்வர், முன்னாள் வணிகவரி துறை அமைச்சர் எஸ்.என்.எம். உபயதுல்லா, ஏஐடியுசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், காங்கிரஸ் நிர்வாகி வயலூர் எஸ். இராமநாதன், சிபிஐஎம் மாநகர செயலாளர் வடிவேலன், ,சிபிஐ நிர்வாகிகள் ஜி.கிருஷ்ணன், வீரமோகன், சீனி. முருகையன், இரா. இராமச்சந்திரன், செந்தில்குமார், ஆர்.எஸ்.பாலு, ஆம்பலாபட்டு கோ.சக்திவேல், பூபேஷ் குப்தா, மாதர் சங்க மாவட்ட தலைவர் தனசீலி, ஏஐடியூசி நிர்வாகிகள் தி.கோவிந்தராஜன், வெ.சேவையா, துரை.மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஏஐடியூசி கைத்தறி நெசவாளர் மாநில சம்மேளனம் ஆர்ப்பாட்டம்

ஏஐடியூசி கைத்தறி நெசவாளர் மாநில சம்மேளனத்தின் சார்பில் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் பரமக்குடி எமனேஸ்வரத்தில் கே.கே.கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது. கைத்தறி நெசவுத் தொழிலுக்கான கச்சாப் பொருட்களின் விலை உயர்வை மத்திய மாநில அரசுகள் கட்டுப் படுத்த வேண்டும். அறுபது வயது கடந்த நெசவாளர்கள் அனைவருக்கும் நிபந்தனையின்றி மாதம் தோறும் 3000 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும். கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தயாராகும் சேலைகளுக்கு அடக்க விலை முழுவதும் ரிபேட் வழங்க வேண்டும். கைத்தறியில் தயாராகும் சேலைகள் மற்றும் துணிகளுக்கு ஜி.எஸ்.டி.வரி விதிப்பை முற்றிலுமாக நீக்க வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இராமநாதபுரம் ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் என்.கே. ராஜன், கைத்தறி சம்மேளனத்தின் மாநில துணை செயலாளர் என்.எஸ். பெருமாள், மாவட்ட துணை செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன், ஜி.ஆர். ராமமூர்த்தி, எம்.பி.ருக்மாங்கதன், வி.கே.நாகராஜன், வி.ஆர். நாகநாதன் உள்ளிட்ட தோழர்கள் பேசினர். வி.என்.கணேசமூர்த்தி நன்றி கூறினார்.

# தாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்க வேண்டும்


## தாளவாடி மேற்கு ஒன்றிய மாநாடு தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தாளவாடி மேற்கு ஒன்றிய இரண்டாவது மாநாடு கிளாசிக் மகாலில் நடைபெற்றது. மாநாட்டிற்கு தாளவாடி நாராயணன்,சிக்கள்ளிஜெயம்மா,திகனாரை கோபால் ஆகியோர் தலைமை வகித்தனர். இநியக்கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.மோகன் குமார், மாநாட்டுக் கொடியினை ஏற்றிவைத்து, மாநாட்டை துவக்கிவைத்தார்.

ஒன்றியச் செயலாளர் எம்.மோகன் வேலை மற்றும் அமைப்பு நிலை அறிக்கையினை முன்வைத்துப் பேசினார். பழங்குடி மக்கள் சங்கத்தின் சட்ட ஆலோசகர் ,வழக்கறிஞர் செயராசு மாநாட்டினை வாழ்த்திப் பேசினார். மாநாட்டில், தாளவாடி மேற்கு ஒன்றிய செயலாளராக தாளவாடி.நாராயணன், துணைச் செயலாளர்களாக எரனஹள்ளி காளசாமி, திகனாரை டி.சி.கோபால், பொருளாளராக ரமேஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவ மனையை மாற்ற வேண்டும்.தாளவாடி மலைப்பகுதியில் அரசு புறம்போக்கு நிலங்களில் பயிரிட்டு வருவோருக்கு அரசு இலவச நிலப்பட்டாக்களை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கே.பி.எஸ்.மணி ஒரு போராளியின் வரலாறு

ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி அவர்களின் மீட்சிக்காக போராடிய ஒரு போராளியின் வாழ்க்கை சரிதமே பூவிழியன் எழுதிய கே பி எஸ் மணி ஒரு போராளியின் வாழ்க்கை வரலாறு என்னும் இந்த நூல். ஒரு சாதாரண ராணுவ வீரராக பணிக்கு சேர்ந்து அங்கு ஏற்பட்ட அவமதிப்புகளால் சோர்ந்து போகாமல், கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு உயரதிகாரியாக பணி உயர்வு பெற்று. பின்னர், ராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் வீரராக உயர்கிறார் கேபிஎஸ் மணி. இந்த ராணுவ பயிற்சி அனுபவத்துடன் மக்களை அநீதிக்கு எதிரான போர்க்களத்திற்கு அணி திரட்டுகிறார். தஞ்சை மாவட்டத்தில் சமூக அடக்குமுறைகளுக்கு, சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தில் முன் நிற்கிறார் கே பி எஸ் மணி,




இன்று நாம் போராடிக் கொண்டிருக்கிற உரிமைப் போராட்டம். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தலைமை பொறுப்பை இந்த மண்ணிலேயே பெற வேண்டும். எல்லா தளங்களிலும் பெற வேண்டும் என்பதுதான். அந்தத் தலைமை என்கிற பாத்திரம் இல்லாத காரணத்தினால் தான் இவன் கைகட்டி நின்று அங்கே போய் முடங்கி கிடக்கிறான் . எனவே அதிகாரத்தை நோக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் செல்ல வேண்டும் என ஆணித்தரமாக முழங்கியவர் கேபிஎஸ் மணி.

தாழ்த்தப்பட்ட மக்களின் பிணங்களை சாதி இந்துக்களின் தெரு வழியாக சுடுகாட்டிற்கு கொண்டு செல்லக்கூடாது என சாதி இந்துக்கள் தகராறில் ஈடுபட்ட போது, சாதி இந்துக்கள் சடலத்தை எங்கே மறிக் கிறார்களே அந்த இடத்திலேயே சடலத்தை தீயிட்டு கொளுத்துங்கள் என ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கட்டளையிட்டவர் கேபிஎஸ் மணி, தாழ்த்தப்பட்ட மக்களை கட்டிவைத்து அடித்தால் நாங்களும் கட்டி வைத்து அடிப்போம் என உரிமை முழக்கமிட்டவர்.

“நீ சிந்திக்க மறந்து விட்டு பார்ப்பான் அறிவாளி என்று சொல்லாதே, அவன் சிந்திக்கிறான் நீ சிந்திக்க மறந்து கொண்டிருக்கிறாய் அதனால் நீ சிந்திக்க தொடங்கு“ என ஒடுக்கப்பட்ட மக்களின் சிந்தனையை தூண்டுகிறார்.

இந்நூல் முழுவதும் ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்த கொடுமைகளும் அதற்கெதிராக கேபிஎஸ் மணி அவர்களின் போராட்டமும் இந்நூலில் அடங்கி இருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு நிலம் எப்படி அவசியமானது. அந்த நிலத்தை நாம் ஏன் பெற வேண்டும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். அவர் சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி இருந்தாலும்.அவரது பணி முழுமையும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவே இருந்துள்ளது என்பதை ஆணித்தரமாக பூவிழியன் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மறைக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட ஒரு மனிதனின் வாழ்க்கை போராட்ட வரலாறு ஆகவே இந்நூல் உள்ளது. இந்நூலை அனைவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும். **-இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : பூவிழியன்**
**வெளியீடு : கொதிப்பு வெளியீடு,**
**1அ, மனதிடல் தெரு, சீர்காழி – 609110**
**பக்கங்கள் : 294 விலை : ரூ.150**

## நூல் நயம்

# பாரதியின் அறிவியல் பார்வை

எட்டயபுரம் தந்த எரிமலை கவிஞன் பாரதி. அவன் தொடாத துறை இல்லை,பேசாத பொருள் இல்லை. அந்த மகத்தான கவிஞன் மகாகவி பாரதியின் அறிவியல் பார்வையை இந்நூலின் மூலமாக தமிழ் சமூகத்தின் முன் வைக்கிறார் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள்.

“மந்திரம் கற்போம்,வினைத் தந்திரம் கற்போம், வானை அளப்போம்,கடல் மீனை அளப்போம்,சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்“ என விஞ்ஞான தமிழில் விளையாடி மகிழ்ந்தவன் பாரதி. “காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம். கலை வளர்ப்போம்,கொல்லர் உலை வளர்ப்போம். ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம். உலக தொழில்கள் அனைத்தும் உவந்து செய்வோம் “நாட்டின்” வளர்ச்சிக்கு கலைகளும் முக்கியம். கொல்லர் உலைகளும் முக்கியம் என்பதை உலகுக்கு எடுத்துச் சொன்னவர் பாரதி.

தொழிலில் உயர்வு தாழ்வு பார்க்ககூடாது. செய்யும் தொழிலை திறனுடன் செய்பவர் யாரானாலும் மதிக்க வேண்டும். ஒரு சமுதாயம் தரமில்லாத தத்துவவாதியை தத்துவத்துறை உயர்ந்தது என்பதற்காக மதிக்கவும். தரம் நிறைந்த ஒரு சாக்கடை துப்புரவு தொழிலாளியை அத்தொழில் தாழ்ந்தது என்பதால் மதிக்கத் தவறவும் செய்யுமானால், அந்த நாட்டின் சாக்கடையும் நாறும், தத்துவமும் நாறும். இரண்டுமே சிறப்புறாது . உடல் உழைப்பின் மதிப்பை நாம் போற்ற வேண்டும்.




நாம் நாள்தோறும் மேலே செல்லச் செல்ல ‘புதிய செய்தி, புதிய புதிய யோசனை,புதிய புதிய உண்மை,புதிய புதிய இன்பம், தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும். சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் என்பவர் அதோடு விட்டாரா? இல்லை, சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம் என்கிறார். இன்றைக்கும் சாக்கடைக் குழியில் இறங்கி உயிரை விடும் மனிதர்களை நாம் கண்டு கொண்டுதான் உள்ளோம். இதற்கு ஒரு கருவியை ஏன் நமது விஞ்ஞானம் இன்னும் கண்டு தெளியவில்லை. பாரதிக்கு இருந்த தொலைநோக்கு பார்வை. பாரத புத்திரர்களுக்கு ஏன் இல்லை?

இதற்குத்தான் ‘வீடு தோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி,நாடு முற்றிலும் முள்ளன ஊர்கள், நகர்களெங்கும் பலப்பல பள்ளி’ ஏற்பட வேண்டும் என ஆசைப்பட்டான் பாரதி.

பயிற்றுப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும் என்றான் பாரதி. அந்த ஞான பாரதியின் அறிவியல் பார்வையை இந்நூலில் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் அருமையாக படம் பிடித்து காட்டியுள்ளார். அஞ்ஞான மூடர்கள் ஆட்சி செலுத்தும் காலத்தில் விஞ்ஞான பார்வை அவசியம் என்பதை அறிவோம். இந்நூலினை அனைவரும் வாங்கிப் படிக்கவும். **-சமரன்**

**நூலாசிரியர் : டாக்டர் வா செ. குழந்தைசாமி**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 96 விலை : ரூ.75**

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## உக்ரைன் போர்:

# போரை நிறுத்திடுக! – அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

ரஷ்யாஉக்ரைன் போர் தொடர்பான நிலைப்பாட்டை ஜோ பிடன் அரசாங்கம் மாற்றிக் கொள்ள மக்கள் வலியுறுத்த வேண்டும் என்று அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறது.

போர் ஒருபோதும் ஏற்கக்கூடிய தீர்வாகாது. எனவே, போர் கூடாது என்று நாம் உறுதியாக முழங்க வேண்டும். ஆகையால், படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று ரஷ்ய அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம். பொருளாதார தடைகளையும் முடிவுக்கு கொண்டு வரவேண்டும். நாடுகளின் எல்லைகளை மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

கடந்த சில வாரங்களாகவே, இராணுவ அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார தடைகள் நிலைமையை மேலும் மோசமாக்கி, அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்ததைப் போல, ஒரு வெளிப்படையான போருக்கு வித்திட்டது. உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

உக்ரைனைத் தங்களின் ராணுவ கூட்டணிக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் நேட்டோ அமைப்புகள் மேற்கொண்ட முயற்சிகள் தான் தற்போது பதற்றத்தை அதிகரித்துள்ளன. இந்த முயற்சிகளும், ராணுவ தளவாட வழங்கலும் இணைந்ததால் நெருக்கடியான நிலை மேலும் மோசமானது.

ரஷ்யாவின் ஆளும் தரப்பு அவர்களுக்கே உரித்தான தேசிய நலன்களை முன்வைப்பதும், போர் தீவிரம் அடைவதும் நிலைமையை மேலும் மோசமாக்கும்.

தற்போதைய போர் நெருக்கடி நீண்ட தொடர்ச்சி கொண்டது ஆகும். அதன் வரலாற்றுப் பின்புலத்தில் இரண்டாம் உலகப் போரின் முடிவு, பனிப்போர் மற்றும் நேட்டோ அமைப்பின் உருவாக்கம் ஆகியவை உள்ளடங்கும். ரஷ்யாவின் மேற்கு எல்லைப் பகுதிகளில் நேட்டோ மற்றும் அமெரிக்க ராணுவத் தளங்கள், படைகள் மற்றும் ஏவுகணைகள் நிலைநிறுத்தப்பட்டு தொடர்ந்து ரஷ்யாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதால் தான் தற்போது ராணுவ மோதல் நடைபெற்று வருகிறது.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக, லித்துவேனியா, போலந்து லாத்வியா, ருமேனியா மற்றும் இஸ்தோனியா ஆகிய நாடுகள் நேட்டோ போன்ற ராணுவ கூட்டணிக்கு இடமளித்தன. இந்தப் போக்கு, பனிப்போர் முடிவுற்ற பிறகு நேட்டோ கிழக்கு நோக்கி அதன் ஆதிக்கத்தை விரிவுபடுத்தாது என்ற நிலைப்பாட்டை முற்றிலும் மீறுவதாக உள்ளது.

நேட்டோவின் விரிவாக்கம் போலந்து, ஹங்கேரி மற்றும் செக் குடியரசோடு மட்டும் முடிந்துவிடவில்லை. 2004 ஆம் ஆண்டில் மேலும் ஏழு நாடுகளைச் சேர்த்துக் கொண்டது. 12 உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்த நேட்டோ அமைப்பில் தற்போது 28 நாடுகள் இடம்பெற்றுள்ளன. வருங்காலத்தில் ஜார்ஜியா, உக்ரைன், போஸ்னியா ஹெர்ஸிகோவினா போன்ற நாடுகளும் உறுப்பினர்களாக வேண்டும் என்று நேட்டோ ராணுவக் கூட்டணி எதிர்பார்க்கிறது.

உக்ரைன் நாட்டின் டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகளில் வாழ்ந்து வரும் 40 லட்சம் ரஷ்ய மக்களின் எதிர்காலம் குறித்த கேள்வியும் தற்போதைய நெருக்கடியில் நாம் கவனமாகப் பரிசீலிக்க வேண்டிய காரணி ஆகும். 2014 ஆம் ஆண்டில் அந்தப் பகுதி மக்களுக்கான தன்னாட்சி அதிகாரம் குறித்த ஒப்பந்தத்தை உக்ரைன் அரசாங்கம் ஒருபோதும் நடைமுறைப்படுத்தவில்லை.

2014 ஆம் ஆண்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் விக்டர் யானுகோவிச், அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை மூலமாக, அப்பொறுப்பில் இருந்து அகற்றப்பட்டார். அதனை இந்தப் பகுதி மக்கள் கடுமையாக எதிர்த்தனர். அந்த எதிர்ப்பு நடவடிக்கைக்காக அம்மக்கள் மீது அசோவ் படைப்பிரிவு **(AZOV Battalion)** தாக்குதல் நடத்தி கொன்று குவித்தது. இந்தப் படை உக்ரைனிய தேசியவாதிகளின் பண்டேரா பிரிவின் (நவீன நாஜி அமைப்பு) இராணுவ அமைப்பு ஆகும். இந்தப் படைப்பிரிவின் தாக்குதலில் சுமார் 14 ஆயிரம் நபர்கள் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பின்புலத்தைப் பற்றி ஜோ பிடன் அரசாங்கம் மற்றும் கார்ப்பரேட் ஊடகங்கள் இதுவரை எதுவும் பேசவில்லை; இனி பேசப் போவதுமில்லை. உக்ரைன் நெருக்கடி தொடர்பான அதன் நிலைப்பாட்டை அமெரிக்கா நிச்சயம் மாற்றியாக வேண்டும். நமது நாடு அரசியல் மற்றும் சமூக நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இந்தத் தருணத்தில் போர் வெறியைத் தூண்டுவது நெருக்கடி நிலையை மேலும் தீவிரமாக்கும்.

பருவகால மாற்றம், சுகாதார சேவை குறைபாடு, குறைவான ஊதியம் மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட இனவெறி போன்ற கடுமையான பிரச்சனைகளை நமது உழைக்கும் வர்க்கம் எதிர்கொண்டு வருகிறது. இது போன்ற சூழலில் பெரும் ராணுவத்திற்கும், ஆயுதங்களுக்கும், நேட்டோ அமைப்புக்கும் கோடிக்கணக்கான டாலர்களைச் செலவிடுவதன் மூலம் மேற்கண்ட பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது.

அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களான நாம், உலகம் முழுவதிலும் உள்ள சமாதான குழுக்களுடன் கரம் கோர்த்து ஒத்த குரலில் உரத்து முழங்குவோம்:

நேட்டோ விரிவாக்கம் கூடாது !

இராணுவப் படைகுவிப்பு கூடாது !

உக்ரைன் மீது போர் கூடாது !

ரஷ்யா மீது போர் கூடாது !

போரற்ற பொற்காலம் பிறக்கட்டும் ! பூமண்டலத்தின் வருங்காலம் அதனைச் சார்ந்தே அமையட்டும் !




2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா கிரிமியா பகுதியை இணைத்துக் கொண்டபோது, ரஷ்யாவுக்கு எவ்வித ராணுவ எதிர்ப்பும் இல்லை. எதிர்த் தாக்குதல் தொடுக்கும் அளவிற்கு, போருக்குத் தயார் நிலையில் இருந்த வீரர்களின் எண்ணிக்கை உக்ரைன் நாட்டு ராணுவத்திடம் போதுமானதாக இல்லை.

உக்ரைன் நாட்டின் டான்பாஸ் பகுதியில் இருந்த அரசாங்க கட்டடங்களை ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகள் கைப்பற்றிய போது, உக்ரைன் ராணுவத்தால் அந்தக் கலகத்தை அடக்க முடியாமல் போனது மீண்டும் நிரூபணம் ஆனது. இந்தப் பின்புலத்தில், 2014ஆம் ஆண்டு மே மாதத்தில் **azov** படைப்பிரிவு அமைக்கப்பெற்றது.

உக்ரைனில் அப்போது இயங்கிக் கொண்டிருந்த தீவிர வலதுசாரி, நவீன நாஜி குழுக்களில் இருந்து பெறப்பட்ட தன்னார்வலர்களைக் கொண்டு தொடங்கப்பட்ட ஒரு ராணுவ அலகு தான் அசோவ் படைப்பிரிவின் தோற்றுவாய் ஆகும்.

துடிப்பும், தீரமும் உடைய போர்வீரர்களைக் கொண்ட அஜாவ் படைப்பிரிவு, பிரிவினைவாதிகளிடம் இருந்து முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான 'மரியுபோல்' **(MARIUPOL)** நகரத்தை மீட்டது. இந்த இராணுவ வெற்றியைத் தொடர்ந்து,

2014ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் உக்ரைன் நாட்டின் தேசிய பாதுகாப்பு படையில் அசோவ் படைப்பிரிவு ஒருங்கிணைக்கப்பட்டது.

இந்தப் படைப்பிரிவின் இராணுவ சீருடையில் நாஜிக்களின் இலட்சினை இடம்பெற்றுள்ளது. அதன் வீரர்கள் நாஜிகளின் 'ஸ்வஸ்திக்' முத்திரைகளைத் தங்கள் உடல்களில் பொறித்துக் கொண்டது போன்ற புகைப்படங்களும் உள்ளன.

2016 ஆம் ஆண்டு இந்த படைப்பிரிவின் அரசியல் அணியான 'நேஷனல் கார்ப்ஸ்' கட்சி நிறுவப்பட்டபோது, கீவ் நகர வீதிகளில் அதன் உறுப்பினர்கள் நாஜிக்களைப் போலவே முஷ்டியை மடக்கிப் பேரணியாக அணி வகுத்துச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயத் தொழிலாளர்கள் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்

100 நாள் வேலையை 200 நாட்களாக உயர்த்தி தரவும், தினசரி கூலியாக ரூ.600 வழங்க வலியுறுத்தியும், இந்தத் திட்டப் பணியை பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களிலும் செயல்படுத்திட வேண்டியும், முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தை முறையாக செயல்படுத்த வேண்டியும், ரூ.6 லட்சம் திட்ட மதிப்பில் கான்கிரீட் வீடு கட்டித்தர வேண்டியும், அரசு புறம்போக்கு இடங்களில் குடியிருப்போருக்கு வீட்டு மனை பட்டா வழங்க வேண்டியும், 58 வயதுடைய விவசாய தொழிலாளர்களுக்கு நிபந்தனையின்றி ஒய்வூதியம் வழங்க வேண்டியும், இலவச மனைப்பட்டா கேட்டு 2018 ம் ஆண்டிலிருந்து விண்ணப்பம் கொடுத்த அனைவருக்கும் நிலம் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரியும் தமிழகம் முழுவதும் விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




**திருவாரூர்:** திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சங்கத்தின் மாநிலச் செயலாளர் என்.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், திருத்துறைப்பூண்டி சட்ட பேரவை உறுப்பினர் க.மாரிமுத்து, சங்கத்தின் மாவட்டசெயலாளர், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் ஆகியோர் தலைமை ஏற்று நடத்தினர்.

இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வை. சிவபுண்ணியம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் வை.செல்வராஜ், மாநிலக் குழு உறுப்பினர் கே.உலகநாதன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, வி.தொ.ச.,சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் கே.ராஜா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளையின் தலைவர்கள் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து கண்டன குரல் எழுப்பினர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் மாவட்டத் தலைவர் டி.கே.ராஜா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், மாவட்ட பொருளாளர் வி.சரவணன், மாவட்ட துணைத் தலைவர்கள் சி.சுப்பிரமணி, கே.வி.செங்கொடி செல்வன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.பி.குமார், கே. மதியழகன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் டி.துரை, கே. குமரேசன், விவசாய சங்கத் தலைவர் கே.ஆறுமுகம், சி.ராமகிருஷ்ணன், டி.லோகநாதன், ஏ.ஆதாம் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். பின்னர் சங்க தலைவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாய தொழிலாளர் சங்க மாநில நிர்வாககுழு உறுப்பினர் கே.எஸ்.அப்பாவு தலைமை தாங்கினார். கள்ளக்குறிச்சி வட்ட பொறுப்பாளர் ரீதா, வட்ட செயலாளர் முருகேசன் முன்னிலை வகித்தனர். ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கலியபெருமாள், மாவட்ட பொறுப்பாளர் சௌரிராஜன், மாதர் சங்க மாவட்ட செயலாளர் வளர்மதி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் வெங்கடேசன், தமிழ்நாடு விவசாய சங்கம் கஜேந்திரன், வட்டக்குழு மஞ்சையப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நகர செயலாளர் கருணாநிதி நன்றி கூறினார்.

**தருமபுரி:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு ஆர்ப்பாட்டம் நடத்தி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு சமர்பிக்கப்பட்டது. சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகளை விளக்கி சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் பேசினார். மற்றும் சங்க மாவட்ட துணை செயலாளர் ஜி பச்சாகவுன்டர், மாவட்ட துணை தலைவர்கள் ஜி ராஜகோபால், என் முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வெ பை மாதையன், எல் சி கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

**கரூர்:** தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் கரூர் மாவட்ட குழு சார்பில் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆர்.தங்கவேல் தலைமை தாங்கினார். சங்கத்தின் மாவட்டத் தலைவர் பி.பாலன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.மோகன்குமார், சங்கத்தின் மாவட்ட துணைச் செயலாளர் எம்.பி.செல்வம் ஆகியோர் பேசினர். சங்கத்தின் ஒன்றியச் செயலாளர்கள் கிருஷ்ணராயபுரம் எம்.ஆண்டியப்பன், க.பரமத்தி ஆர்.குப்புசாமி , தாந்தோனி எஸ்.செல்வம், ஒன்றியத் தலைவர் கிருஷ்ணராயபுரம் பி.மாணிக்கம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பொருளாதார மேம்பாடு, சமூக ஒருமைப்பாட்டிற்கு சாலை உள்கட்டமைப்பு மிகவும் இன்றியமையாதது

### மக்களவையில் எம்.செல்வராசு எம்.பி. பேச்சு

நாடாளுமன்ற மக்களவையில் 21.03.2022 அன்று சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் தோழர் எம்.செல்வராசு எம்.பி. பேசியது வருமாறு:

மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்று பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மக்களவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக ஒருமைப்பாட்டிற்கு சாலை உள்கட்டமைப்பு மிகவும் இன்றியமையாததாகும். இந்திய போக்குவரத்துத்துறையில் சாலை வழிப் போக்குவரத்து பிரதான இடத்தை வகித்து வருகிறது. நாட்டின் ரயில், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகளுக்கு உதவிகரமாக சாலைப் போக்குவரத்து அமைந்துள்ளது. நாட்டின் சாலைப் போக்குவரத்து உள்கட்டமைப்பு இணைப்புகளை நிர்மாணிப்பதில் தேசிய நெடுஞ்சாலை மிக முக்கியமான பங்காற்றுகிறது. பாரத்மாலா பாரியோஜனா போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் உள்பட தேசிய நெடுஞ்சாலைகள் கட்டுமானத்திற்கு சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைத்துறை அமைச்சகம் பொறுப்பாகும்.

தமிழ்நாட்டில் சுமார் 25 தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. எனது தொகுதியான நாகப்பட்டினத்தில் பெரிய துறைமுகம் எதுவும் இல்லை. ஆற்காட்டுத்துறை, நம்பியார் குப்பம், நாகூர், பட்டினசேரி, சாமந்தான்பேட்டை ஆகி ய மீன்பிடி துறைமுகங்களைக் கொண்ட, 100 கிலோ மீட்ட கொண்ட கடற்கரை பகுதியாகும். மீனவ மக்களின் வாழ்வாதாரம் வளம் பெற அந்தப் பகுதியல் உள்ள மீன்பிடி துறைமுகங்களுக்கிடையே போக்குவரத்து வசதிகளை மேம்படுத்திட பாரத்மாலா பாரியோஜனா திட்டத்தின் கீழ் அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகோள் விடுக்கிறேன்.

எனது தொகுதியில் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் பல்வேறு சாலைத்திட்டப் பணிகள் நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. பொதுமக்கள் சிரமமின்றி பயணித்திட கிடப்பில் உள்ள சாலைத்திட்டப் பணிகளை விரைந்து முடித்திட அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

தஞ்சாவூர் – நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை 83 சாலைப் பணிகள் 2017 ஆம் ஆண்டு தொடங்கியது. பணிகள் நடைபெறும் சாலையின் நீளம் 66 கிலோ மீட்டர் மற்றும் புறவழிச்சாலையின் நீளம் 40 கிலோ மீட்டர் ஆகும். இந்தப் பணிகள் நிறைவடையாமல் தற்போது வரை கிடப்பில் உள்ளன. இந்தப் பணி நிறைவடைய மாண்புமிகு அமைச்சர் சிறப்பு கவனம் செலுத்தி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

155 கிலோ மீட்டர் நீளம் உள்ள நாகப்பட்டினம் – விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை 45–ஏ, திட்டப்பணிகள் மந்த கதியில் நடைபெற்று வருகின்றன. விக்கிரவாண்டி – தஞ்சாவூர் இடையேயான தேசிய நெடுஞ்சாலை 45–சி, பணிகளும் கிடப்பில் உள்ளன. 333 கிலோ மீட்டர் நீளமுள்ள நாகப்பட்டினம் – கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 45–ஏ பணிகளைப் பொறுத்தவரை, திட்டப் பணிகளுக்கான விரிவான அறிக்கை தயாரிப்பு நிலையில்தான் உள்ளது. எனவே இந்தப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்திட வேண்டும்.

திருச்சியிலிருந்து வேதாரண்யம் செல்லும் சாலையை அரசாங்கம் தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்தது. ஆனால், இதுவரையில் அதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. திட்டப்பணிகள் சர்வே எடுக்கும் நிலை யில்தான் உள்ளன. வரலாற்றுச் சிறப்புமிக்க உப்பு சத்தியாகிரகத்தை இந்த சாலை வழியில்தான் ராஜாஜி மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் கிழக்கு கடற்கரை சாலை மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.136 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதற்காக அவருக்கு என் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை திட்டப் பணிகளை அவுட் சோர்ஸ் செய்யும் முறைக்கு கடுமையான எதிர்ப்பை பதிவு செய்கிறேன். கடைநிலை ஊழியர்களை நிரந்த ஊழியர்களாக்கி இப்பணிகளுக்கு அவர்களது உழைப்பை பயன்படுத்தலாம். பயணிப்போரின் பாதுகாப்பு கருதியும், சட்டத்தை மீறுபவர்களை அடையாளம் காணவும், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதை பரிசீலிக்க வேண்டும். தேசிய நெடுஞ்சாலைகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். அந்த சுற்று வட்டாரப் பகுதி மக்களின் வாகனங்களுக்கு சுங்கக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

இவ்வாறு எம்.செல்வராசு எம்.பி. பேசினார்.

ஏழை எளிய மக்களைக் கடுமையாக பாதிக்கக்கூடிய

## பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெறுக!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்



பெட்ரோலியப் பொருட்களின் கடும் விலை உயர்வை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பதுடன், விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இது குறித்து கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு:

அனைத்து பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வை, குறிப்பாக சமையல் எரிவாயு 50 ரூபாய் உயர்த்தப்பட்டு இருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி இரண்டு வாரங்கள் முடிவதற்குள் மார்ச் 22, 2002 அன்று ஆர்.எஸ்.எஸ்பா.ஜ.க அரசாங்கம் விலை உயர்வை அறிவித்து இருப்பது ஆச்சரியம் அளிப்பதாக இல்லை. இந்த விலை உயர்வு காரணமாக மார்ச் 22, 2022 முதல் ஒரு சமையல் எரிவாயு உருளையின் விலை ரூபாய் 949.50 ஆக அதிகரிக்கும். பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் சில்லறை விற்பனை விலை டெல்லியில் 80 காசுகள் அதிகரிக்கப்பட்டு, பெட்ரோல் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 96.21, டீசல் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 87.47 என்று உயர்ந்துள்ளது. எண்ணெய் நிறுவனங்கள் மார்ச் 20 அன்று பல்க் டீசல் விலையை லிட்டருக்கு ரூபாய் 25 உயர்த்தி இருப்பதால், பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் மேலும் உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விலை உயர்வு காரணமாக, ஏழை எளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட இதர அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் உயரும். எனவே, துன்பங்களை எதிர்கொண்டு வரும் வெகுமக்களை மேலும் பாதிக்கக்கூடிய இந்த விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இவ்வாறு தேசிய செயற்குழு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 26.03.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



தமிழக விவசாயிகளின்
விடிவெள்ளி களப்போராளி
# ஆதிமூலம்!

செங்கொடி காத்த
வீராங்கனை
# சிகப்பியம்மாள்!



# நினைவு மணி மண்டபம் திறப்பு விழா!






தோழர் **இரா. முத்தரசன்**
மாநிலச் செயலாளர், சிபிஐ

தோழர் **சி. மகேந்திரன்**
தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர், சிபிஐ

தோழர் **எம். கண்ணகி**
மாவட்டச் செயலாளர், சிபிஐ

தோழர் **தி. இராமசாமி** எக்ஸ்.எம்.எல்.ஏ.

தோழர் **பொ. லிங்கம்** எக்ஸ்.எம்.பி.

மாண்புமிகு **கே. ஆர்.பெரியகருப்பன்**
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

தோழர் **எஸ். குணசேகரன்** எக்ஸ்.எம்.எல்.ஏ.
தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர்

தோழர் **கே. தங்கமணி** எக்ஸ்.எம்.எல்.ஏ.
மாநிலத் தலைவர், வி.தொ.ச.

தோழர் **வி. அழகிரிசாமி** எக்ஸ்.எம்.பி.

தோழர் **எஸ். முருகபூபதி** பி.காம்.பி.எல்.,

நினைவு மண்டப திறப்பு விழாவிற்கு வருகை தரும்
**அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம் !**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
**சிவகங்கை மாவட்டக்குழு**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.